ISSN 1391-7501

# உண்மை உதயம் طلوع الحق

உண்மை - 55 ஜனவரி/ முஹர்ரம் UNMAI UDHAYAM 2010/1431 உதயம் - 146

தமிழ் பேசும் முஸ்லிம்களின் இஸ்லாமிய மாத இதழ் - ISLAMIC TAMIL MONTHLY



## இலங்கையில் வீசும் அரசியல் சூறாவளியில் அடித்துச் செல்லப்படுவது யார்?

## குழந்தைகளின் ஆளுமை விருத்திக்கு......

40/=

ஜமாஅத் அன்ஸாரிஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யா [ JASM ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்பீகுஷ் ஷரீஆ பெண்கள் அரபிக் கல்லூரி

## புதிய மாணவிகளுக்கான அனுமதி கோரல்

***தத்பீகுஷ் ஷரீஆ பெண்கள் அரபிக் கல்லூரி 2010ம் ஆண்டுக்கான புதிய மாணவிகளை வேண்டுகின்றது. எனவே கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இக்கல்லூரியில் சேர்வதற்கு விண்ணப்பிக்கலாம்.***

01. 18 வயதிற்குறப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

02. 2009ம் ஆண்டில் க.பொ.த.சா. பரீட்சைக்கு தோற்றுபவராக இருத்தல். அல்லது 2008, 2007 க.பொ.த.சா. பரீட்சையில் தோற்றி நல்லமுறையில் சித்தியடைந்தவராக இருத்தல்.

எனவே இக்கல்லூரியில் சேரவிரும்பும் மாணவிகள் தங்கள் பெயர், முகவரி, தகைமைகளைக் குறிப்பிட்டு எதிர்வரும் 25.01.2010ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

அனுப்பவேண்டிய முகவரி

**Ththabeeqush Saree'ah Ladies Arabic College**
Muthaliyar Road Akkaraipattu – 04

மேலதிக விபரங்களுக்கு:
0774604567, 0714469101,0672277722,0673672290,0714899376
அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை உதயம்

UNMAI UDAYAM

உண்மை - 55, உதயம் - 146

ஜனவரி 2010

முஹர்ரம் 1431

ISSN 1391-7501



ஆசிரியர்

S. H. M. இஸ்மாயில் (ஸலபி)
B.A (Hons)

துணை ஆசிரியர்

S. S. ரமழான் (ஸலபி)
B.A (Hons), M.A(Cey)

வெளியீட்டு ஆலோசனைக் குழு

அஷ்ஷெய்க் N. P. M. அபூபக்கர் சித்தீக் (மதனி)

A. L. கலீலுர் ரஹ்மான் M.A (Cey)

M. M. ஹிக்மத்துல்லாஹ் B.Sc.(Cey)

மௌலவி செய்னுடீன் S. பரீட்

அஷ்ஷெய்க் N. P. ஜுனைத் (காஸிமி)
B.A (Hons)(Madeena)



**வெளியீடு**

Jamaath Ansaris Sunnathil Mohammadiyya



Head Office :
Paragahadeniya, We-uda (60080)
Sri Lanka.
Tel : 037 - 2299412, Fax : 037 - 2299244
E-mail : jasm@sltnet.lk
unmaiudayam@gmail.com


**சந்தா விபரம்**

| | | | |
|---|---|---|---|
| தனிப்பிரதி - | 40/- | தபால் மூலம் - | 50/- |
| ஆண்டுச் சந்தா - | 600/- | தெற்காசிய நாடுகள் - | 1100/- |
| ஐரோப்பிய நாடுகள் - | 1500/- | மத்தியகிழக்கு நாடுகள் - | 1400/- |
| ஐக்கிய அமெரிக்க நாடுகள் - | 1800/- | | |

## இந்த இதழில்...

ஆசிரியர் பக்கம்:


இலங்கையில் வீசும் அரசியல்..... 02

அல்குர்ஆன் விளக்கவுரை 06

அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்... 08

மூஸா நபியும் மலக்குல்.......... 12

போலி ஹதீஸ்களும் சமூகத்தில்....... 17

பெண்கள் பள்ளியில் தொழுகை....... 22

இயக்க வெறியும் பிடிவாதமும் 27

பொறுமை 30

குழந்தைகளின் ஆளுமை..... 33

சிறுவர் உதயம் 38

ஹிஜாபை அசிங்கப்படுத்தாதீர்கள் 40

வெட்கத்தை விட்டும் வேதனையுடன் 43

உள்ளம் அமைதி பெற 45

நிர்க்கதியான கொலையாளிகளும்....... 49


هذه مجلة شهرية إسلامية باللغة التاملية ، وتصدر من مركز نشر العلوم الإسلامية بجماعة أنصار السنة المحمدية بسريلانكا ، وتحمل بين طياتها الأفكار الإسلامية الصافية في ضوء الكتاب والسنة ، وقد تقتبس من الكتب العربية بعض النصوص الباطلة للإستدلال على بطلانها وللتنقيد عليها


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பக்கம்

# இலங்கையில் வீசும் அரசியல் சூறாவளியில் அடித்துச் செல்லப்படப் போவது யார்?

பயங்கரவாதப் போர் முடிந்து இலங்கையில் அரசியல் போர் ஆரம்பமாகியுள்ளது. இலங்கையின் 6 வது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான அறிவித்தல் வந்து, வேட்பு மனுத் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னரே சுமார் 20 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டு இரு தினங்கள் முடிவதற்குள்ளேயே சுமார் 20 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எனவேதான் இதை அரசியல் போர் என வர்ணிக்க வேண்டியுள்ளது.

என்றுமில்லாதவாறு 22 பேர் தேர்தலில் குதித்துள்ளனர். இதில் மூவர் முஸ்லிம்களாவர். இவர்களில் ஜனாதிபதி மஹிந்தவுக்கும், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்குமிடையில் பலத்த போட்டி நிகழும் என்பதைக் களச் சூழல் காட்டி நிற்கின்றது.

இந்த அரசியல் போரில் அசத்தப் போவது யார்? உறுதியான தலைவர் மஹிந்தவா? யுத்த வீரர் சரத் பொன்சேகாவா? என்பதே முக்கிய கேள்வியாகும். கடந்த மாகாண சபைத் தேர்தல்களில் யுத்த வெற்றியை மையமாகக் கொண்டு ஆளும் தரப்பு வெற்றி பெற்றது. யுத்த வெற்றியென்பது இந்த அரசின் மகத்தான சாதனைதான்!

யுத்தம் நடக்கும் போது ஒரு பயங்கரமான கெரில்லா அமைப்பை முற்று-முழுதாக அழிக்க முடியுமா? என அனைவரும் ஐயத்தை எழுப்பினர். ஆனால் மஹிந்த அரசு இலங்கையின் 30 வருடப் போர் நடவடிக்கையை முற்று-முழுதாக முடித்து வைத்தது. யுத்தத்தில் வெற்றி பெற்றால் மஹிந்த அரசையோ, அதன் கட்சியையோ 30 வருடங்களுக்கு அசைக்க முடியாது என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் இருந்தது. ஆனால் யுத்தம் முடிந்த பின் மக்களின் அடிப்படைப் பிரச்சினையான பொருளாதாரப் பிரச்சினை என்பது மஹிந்த செல்வாக்கையும் மெல்ல மெல்ல விழுங்கத் துவங்கியது.

போரின் போது பொருளாதார நெருக்கடியைச் சகித்துக் கொண்ட மக்கள், போரின் பின்னர் கொஞ்சம் கொஞ்சம் மாறினர். எனவே இன்னும் இரண்டு ஆண்டுகள் தாமதித்தால் மக்கள் செல்வாக்கை இழக்க நேரிடும் என்பதால் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளும் நிலை அரசுக்கு உண்டானது. இதனால்தான் ஜனாதிபதித் தேர்தலுக்கான முஸ்தீபுகள் முன்கூட்டியே ஆரம்பிக்கப்பட்டன.

ஜனாதிபதியா? எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்ஹவா? என்ற போட்டி ஒன்று ஏற்பட்டிருந்தால், தேர்தல் இல்லாமலேயே ஜனாதிபதிதான் வெற்றி பெறுவார் என்று அனைவரும் கூறும் நிலைதான் இருந்தது. ஆனால் முன்னாள் இராணுவத் தளபதிக்கும் ஜனாதிபதியின் தம்பியும், பாதுகாப்புச் செயலாளருமான கோதாபயவுக்குமிடையில் ஏற்பட்ட முறுகல், சரத் பொன்சேகா புறக்கணிக்கப்பட்டமை என்பன ஆடுகளத்தை அப்படியே மாற்றி விட்டன.

தொடர்ந்தும் தோல்விகளைச் சந்திக்க விரும்பாத ரணில், தமது கட்சியை உடைத்துப் பலவீனப்படுத்தி விட்டமைக்குப் பழி வாங்கத் துடித்த ஜே.வி.பி யினர் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ கணேசன் என ஒரு கூட்டமைப்பே உருவாகிப் பொது வேட்பாளர் என்ற பூதம் வெளிப்பட்டதுதான் தேர்தல் பரபரப்புக்கு அடிப்படைக் காரணமாகும்.

ஜனாதிபதியைப் பொறுத்த வரையில் அவர் ஒரு உறுதியான தலைவர். அவரின் உறுதியான தலைமைத்துவம்தான் புலிகளின் வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணம் என்ற இமேஜ் அவருக்கு இருக்கின்றது.

அத்துடன் அவர் தனது பேச்சின் மூலமும், நடத்தைகள் மூலமும் மக்களைக் கவரத்தக்க அரசியல் காய் நகர்த்தல்களைச் செய்து வருகின்றார்.

அத்துடன் பல அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாகப் பாதை அபிவிருத்தி, பாலங்கள் அமைத்தல் என்பவற்றைக் கூறலாம்.

குறிப்பாக இவரது ஆட்சியில் இனக் கலவரங்கள் நடக்காதது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். சந்திரிக்கா காலத்தில் மாவனல்லை, கலகெதர என முஸ்லிம்களுக்கு எதிராகச் சுமார் 13 பெரும் கலவரங்கள் மூண்டன. இதில் ஆளும் தரப்பு அரசியல் சக்திகளின் பங்கு அதிகமிருந்தது.

ரணில் பிரதமராக இருக்கும் போது மூதூர், வாழைச்சேனை என முஸ்லிம்கள் புலிகளாலும், தமிழ் ஆயுதக் குழுக்களாலும் கருவறுக்கப்பட்டனர். இராணுவத்தின் கண் முன்னாலேயே முஸ்லிம்கள் தாக்கப்பட்டனர். ஆயுதப் படைகள் அமைதி காத்தனர். மஹிந்த ஆட்சியில் சின்னச் சின்னக் கலவரங்களுக்கான தூபம் போடப்பட்ட போது உடனடியாக அவை அடக்கப்பட்டன.

அத்துடன் மூதூர் முஸ்லிம்கள் அகதிகளாக வெளியேற்றப்பட்ட போது, நோன்பு வருவதற்குள் முஸ்லிம்கள் மூதூரில் குடியேறும் நிலையை உருவாக்குவேன் என வாக்களித்த ஜனாதிபதி அதை நிறைவேற்றவும் செய்தார். இவ்வாறு பல போற்றத்தக்க அம்சங்கள் ஜனாதிபதிக்குச் சாதகமான நிலைகளாக உள்ளன.

இந்தத் தேர்தலின் முடிவைத் தீர்மானிக்கும் சக்தியாகத் திகழும் சிறுபான்மை ஓட்டுக்களைப் பொறுத்த வரையில் கருணாவும், பிள்ளையானும் ஜனாதிபதிக்கான தமது பூரண ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். பிள்ளையான் சிறிது காலம் அரசால் ஓரங்கட்டப்பட்ட நிலையில் இருந்தார். ஜனாதிபதியுடன் ஒட்டிக்கொள்ள அவருக்கு நல்ல சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது. ஜனாதிபதிக்கு உழைப்பதில் நானா? நீயா? எனப் போட்டி போட்டுக்கொண்டு கருணா-பிள்ளையான் இருவரும் பணியாற்றுவார்கள் என நம்பலாம். இதனால் கிழக்கில் கணிசமான தமிழர் ஓட்டுக்களை ஜனாதிபதி பெற வாய்ப்புள்ளது.

இதே வேளை ஜனாதிபதிக்குத் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தும் மற்றுமொரு பக்கமும் உள்ளது. என்னதான் இருந்தாலும் ஜனாதிபதியைச் சிறுபான்மை மக்களில் அநேகர் ஆதரிக்கவில்லை என்பதைக் கடந்த தேர்தல்கள் எடுத்துக் காட்டுகின்றன. சிறுபான்மை மக்களில் அதிகமானோர் ஐ.தே.க சார்புடையவர்களாக இருப்பதே இதற்குக் காரணம்.

அடுத்து, ஜனாதிபதியின் வெற்றிக்குப் பின்னால் அவரின் குடும்ப ஒத்துழைப்பு இருப்பது போலவே, அவரது சகோதரர்களின் எல்லையற்ற அதிகாரங்கள் ஆளும் தரப்புக்குள்ளேயே அதிருப்தி அலையை ஏற்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலங்களில் முஸ்லிம் செல்வந்தர்கள் கடத்தப்பட்டதாகவும், அவர்களிடம் கப்பம் கோரப்பட்டதாகவும் கூறப்படும் செய்திகள் பெரும் அளவில் மக்கள் மனதில் பதிந்துள்ளன.

முஸ்லிம்களின் வர்த்தக இலக்குகள் முடக்கப்பட்டமைக்கும், அரசுக்கும் சம்பந்தம் இருப்பதாகக் கூறப்படும் செய்திகளும் சிறுபான்மை மக்கள் மத்தியில் வெறுப்பை விளைத்துள்ளன.

அத்துடன், தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படுவதைப் பார்க்கும் சிலர் வருங்காலம் வரட்சிக் காலமாக அமையப் போவதை இது எடுத்துக் காட்டுவதாக எண்ணுகின்றனர்.

கடந்த தேர்தல்களைப் போல் இந்தத் தேர்தலில் போர் வெற்றியைப் பெரிய மூலதனமாக்க முடியாத நிலை. ஏனெனில், எதிரணியில் களத்தில் நின்று போரைச் சந்தித்த யுத்த வீரர் இருக்கின்றார். போர் வெற்றியென்றால் அதில் பெரும் பங்கு முன்னாள் தளபதிக்குமுள்ளது. எனவே, ‘அபிவிருத்தி செய்யச் சந்தர்ப்பம் தாருங்கள்!’ என்ற தொணியில் பிரச்சாரத்தை முடுக்கி விடும் நிலை என்பது ஜனாதிபதிக்குப் பாதகமான சூழ்நிலையாகும்.

அடுத்து, சென்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த குறுகிய வாக்கு வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றார். அந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை. வாக்களித்திருந்தால் முடிவு வேறு விதமாக அமைந்திருக்கும்.

மஹிந்தவின் வெற்றிக்குப் பின்னர் போர் வெற்றி, ரணிலின் தொடர்ச்சியான தோல்வி, ஐ.தே.க. யின் உட்கட்சிப் பூசல், தலைமை பற்றிய நம்பிக்கையீனம் என்ற பல்வேறுபட்ட காரணங்களால் ஐ.தே.க. ஆதரவாளர்கள் சிலர் அரச சார்பு நிலைக்கும், மற்றும் சிலர் சோர்வு நிலைக்கும் தள்ளப்பட்டனர். இந்தச் சோர்வு நிலை சரத் பொன்சேகாவின் பிரவேசத்தால் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஐ.தே.க. தனது பழைய வாக்கு வங்கியை மீளப் பெற முடியுமாக இருந்தால், அது ஜனாதிபதிக்குப் பாதகமான முடிவையே தரும்.

எதிர்க் கட்சி வேட்பாளரான சரத் பொன்சேகாவைப் பொறுத்த வரை அவர் ஒரு இராணுவ வீரர். ஜனாதிபதியின் உறுதியான தலைமைத்துவத்தினூடாகக் களத்தில் நின்று போராடியவர் என்ற செல்வாக்கு அவருக்கு இருக்கின்றது. எனினும் அவர் அரசியல் அனுபவமற்றவர். ஜனாதிபதி மஹிந்த ஆழ்ந்த அரசியல் அனுபவமிக்கவர். எனவே யுத்த வீரரால் அரசியல் வீரரை அரசியல் ஆடுகளத்தில் வீழ்த்த முடியுமா? என்பதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

அரசியல் அனுபவமில்லாத ஒருவரை நம்பி நாட்டை ஒப்படைக்க முடியுமா? என்ற கேள்வி பலமாக எழுந்துள்ளது. எனினும், உலகின் முதலாவது பெண் பிரதமரான சிறிமா பண்டாரநாயக்கா அவர்கள் அடுப்படியிலிருந்து நேராக அரசியலுக்கு வந்தவர். அவர் அன்றிருந்த பிரச்சினைகளைத் தீர்த்துள்ளார். அடுத்து, சரத் பொன்சேகா ஒரு நாட்டின் இராணுவத்தை வழிநடத்திய அனுபவமுள்ளவர். அது போக அரசியலில் அவரைப் பின்னுக்கு நின்று வழிநடத்துவோர் அரசியல் அனுபவமுள்ளவர்கள் என்ற அடிப்படையில் இதற்கு மறுப்புக் கூறப்படுகின்றது.

அடுத்து, ஐ.தே.க. யின் வாக்கு வங்கியில் ஜே.வி.பி. யின் 6 இலட்சத்திற்கும் 8 இலட்சத்திற்குமிடைப்பட்ட வாக்குகளும் இணைந்துள்ளன. முஸ்லிம் காங்கிரஸூம் முஸ்லிம்களின் கணிசமான ஓட்டுக்களைப் பெற்றுக் கொடுக்கும். மனோ கணேசனின் கட்சியும் ஓரளவு தமிழ் ஓட்டைப் பெற்றுக் கொடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்குத் தமிழர்களின் முடிவு எப்படி அமையும் என்று ஆரூடம் கூற முடியாதுள்ளது. புலிகளின் பிடியிலிருந்து தம்மைக் காத்தவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதிக்குச் சிலர் வாக்களிக்கலாம். அல்லது தமது ஈழக் கனவைக் கலைத்தவர்கள் என இருவருக்குமே வாக்களிக்காது விடலாம். சிவாஜிலிங்கம் தேர்தலில் குதித்திருப்பதால் ஜனாதிபதியாக வர முடியாது என்றாலும், இருவரையும் நாம் புறக்கணிக்கின்றோம் என்பதை உலகுக்குக் காட்டுவதற்காக கணிசமானவர்கள் தமது வாக்குகளை சிவாஜிலிங்கத்துக்கு வழங்கலாம். அல்லது சிலர் தேர்தலைப் புறக்கணிக்கலாம். மற்றும் சிலர் தமது வாக்கைச் செல்லுபடியற்றதாக ஆக்கலாம். வடக்குத் தமிழர்கள் தமது பழைய நிலைப்படி ஐ.தே.க. சார்புடையவர்களாக இருந்தால், அது சரத் பொன்சேகாவுக்குச் சாதகமாக அமையலாம்.

அடுத்து, சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த போது சிறுபான்மை இனங்கள் குறித்துக் கூறிய துவேஷக் கருத்துக்கள் இன்னும் மக்கள் மனதை விட்டும் அகலவில்லை.

அவரது அப்போதைய கருத்தும் தற்போதைய பேச்சும் வேறுபட்டதாக இருந்தாலும், கணிசமான தமிழ்-முஸ்லிம் ஓட்டுக்களை அவர் இழப்பற்கு, முன்னர் கூறிய துவேஷக் கருத்துக்கள் களமமைத்துக் கொடுக்கலாம்.

யார் அடுத்த ஜனாதிபதி என்று கூற முடியாது விட்டாலும் பலமான போட்டி என்பதும், என்ன விலை கொடுத்தாவது ஆட்சியைத் தக்க வைக்க வேண்டும் என்ற நிலையில் ஜனாதிபதி உள்ளார். சரத் பொன்சேகா தோற்றால் அது சாதாரணத் தோல்விதான். ஜனாதிபதி தோற்று விட்டால் அது அவருக்கும், அவர் குடும்பத்துக்கும் பாரிய வீழ்ச்சியாகவும் அரசியலில் பெரிய மாற்றமாகவும் அமையலாம்.

சரத் பொன்சேகா வெற்றி பெற்றால் இன்று அவரை ஆடுகளத்திற்குக் கொம்பு சீவி அனுப்பியவர்களுக்கும் எதிர்காலத்தில் தலையிடியாகக் கூட அவர் அமையலாம். அவரை வெற்றி பெறச் செய்து அவரை பொம்மை ஆட்சியாளராக வைத்துக்கொள்ள அவருக்கு ஆதரவு அளிக்கும் கட்சிகள் நினைக்கலாம். ஐ.தே.க. ஒரு பக்கமும், ஜே.வி.பி. ஒரு பக்கமும் இழுக்கலாம். ஆனால், சரத் பொன்சேகா உத்தரவு இட்டுப் பழகிய ஒரு படைத் தளபதி. அவர் அடிபணிந்து செல்ல மாட்டார். அவர் மோதிப் பழக்கப்பட்டவர். அதனால்தான் ஜனாதிபதியுடனும், அவரது தம்பியுடனும் ஏற்பட்ட முறுகல் நிலையால் மனம் ஒடிந்து ஒதுங்கிச் செல்லாமல் துணிந்து களத்தில் குதித்துள்ளார். எனவே இன்றைய எதிர்க் கட்சியினர் நினைப்பது போல் அவரை ஆட்டுவிப்பது சுலபமல்ல.


யார் வென்றாலும், யார் தோற்றாலும் பாரிய அரசியல் சிக்கலுக்குள் நாடு மூழ்கி விடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டு மக்கள் அனைவரும் தேர்தலை அமைதியாக எதிர்கொள்ளத் தயாராக வேண்டும். ஒருவர், தான் விரும்பியவருக்கு ஓட்டுப் போடலாம்; போடாமல் கூட இருக்கலாம். ஆனால் அரசியல் வன்முறையில் யாரும் இறங்கக் கூடாது. குறிப்பாக நமது முஸ்லிம் சகோதரர்களிடம் அமைதியான முறையில் தேர்தலை எதிர்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுவாகத் தேர்தலில் தோற்பவர்கள் வாக்காளர்கள்தான் என்பதே நடைமுறை உண்மையாகும். யார் ஆட்சிக்கு வந்தாலும் சகல இன மக்களையும் சமமாக நடத்தும் இனவாதமற்ற அரசியல் தீர்வே இலங்கைத் தீவின் வெற்றிக்குத் தீர்வாகும். இந்த நிலை மலர அனைவரும் பிரார்த்திப்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலக அழிவும் மறுமை வாழ்வும்

(ஸலபி)

இந்த அத்தியாயத்தின் இரண்டாம் வசனத்தில் இடம்பெற்றிருக்கும் 'அனின் நபயில் அழீம்' என்ற பதத்தின் அடிப்படையில் இவ்வத்தியாயம் 'சூரத்துன் நபஉ' என அழைக்கப்படுகின்றது. 'அன்னபஉ' என்றால் செய்தி என்பது அர்த்தமாகும். நபி(ﷺ) அவர்கள் தமது தூதுத்துவப் பணியை ஆரம்பித்த போது மக்கா பூமி எங்கும் பரபரப்பாகப் பேசப்படும் செய்தியாக அது மாறியது. குறிப்பாக அவர்கள் பிரச்சாரம் செய்த மறுமைக் கோட்பாடு எதிரிகளின் ஏளனத்திற்கும், எள்ளிநகையாடலுக்கும், கேலிக்கும், கிண்டலுக்கு முள்ளானது. இந்த அடிப்படையில்தான் 'மகத்தான செய்தி' என்று இந்த அத்தியாயம் அழைக்கப்படுகின்றது. சின்னச் சின்ன நாற்பது வசனங்களைக் கொண்ட இந்த அத்தியாயம் மக்காவில் அருளப்பட்டதாகும். இது அல்குர்ஆனின் 78 ஆம் அத்தியாயமாக இடம்பெற்றுள்ளது.

**அந்த மகத்தான செய்தி எது?**

عَمَّ يَتَسَآءَلُونَ ① عَنِ النَّبَإِ الْعَظِيمِ ②
الَّذِي هُمْ فِيهِ مُخْتَلِفُونَ ③

**எதைப் பற்றி அவர்கள் தமக்குள் கேட்டுக்கொள்கின்றனர்? அவர்கள் எது குறித்துத் தமக்குள் முரண்பட்டிருக்கின்றார்களோ அந்த மகத்தான செய்தியைப் பற்றியாகும். (78:1-3)**

ஒரு மகத்தான செய்தி குறித்து இஸ்லாத்தின் எதிரிகள் தமக்குள் முரண்பட்ட கருத்துக்களைப் பேசிக்கொள்வதாக இந்த வசனங்கள் கூறுகின்றன. அவர்கள் பேசிக்கொண்ட அந்த மகத்தான செய்தி எது? என விளக்கும் விடயத்தில் அறிஞர்கள் மூன்று கருத்துக்களைக் கூறுகின்றனர்.

✯ நபி(ﷺ) அவர்கள் குறித்தும் அவர் தூதராக அனுப்பப்பட்டுள்ளனர் என அவர் கூறும் செய்தி குறித்தும் அவர்கள் முரண்பட்ட கருத்துக்களைக் கூறி நிராகரித்தனர் என்பது சிலரது அபிப்பிராயம்.

✯ அல்குர்ஆன் குறித்தும், அது இறை வசனம் அல்ல என அவர்கள் மறுத்தது குறித்தும் இது கூறுகின்றது என்பர் சிலர்.

✯ மற்றும் சிலர் இது மறுமை குறித்து அவர்கள் செய்த சர்ச்சை மறுப்புக் குறித்தும் பேசுகின்றது என்பர்.

முதலாம் கருத்தைக் கூறும் அறிஞர்கள் ஒரு மனிதனுக்குத் தூதுச் செய்தி வருமா? என்ற அடிப்படையில் கா∴பிர்கள் பேசிய பேச்சுக்களையும், நபி(ﷺ) அவர்கள் குறித்துக் குறிகாரர், சூனியக்காரர், கவிஞர், பைத்தியக்காரர் எனத் தமக்குள் முரண்பட்டு அவர்கள் பேசியதைக் கூறுவர்.

இரண்டாம் கருத்தைக் கூறும் அறிஞர்கள் குர்ஆனுக்கு (அந்நபஉல் அழீம்) 'மகத்தான செய்தி' எனக் குர்ஆனே கூறும் வசனத்தையும், குர்ஆன் குறித்துக் 'கவிதை'-'முன்னோர்களின் கட்டுக்கதை என அவர்கள் விமர்சித்ததையும் ஆதாரமாகக் கூறுவர்.

இது மறுமை பற்றித்தான் பேசுகின்றது எனக் கூறும் அறிஞர்கள், "நிச்சயமாகத் தீர்ப்பு நாள் நேரம் குறிக்கப்பட்டிருக்கின்றது என்ற இந்த சூறாவின் 17 ஆம் வசனம் தொடக்கம் மறுமை பற்றிப் பேசப்படுவதால் இது நேரடியாக மறுமை குறித்த செய்திதான் எனக் கூறுகின்றனர். இதுவே மிகச் சரியானதாகும்.

இமாம் இப்னு ஜரீர்(ரஹ்) அவர்கள், "மூன்றுக்குமே இடம்பாடுள்ளது. இவற்றுக்கிடையில் முரண்பாடு இல்லை என்கின்றார். இந்த மூன்றில் ஒன்றை மட்டும் ஏற்காமல் மூன்றையும் ஏற்றாக வேண்டும். மூன்றில் எதை மறுத்தாலும் மூன்றையும் மறுத்ததாக ஆகி விடும். மக்காவில் நபி(ﷺ) அவர்கள் 'தவ்ஹீத்', 'ரிஸாலத்', 'மஆத்' எனும் இறை நம்பிக்கை, தூதுத்துவம், மறுமை நம்பிக்கை என்ற மூன்று முக்கிய அம்சங்களுக்கும் அழுத்தம் கொடுத்துப் பிரச்சாரம் செய்தார்கள். மக்காவில் அருளப்பட்ட அல்குர்ஆன் வசனங்களும் இந்த மூன்று அம்சங்களையும், சிறிய சிறிய இலக்கிய நயமும், எதுகை-மோனையும் கொண்ட வசனங்களூடாக இவற்றையே திரும்பத் திரும்பப் போதித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சூறாவும் இதே அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

மனிதன் மரணித்த பின்னர் உயிர் கொடுத்து எழுப்பப்படுவான். அவன் செய்த செயலுக்கு ஏற்ப பரிசோ, தண்டனையோ வழங்கப்படுவான் என நபி(ﷺ) அவர்கள் பிரச்சாரம் செய்த போது அதுவே மக்கா வீதிகளின் பேசுபொருளாக மாறியது. இது எப்படி சாத்தியம்!? மனிதன் மரணித்து மண்ணோடு மண்ணாக உக்கிப் போன பின், உயிர் கொடுத்து எழுப்பப்படுவானா!? கேள்வி-கணக்குக் கேட்கப்படுவானா!? இது அறிவுக்குப் பொருந்துகின்றதா? என இது குறித்துத் தமக்குள் பேசிக்கொண்டார்கள். நபி(ﷺ) அவர்களிடம் நேரடியாக வந்து, உக்கிப் போன எலும்பைப் பொடியாக்கி "இதற்கும் உயிர் கொடுக்கப்படுமா!?" எனத் தர்க்கித்தனர்.

இது குறித்துக் குர்ஆன் கூறும் போது;

**நிச்சயமாக நாம் மனிதனை ஓர் இந்திரியத் துளியிலிருந்து படைத்தோம் என்பதை அவன் பார்க்கவில்லையா? பின்னர் அவன் பகிரங்கமாகத் தர்க்கம் புரிபவனாக இருக்கின்றான். மேலும் அவன், தான் படைக்கப்பட்டதை மறந்து விட்டு, நமக்கோர் உதாரணத்தைக் கூறுகின்றான். "எலும்புகள் உக்கிப் போயிருக்க அவற்றை உயிர்ப்பிப்பவன் யார்?" எனக் கேட்கின்றான். முதன் முறை அதனைப் படைத்தவனே அதனை உயிர்ப்பிப்பான். அவன் அனைத்துப் படைப்பையும் நன்கறிந்தவன் என (நபியே!) நீர் கூறுவீராக! (36:77-79)**

ஒன்றுமே இல்லாமல் இருந்த மனிதனைப் படைத்த அல்லாஹ்வுக்கு, அவன் மரணித்த பின்னர் மீண்டும் படைப்பது சிரமமானதா? ஒரு துளி இந்திரியத்திலிருந்து இவனைப் படைத்தவனுக்கு இது ஒன்றும் இயலாத காரியமல்லவே! என அவனது வாதத்திற்குக் குர்ஆன் பதில் சொன்னது.

இதே பாணியில் மறுமையை மறுப்பவர்களுக்கு;

- வானங்கள்-பூமியை அல்லாஹ் படைத்தது.
- பூமியில் பயிர்-பச்சைகளை அவன் முளைக்கச் செய்வது.
- மனிதனைப் படைத்தது.
- இறந்தவற்றை அவன் உயிர் ஊட்டுவது.

என்ற நான்கு அடிப்படைகளை இந்த சூறாவில் கூறி, இந்த நான்கையும் செய்பவன் மீண்டும் உங்களை உயிர்ப்பிப்பது என்பது மறுக்கப்பட வேண்டிய அம்சம் அல்ல; அது சாத்தியமானதுதான் என்று தொடர்ந்து வரும் வசனங்களில் தெளிவுபடுத்துகின்றான்.

அதனைத் தொடர்ந்து வரும் வசனங்களில் மறுமையை மறுத்து இம்மையில் வாழ்ந்தோரின் மறுமை நிலை குறித்தும், மறுமையை நம்பியோர் அடையும் மகத்தான மறுமை வாழ்வு குறித்தும் பேசுகின்றன.

كَلَّا سَيَعْلَمُونَ ﴿٤﴾ ثُمَّ كَلَّا سَيَعْلَمُونَ ﴿٥﴾

**அவ்வாறன்று, விரைவில் அவர்கள் அறிந்துகொள்வார்கள். பின்னரும் அவ்வாறன்று, விரைவில் அவர்கள் அறிந்துகொள்வார்கள். (78:4-5)**

மறுமை ஒன்று உண்டு என்பதை இவர்கள் அறிந்துகொள்வார்கள் என இந்த வசனங்கள் கூறுகின்றன. இந்த மறுமையை எப்படி மனிதன் அறிந்துகொள்வான்? அதுவும் போகப் போக இன்னும் தெளிவாக அறிந்துகொள்வான் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இன்றைய நவீன விஞ்ஞானம் உலக அழிவை ஏற்றுக்கொள்கின்றது. ஆன்மீக ரீதியில் அன்றி அறிவியல் ரீதியில் உலக அழிவு குறித்து அது பேசுகின்றது. இது இஸ்லாம் கூறும் உலக அழிவை உறுதி செய்கின்றது.

அத்துடன் இஸ்லாம் மறுமை பற்றி வெறும் பேச்சாகக் கூறாமல் அது நடப்பதற்கு முன்னர் நடக்கக் கூடிய அழிவுகள் மறுமையின் அடையாளங்கள் குறித்தும் பேசுகின்றது. அந்த அடையாளங்கள் நிகழும் போது மறுமையின் நிகழ்வை மனிதன் உறுதி செய்துகொள்ளலாம்.

நபி(ﷺ) அவர்கள் மறுமையின் அடையாளங்களாகக் கூறிய முன்னறிவிப்புக்களை;

- நடந்து முடிந்தவை.
- நடந்துகொண்டிருப்பவை.
- நடக்க இருப்பவை

என மூன்றாக வகுக்கலாம்.

நடந்து முடிந்த முன்னறிவிப்புக்களும், நடந்துகொண்டிருக்கின்ற முன்னறிவிப்புக்களும், எதிர்காலத்தில் நடக்க இருக்கும் மறுமையின் அடையாளங்கள் நிச்சயம் நடந்தே தீரும் என்பதை உறுதி செய்கின்றன. அத்துடன் இந்த அடையாளங்கள் அனைத்தும் அச்சரம் பிசகாமல் அச்சொட்டாக நடந்து வருவது, மறுமை ஒன்று இருக்கின்றது; அது நடந்தே தீரும் என்பதைத் தெளிவுபடுத்தும் நடைமுறைச் சான்றுகளாகவும் திகழ்கின்றன.

(இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் வழிப்பட்டால்...

- ஏ.எல். ஃபைஸல் (ஸஹ்வி) B.A. Hons (Madeena) -

இஸ்லாம் மனித குலத்திற்கு இறைவனால் அருளப்பட்ட ஓர் வாழ்க்கை நெறியாகும். அது கல்வி, கலை, கலாசாரம், பாரம்பரியம், ஒழுக்கவியல் போன்ற எல்லாத் துறைகளிலும் அழகிய வழிகாட்டல்களையும் தெளிவான சட்ட வரையறைகளையும் முன்வைத்துள்ளது.

இஸ்லாம் இரண்டு அடிப்படை அம்சங்களால் நிறுவப்பட்டுள்ளது. ஒன்று, அல்லாஹ்வின் வேதமாகிய அல்குர்ஆனும் மற்றது, நபியின் வழிகாட்டலான அஸ்ஸுன்னாவுமாகும்.

ஒவ்வொரு முஸ்லிமான மனிதனும் தனது வாழ்வில் ஆத்மிக ரீதியாகவும், பௌதீக ரீதியாகவும் பல சவால்களை எதிர்கொள்கின்றான். இந்நிலையில் அவன் எதிர்கொண்ட அச்சவால்களுக்குத் தீர்க்கமான முடிவுகளைத் தமது சொந்த அபிப்பிராயத்தினூடாகவோ அல்லது அனுபவத்தினூடாகவோ கையாள்வதை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை. மாறாக, அல்லாஹ்வின் வேதமாகிய அல்குர்ஆனையும் அவனின் தூதரின் வழிகாட்டல்களையும் பற்றிப் பிடிக்குமாறு வலியுறுத்துகிறது. இவ்விதிமுறைக்கு மாறாக வேறு வழிகளைத் தேடுபவர்கள் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் ஈமான் கொண்டவர்களாக முடியாது.

அல்லாஹ் கூறுகின்றான்;

**நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள். இன்னும் இத்தூதருக்கும், உங்களில் அதிகாரமுடையோருக்கும் கட்டுப்படுங்கள். நீங்கள் ஏதேனும் ஒரு விடயத்தில் முரண்பட்டுக்கொண்டால், நீங்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொள்வோராக இருந்தால், அதனை அல்லாஹ்விடமும், இத்தூதரிடமும் (தீர்வை வேண்டித்) திருப்பி விடுங்கள். இதுவே மிகச் சிறந்ததும் அழகான முடிவுமாகும். (4:59)**

ஓர் முஸ்லிம் சமூகத்தின் வெற்றியின் பின்னணி அதன் கொள்கை-கோட்பாடு, கட்டமைப்பு, விதிமுறை போன்றவற்றோடு இணைந்துள்ளது. இஸ்லாத்தை முழுமையாகக் கூட்டல்-குறைத்தலின்றிப் பின்பற்றுவதில் முஸ்லிம்கள் தீரா வேட்கையுடன் இருக்க வேண்டும். உலகில் தோன்றி மறைந்த அனைத்து மதங்கள், கொள்கைகளை விடவும் இஸ்லாம் மட்டுமே தனித்துவமான போக்கோடும், அறிவு ரீதியான அற்புதங்களோடும் மேலோங்கிக் காணப்படுகிறது. ஏனெனில் அல்குர்ஆனுக்கு முன் இறக்கப்பட்ட வேதங்கள் மனிதக் கரங்களால் மாற்றப்பட்டு இடைச் செருகல்களுக்கும், ஊடுருவல்களுக்கும் இலக்காகி இருப்பதை அல்குர்ஆன் ஏராளமான இடங்களில் தெளிவுபடுத்துகின்றது.

இதன் மூலம் இஸ்லாம் - ஏனைய மதங்கள், கொள்கைகள், அதன் சம்பிரதாயங்கள் அனைத்தை விட்டும் வேறுபட்டு அது இப்பிரபஞ்சத்தில் நிலைத்திருக்கும் நாள் வரை அதற்கெதிராக மேற்கொள்ளப்படும் சவால்களை அறிவு ரீதியாகவும், ஆரோக்கியமான முறையிலும் எதிர்கொண்டு நிலையான, காலத்தால் அழிக்க முடியாத தெய்வீக அற்புதமாய்த் திகழ்ந்துகொண்டிருக்கும் என்பது வரலாறு நெடுகிலும் நாம் பார்த்து வருகின்ற உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிச்சுவட்டின் மீதுதான் நபி(ஸல்) அவர்களது நபித்துவக் கால வரலாற்றில் ஓர் அழகிய முன்மாதிரியான சமூக அமைப்பை உருவாக்கி அதன் எழுச்சியை உலகமெங்கும் வேரூன்றச் செய்திருக்கிறார்கள். அவர்களின் சத்தியப் போராட்டம், ஆளுமைச் சிறப்பு, அரசியல் பலம், தியாக உழைப்பு, பரஸ்பரம் புரிந்துணர்வு, ஒழுக்க விழுமியம் போன்ற வசீகரமான துறைகளால் அந்நியர்கள் கூட மெய் சிலிர்க்கும் அளவுக்கு வாழ்ந்து காட்டினார்கள். அம்மாமேதையின் வழியில் உருவான சமுதாயம் அவர்களின் ஸுன்னாக்களைக் கொச்சைப்படுத்துவதும், அவற்றைச் செயல்படுத்துவது சமூக ஒருமைப்பாட்டை அல்லது புணரமைப்பைக் குலைத்து விடும் என்றும் சமூகத்துக்குத் தேவையற்ற சில்லறை(ஸுன்னாக்) களைக் கூறுவது ஒற்றுமையைச் சீர்குலைப்பதாகத் தாங்களும், தங்கள் அறிஞர்களும் நாக்கூசாது பேசுவதும், அதற்காகப் பல பக்கங்களை எழுதுவதும், ஆட்பலம் உருவாக்குவதும், அரசியல் உருவாக்கத்தை அதற்குத் துரும்பாகப் பயன்படுத்துவதும் இவர்கள் இன்னும் அடிமட்டத்திலிருந்துகொண்டு ஆழியைப் பார்க்க ஆசைப்படுவதையே பறை சாட்டுகிறது.

எனவே, முஸ்லிம்கள் இஸ்லாத்தைப் பற்றி சரியாகப் புரிந்து அதைத் தம் வாழ்வில் ஒவ்வொரு பக்கங்களிலும் பின்பற்ற வேண்டும். அவ்வாறு செயலாற்றாதவர்கள் நிலை பற்றி அல்குர்ஆன் இப்படிக் கூறுகிறது;

**இத்தூதரை அழைப்பதை உங்களுக்கிடையில் சிலர் சிலரை அழைப்பது போன்று ஆக்கிக்கொள்ளாதீர்கள். உங்களில் யார் மறைவாக நழுவிச் செல்கிறார்களோ அவர்களை அல்லாஹ் நன்கறிவான். அவரின் கட்டளைக்கு மாறு செய்வோர் தமக்கு ஒரு துன்பம் நேருவதையோ அல்லது தமக்கு நோவினை தரும் வேதனை ஏற்படுவதையோ அஞ்சிக்கொள்ளட்டும். (24:63)**

மேற்கூறப்பட்ட இவ்வசனம் இரு பெரும் முக்கிய அம்சங்களை அடையாளப்படுத்துகிறது;

**-01-** அல்லாஹ்வின் தூதரின் கட்டளைக்கு மாறு செய்பவர் உள ரீதியாக பாதிக்கப்பட்டுச் சத்தியத்திலிருந்து தடம் புரண்டு இறை நிராகரிப்பின் (குஃப்ரின்) பக்கம் திரும்பி விடுகிறார். மேலும் அவன் இதயம் வழிகேடுகளாலும், குழப்பங்களாலும், ஷைத்தானிய ஊசலாட்டங்களாலும் இரண்டறக் கலந்து ஈமானியப் பாதையை விட்டும் தூரமாகி விடுகிறார்.

**-02-** அல்லாஹ்வின் கூற்றாகிய அவ்வசனத்தில் துன்புறுத்தும் வேதனை அவனைப் பீடித்து விடுவதை பயந்துகொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. அவ்வேதனை உலகில் ஏற்படும் பல பயங்கரமான நோய்களாகவோ அல்லது மிலேச்சத் தனமான உயிர்ச் சேதமாகவோ அல்லது இஸ்லாத்தின் விரோதிகளுக்கு இறக்கப்பட்ட வேதனைகளைப் போன்றோ இருக்கலாம். அத்தோடு மறுமை நாளிலும் அவ்வேதனை தொடரும் என்பதை உணர்த்துகிறது.

எனவே, இஸ்லாமியக் கொள்கைக் கோட்பாடுகளுக்கு மாறு செய்பவர்கள் இரண்டு விதமான தண்டனைகளுக்கு ஆளாகுவர். ஒன்று, உள ரீதியானது; மற்றது, பௌதிக ரீதியானது.

இனி அல்குர்ஆனும், அஸ்ஸுன்னாவும் போதித்த சிந்தனைகளுக்கு எதிராகச் செயல்படும் மனிதர்கள் நிலைப்பாடு பற்றி அனுகுவோம்.

**(1) அல்லாஹ்வையும், அவன் தூதரையும் பின்பற்றாதவர்கள் வழிகேடர்கள்:**

அல்லாஹ் கூறுகின்றான்;

**அல்லாஹ்வும், அவனது தூதரும் ஒரு காரியத்தில் முடிவு செய்து விட்டால் தமது காரியத்தில் சுய அபிப்பிராயம் கொள்வதற்கு முஃமினான எந்த ஆணுக்கும், முஃமினான எந்தப் பெண்ணுக்கும் உரிமை இல்லை. எவன் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாறு செய்கின்றானோ நிச்சயமாக அவன் மிகத் தெளிவான வழிகேட்டில் சென்று விட்டான். (33:36)**

மனித வாழ்வில் எத்துறை சார்ந்த அம்சங்களாக இருந்தாலும் அவற்றில் குர்ஆனும், ஸுன்னாவும் பிரதிபலிப்பதை வலியுறுத்துவதுடன் எந்த விசுவாசிக்கும் மார்க்க விவகாரங்களில் அது தெளிவானதன் பின்பும் சுய கருத்து-அபிப்பிராயப் பரிமாறல் எனும் நிலைப்பாட்டை முற்றாக அகற்றி அது இறை விசுவாசத்தின் பண்பாக அமையப் பெறாது எனும் கருத்தோட்டை அவ்வசனம் தெளிவுபடுத்துகிறது. அதற்கு மாற்றான செயற்பாடு பகிரங்க வழிகேட்டை நோக்கி இட்டுச் செல்லும் என்றும் அடையாளப்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(2) நேரான பாதையை விட்டும் நெறிபிறளச் செய்யும்:**

அல்லாஹ் கூறுகிறான்;

நிச்சயமாக இதுவே எனது நேரான வழியாகும். எனவே, இதனையே நீங்கள் பின்பற்றுங்கள். பல வழிகளைப் பின்பற்றாதீர்கள். அப்பொழுது அது அவனது வழியை விட்டும் உங்களைச் சிதறடித்து விடும். நீங்கள் (அல்லாஹ்வை) அஞ்சி நடக்கும் பொருட்டு இதைக் கொண்டு உங்களுக்கு ஏவுகின்றான். (6:153)

ஒரு தடவை நபி(ﷺ) அவர்கள் பூமியில் ஒரு கோட்டைக் கீறி விட்டு, "இதுதான் அல்லாஹ்வின் நேரான பாதையாகும்!" என்றார்கள். பின்பு அதன் இடது பக்கமும், வலது பக்கமுமாக பல கோடுகளைக் கீறி விட்டு, "இவை ஷைத்தான்களின் பாதைகளாகும். இந்தப் பாதைகள் ஒவ்வொன்றிலும் ஷைத்தான் இருந்து கொண்டு உங்களை அவன் பக்கம் அழைக்கிறான்!" எனக் கூறி விட்டு மேற்கூறப்பட்ட அவ்வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

அல்லாஹ்வின் பாதை, ஒரே பாதை; அது தெளிவான பாதை; யுக முடிவு நாள் வரை பின்பற்றத்தக்க பாதை. ஆனால் பல அசத்தியப் பாதைகள் இஸ்லாமியச் சாயம் பூசப்பட்டுச் சத்தியப் பாதை போன்று உருவமெடுத்துக் கிடக்கின்றது. அவை மக்களை அவர்கள் உணராத விதத்தில் நரகத்தை நோக்கிய பயணத்திற்குப் பாதை காட்டுகின்ற விடிவிளக்காய் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இந்த இடத்தில் முஸ்லிம்கள் தமது சிந்தனைகளை ஒருமுகப்படுத்தித் தமது இஸ்லாமிய அகீதாவை நாசப்படுத்தக் கூடிய அபாயங்களை இனங்கண்டு புத்துணர்வு பெற வேண்டும்.

**(3) அல்லாஹ்வின் வேதனையைக் கொண்டு அடையாளப்படுத்தப்பட்டவர்கள்:**

அல்லாஹ் கூறுகிறான்;

"உங்கள் பெற்றோர்கள், உங்களது பிள்ளைகள், உங்களது சகோதரர்கள், உங்களது மனைவியர், உங்களது நெருங்கிய உறவினர்கள், நீங்கள் சம்பாதித்துள்ள செல்வங்கள், நஷ்டமடைந்து விடுமென நீங்கள் அஞ்சும் வியாபாரம், நீங்கள் திருப்திகொள்ளும் இல்லங்கள் என்பன அல்லாஹ்வையும், அவனது தூதரையும் அவனது பாதையில் அறப்போர் புரிவதையும் விட, உங்களுக்கு மிக விருப்பமுடையவைகளாக இருந்தால் அல்லாஹ் தனது (தண்டனையான) கட்டளையைக் கொண்டு வரும் வரை நீங்கள் எதிர்பார்த்திருங்கள்!" என (நபியே) நீர் கூறுவீராக! அல்லாஹ் பாவிகளான இக்கூட்டத்தினரை நேர்வழியில் செலுத்த மாட்டான். (9:24)

**(4) நெருக்கடியான வாழ்வும், மறுமையில் அங்கலாய்ப்பும்:**

அல்குர்ஆனும், அஸ்ஸுன்னாவும் எவர்களால் புறக்கணிக்கப்படுகின்றனவோ அத்தகையோருக்கு வாழ்வில் நிம்மதியற்ற நெருக்கடியே தாண்டவமாடும். அவை சமூக ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ, உயிரிழப்புக்கள் ரீதியாகவோ இருக்கலாம். மறுமையிலும் அத்தகையோர்கள் அல்லாஹ்வின் திருமுகத்தைப் பார்க்கும் பாக்கியம் அற்ற அந்தகர்களாகவே எழுப்பப்படுவார்கள்.

எவன் எனது உபதேசத்தைப் புறக்கணிக்கின்றானோ நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கை உண்டு. மேலும், நாம் அவனை மறுமை நாளில் குருடனாக எழுப்புவோம். "எனது இரட்சகனே! பார்வையுடையவனாக இருந்த என்னை நீ ஏன் குருடனாக எழுப்பினாய்?" என அவன் கேட்பான். "அவ்வாறுதான். நமது வசனங்கள் உன்னிடம் வந்தன. அவற்றை நீ மறந்து விட்டாய். இவ்வாறே இன்றைய தினம் நீயும் மறக்கடிக்கப்படுகின்றாய்" என (அல்லாஹ்) கூறுவான்.

(20:124-126)

**(5) இவ்வுலகிலேயே தண்டனை பெறல்:**

அல்லாஹ்வின் கட்டளைக்கும், அவன் தூதரின் கட்டளைக்கும் மாறு செய்பவர் நிலை குறித்துப் பின்வரும் நபிமொழி தெளிவுபடுத்துகின்றது.

ஒரு மனிதர் இடது கரத்தினால் சாப்பிடக் கூடியவராக இருந்தார். அவருக்கு நபி(ﷺ) அவர்கள் வலது கரத்தினால் சாப்பிடுமாறு பணித்தார்கள். அம்மனிதர் தனது வலது கரத்தினால் சாப்பிட முடியுமாயிருந்தும் தனது பெருமையின் காரணமாக "முடியாது!" என மறுத்து விட்டார். அப்போது நபியவர்கள், "அப்படியா? அது இயலாமலே போகட்டும்!" எனக் கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலிருந்து அம்மனிதர் தன் கையை உயர்த்த முடியாதவராக மாறி விட்டார். (முஸ்லிம் 2021)

இது நபியின் கட்டளைக்கு மாறு செய்தவர் இவ்வுலகத்திலேயே தண்டிக்கப்பட்டார் என்பதற்கான சான்றாகும்.

எனவே, இஸ்லாம் எனும் வாழ்க்கைத் திட்டம் மானிட வர்க்கத்தின் மகிழ்ச்சியான வாழ்வுக்கும், மறுமையின் ஈடேற்றத்திற்கும் அழகிய நடைமுறைகளை வழிகாட்டியுள்ளது. அவற்றைப் பின்பற்றி இம்மை-மறுமையில் வெற்றி பெற முயல வேண்டும்.

**'தங்கள்'மார்கள்-மூதாதையர்களைப் பின்பற்றுவோரின் மறுமை நிலை:**

அல்லாஹ்வுடைய வேதத்தையும், நபியவர்களின் வழிகாட்டலையும் பின்பற்றுவதே ஒவ்வொரு முஸ்லிமினதும் இம்மை-மறுமை வெற்றியை நிச்சயிக்கக் கூடியது என்பதை மேலே நாம் பார்த்தோம்.

இன்று சிலர் பெயரளவில் தங்களை இஸ்லாமிய வாதிகள் என்று சொல்லிக்கொண்டு செயல்பாட்டில் முற்றிலும் மாறுபட்ட வகையில் இஸ்லாம் வேரோடும், வேரடி மண்ணோடும் களையெடுத்த தனி மனித வழிபாட்டைக் குர்ஆனையும், ஸுன்னாவையும் விட முதன்மைப்படுத்தி வருகிறார்கள். 'தங்கள்'மார்கள் மற்றும் 'வாப்பா நாயகம்' போன்ற மனித ஷைத்தான்களின் அழுக்குக் கால்களைக் கழுவிக் குடிப்பதும், அதை மகா பெரிய பறக்கத்தாகக் கருதுவதும் அவர்களை இறைத் தன்மைக்குக் கொண்டு செல்வதும் இஸ்லாத்தின் அகீதாக் கோட்பாட்டைத் தகர்த்தெறிகின்ற விசமத்தனமாகும்.

அல்குர்ஆனையும், அஸ்ஸுன்னாவும் தமது வாழ்க்கையின் அடிநாதமாய்ப் பின்பற்றும் மக்களைக் கொலை செய்வதும் பள்ளிவாசல்களை இடித்து அதைத் தீக்கிரையாக்குவதும் இன்று பாவா பக்தர்களின் தொண்டுகளாய்ச் செய்யப்பட்டு வருகிறது. அரசியலில் முஸ்லிம்களின் உரிமை விடயத்தில் பேசுவதை விட்டும் ஊமைச் ஷைத்தான்களாக இருக்கும் பல அரசியல்வாதிகள் இக்கொடூர சம்பவங்களின் பின்னணியாக இருப்பதுதான் அதிர்ச்சியான தகவலாகும். இந்த உலகம் அழிந்து போவது அல்லாஹ்வுக்குப் பெரியதொரு விடயமல்ல.

ஆனால்;

"ஒரு முஃமினைக் கொலை செய்வது அல்லாஹ்விடம் மகா பெரிய குற்றமாகும் என நபி(ﷺ) அவர்கள் எச்சரித்தார்கள்." (முஸ்லிம்)

மேற்படி நபியவர்களின் எச்சரிக்கை ஒரு முஃமினுடைய உயிர் எவ்வளவு பெறுமானம் பெற்றது என்பதை விளங்கிக்கொள்ளலாம். அவ்வாறான உயிர்கள் இன்று விலை மதிப்பற்ற பொருளாக மாறிக்கொண்டிருக்கின்றன. தமது வழிகெட்ட கொள்கையைத் துரும்பாகப் பயன்படுத்தி, அதனூடாக ஒரு முஃமினைக் கொலை செய்வது எவ்வளவு அக்கிரமமான செயலாகும். இதற்கான தீர்ப்பை அல்லாஹ்வே வழங்க வேண்டும்.

தூய்மையான இஸ்லாமிய வழிமுறைகளை விட்டு விட்டு தங்கள்மார்களையும், வாப்பா நாயகத்தையும் பின்பற்றி நடந்தவர்களின் மறுமை நிலை தொடர்பாக பின்வரும் வசனம் தெளிவுபடுத்துகின்றது.

அல்லாஹ் கூறுகிறது;

**அவர்களின் முகங்கள் நரகத்தில் புரட்டப்படும் நாளில், "நாங்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டிருக்கக் கூடாதா? மேலும், இத்தூதருக்கும் கட்டுப்பட்டிருக்கக் கூடாதா?" என்று கூறுவார்கள். மேலும், "எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நாம் எங்கள் தலைவர்களுக்கும், எங்கள் பெரியார்களுக்கும் கட்டுப்பட்டோம். அவர்கள் எங்களை வழிகெடுத்து விட்டனர்" என்று கூறுவர். "எங்கள் இரட்சகனே! நீ அவர்களுக்கு வேதனையில் இரு மடங்கு வழங்குவாயாக! இன்னும் அவர்களை நீ பெருமளவில் சபிப்பாயாக" (என்றும் கூறுவர்.) (33:66-68)**

எனவே அல்குர்ஆனையும், நபியின் வாழ்வான ஸுன்னாவையும் பின்பற்றி சுவனத்தை அடைய முயல்வோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கப்படும் ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் ~ பகுதி - 2 தொடர் -3

# மூஸா நபியும், மலக்குல் மௌத்தும்

● இஸ்மாயில் (ஸலபி)

மூஸா நபியும், மலக்குல் மவ்த்தும் சம்பந்தப்பட்ட ஹதீஸைப் பல்வேறுபட்ட வழிகெட்ட பிரிவினரும் ஆரம்ப காலத்தில் மறுத்து வந்துள்ளனர். இந்த ஹதீஸ் குர்ஆனுக்கு முரண்படுகின்றது என்று கூறி மறுக்கப்படுவது தவறு என்பதை நாம் தெளிவுபடுத்தி வருகின்றோம்.

சென்ற தொடர்களில்;

நபிமார்களின் மரணம் சாதாரண மனிதர்களின் மரணத்துடன் மாறுபட்டது;

மலக்குகள் மனித ரூபத்தில் நபிமார்களிடம் வருகை தந்துள்ளனர்;

தன்னிடம் மனித ரூபத்தில் வந்த மலக்கை (மூஸா நபி அடித்ததைத்) தீடிரென நடந்த ஒரு நிகழ்வு என்ற அடிப்படையில் மறுக்க வேண்டிய அவசியமில்லை;

மூஸா நபி மரணத்தை வெறுத்தார் என்று காரணம் கூறியும் இந்த ஹதீஸை மறுக்க முடியாது;

ஆதம் (ﷺ) அவர்கள் மரணமேயற்ற வாழ்வுக்கு ஆசைப்பட்டுள்ளார்;

மூஸா நபி உயிருக்குப் பயந்து ஊரை விட்டும் ஓடியுள்ளார்;

அல்லாஹ்விடம் பேசும் போதே தனது கைத் தடி பாம்பு போன்று நெளிந்ததும் திரும்பிப் பார்க்காமல் ஓடியுள்ளார்;

சூனியக்காரர்களின் கயிறுகளும், தடிகளும் பாம்புகள் போல் தோற்றமளித்ததைக் கண்டு பயந்துள்ளார்;

ஃபிர்அவ்னிடம் சென்று பிரச்சாரம் செய்யுமாறு அல்லாஹ் கட்டளையிட்ட போது அவன் தன்னைக் கொலை செய்து விடுவான் என்ற தனது அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள் என்றெல்லாம் குர்ஆன் கூறுகின்றது. இந்த ஹதீஸை மறுப்பவர்கள் எடுத்து வைக்கும் வாதங்களையேற்றால் மேலே குறிப்பிட்டவை போன்ற குர்ஆன் கூறும் வரலாறுகளையும் மறுக்கும் நிலை தோன்றும்.

எனவே, ஆதாரபூர்வமான ஹதீஸையும் தவறான வாதத்தின் அடிப்படையில் மறுத்துக் குர்ஆனையும் மறுக்கும் மனநிலைக்குச் செல்லாமல் ஹதீஸையும் ஏற்றுக் குர்ஆனையும் ஏற்று இரண்டுக்கும் மத்தியில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதே நேரிய வழியாகும் என்பதைப் பார்த்தோம். தொடர்ந்தும் இந்த ஹதீஸை மறுக்கும் சகோதரர் பீஜே அவர்கள் கூறுவது போல் மூஸா நபி மரணத்தை வெறுத்தார்களா? என்பது பற்றி ஆராய்வோம்!

**மூஸா நபி மரணத்தை வெறுத்தார்களா?**

இந்த ஹதீஸ் மூஸா நபி மரணத்தை வெறுத்ததாகக் கூறுகின்றது. ஒரு நபி மரணத்தை வெறுக்க மாட்டார். மரணம் வந்தால் உடனே அதற்குத் தயாராகி விடுவார்கள் என்ற அடிப்படையில் கேள்வி எழுப்புகின்றார்.

இந்த ஹதீஸ் மூஸா நபி மரணத்தை வெறுக்கவில்லை என்பதைத்தான் தெளிவாகக் கூறுகின்றது. தான் இப்போது மரணிப்பதா? அல்லது தாமதித்து மரணிப்பதா? என்று தீர்மானிக்கும் அதிகாரத்தை அல்லாஹ் நபிமார்களுக்கு வழங்கியுள்ளான். ஏனையோர் அறியாமல் மரணிப்பது போன்று நபிமார்கள் மரணம் பற்றி அறியாமல் மரணிப்பதில்லை. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதியைத்தான் மூஸா நபி பயன்படுத்தினார்கள்.

மூஸா நபி மலக்கைத் தாக்கிய போது அவர் அல்லாஹ்விடம் சென்று மரணத்தை விரும்பாத ஒரு அடியானிடம் என்னை நீ அனுப்பி விட்டாய் என்று கூறுகின்றார்கள். இந்த வாசகம் மூஸா நபி மரணத்தை விரும்பவில்லை என்றுதான் கூறுகின்றது. இதன் பின் மூஸா நபிக்கு நீண்ட காலம் வாழும் வாய்ப்பை அல்லாஹ் அளிக்கின்றான். ஒரு மாட்டில் கை வைத்தால், பல்லாயிரம் முடிகள் கைக்குள் அடங்கலாம். அத்தனை ஆண்டுகள் வாழ விரும்பினால் வாழலாம் என்ற நிலை வந்த போதும் மூஸா நபி மரணத்தைத் தேர்ந்தெடுக்கின்றார்கள் என்றால், அவர் மரணத்தை வெறுத்தார் என்று கூற முடியுமா?

நடந்த ஒரு நிகழ்ச்சி பற்றி முடிவு செய்யும் போது இறுதிச் செய்திதான் முக்கியத்துவம் பெறும்.

உதாரணமாக, ஒருவரிடம் ஒரு பெண் கடன் கேட்கிறாள். அவர் கடன் தருவதாகவும், அந்தப் பெண் தனது ஆசைக்கு இணங்க வேண்டும் என்றும் நிபந்தனையிடுகின்றார். இவரைப் பற்றி இந்தச் செய்தியை மட்டும் படித்தால் இவர் மிக மோசமான கீழ்த் தரமான மனிதராகவே இருப்பார் என்றுதான் கூற வேண்டும். எனினும் இந்த மனிதர் தவறுக்கு நெருங்கும் போது, அந்தப் பெண் "அல்லாஹ்வுக்கு அஞ்சிக்கொள்!" என்று கூறியதும் தவறிலிருந்து ஒதுங்கிக்கொள்கின்றார். இவரை இஸ்லாம் நல்ல மனிதர் என்றுதான் கூறுகின்றது. இந்த ஹதீஸைப் போன்று மூஸா நபி மலக்கை அடித்திருந்தாலும் அவர் மரணத்தை வெறுத்தார் என்று கூற முடியாது. பல்லாயிரம் ஆண்டுகள் வாழ அவகாசம் கிடைத்தும் கூட "இப்போதே மரணிக்கத் தயார்!" என்று கூறி மரணத்தை நேசித்துள்ளார்கள் என்றுதான் ஹதீஸ் கூறுகின்றது.

**மூஸா நபியின் ஆசை என்ன?**

நபிமார்கள் மரணிக்கும் இடத்தில்தான் அடக்கம் செய்யப்படுவார்கள். மூஸா நபி மரணத்தை வெறுக்கவில்லை. எனினும் பைத்துல் முகத்திஸுக்கு அருகில் புனித பூமியில் மரணிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். ஃபிர்அவ்னின் ஆட்சியில் அடிமைகளாக இருந்த மக்களை மீட்டுப் பலஸ்தீனுக்கு அழைத்துச் செல்லும் போராட்டத்தை முன்னெடுத்த அவர்கள் தன் இலட்சியக் கனவான புனித பூமியை அடைந்து, அந்தப் புனித பூமியிலேயே மரணிக்க ஆசைப்பட்டது சராசரி போராளியின் நியாயமான ஆசை என்பதை எவரும் அறியலாம்.

இப்போதே என் உயிரை எடுத்துக்கொள்! எனினும் (பைத்துல் முகத்திஸ் எனும்) புனித பூமிக்கு நெருக்கமாக அதிலிருந்து கல்லெறியும் தூரத்தில் தன் அடக்கஸ்தலம் அமைந்திடச் செய்யுமாறு அல்லாஹ்விடம் வேண்டினார்கள்.

(இந்தப் பகுதியைத்தான் பீஜே தனது தர்ஜமாவில் தமிழாக்கம் செய்யாது விட்டுள்ளார்.)

எனவே மூஸா நபி நீண்ட காலம் வாழ ஆசைப்படவில்லை. பைத்துல் முகத்திஸ் அருகில் மரணிக்கவே விரும்பினார்கள். இந்த ஹதீஸின் முக்கிய பகுதியே இதுதான். இமாம் புகாரி(ரஹ்) அவர்கள்

67 - باب من أحب الدفن ليلا في
الأرض المقدسة أو نحوها

'யார் இரவில் புனித பூமியில் அடக்கம் செய்யப்படுவதை அல்லது அது போன்றதை விரும்புகின்றாரோ...' என்ற தலைப்பில்தான் இந்த ஹதீஸை இடம்பெறச் செய்துள்ளார்கள்:

(இதே ஹதீஸ் மற்றும் சில தலைப்புக்களிலும் இடம்பெற்றுள்ளது.)

இந்தப் பகுதி எப்படித் தர்ஜமாவில் தவிர்க்கப்பட்டது என்பது ஆச்சரியமாகவே உள்ளது.

மூஸா நபியின் இந்த ஆசையை அல்லாஹ் நிவர்த்தி செய்தான். அவர்கள் புனித பூமியில்தான் மரணித்தார்கள் என்பதை ஹதீஸின் இறுதிப் பகுதி உறுதி செய்கின்றது.

நான் அங்கு (பைத்துல் மக்திஸில்) இருந்திருந்தால் சாலையோரமாகச் செம்மணற் குன்றின் கீழே அவரது மண்ணறை இருப்பதை உங்களுக்குக் காட்டியிருப்பேன் என நபி(ﷺ) அவர்கள் கூறியது இதைத் தெளிவுபடுத்துகின்றது.

**மூஸா நபி மரணத்தை அறியாதிருந்தாரா?**

இந்த நிகழ்ச்சி நடக்கும் வரை மரணத்தைப் பற்றி மூஸா நபி அறிந்திருக்கவில்லை என இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹதீஸ் கூறுகின்றது. எனவே இந்த ஹதீஸை ஏற்க முடியாது என பீஜே வாதிடுகின்றார்.

இது பற்றிக் கூறும் போது;

"ஒவ்வொரு மனிதனும் மரணித்தே ஆக வேண்டும் என்பது ஒட்டு மொத்த மனிதரும் அறிந்து வைத்துள்ள உண்மை. இந்த உண்மை ஒரு நபிக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஒரு முஸ்லிம் நம்ப வேண்டிய அடிப்படைகளில் ஒவ்வொருவரும் மரணத்தைச் சுவைக்க வேண்டும் என்பதும் முக்கியமானது. ஆனால் மூஸா நபி அவர்கள் மரணத்தை நெருங்கும் வரை இந்தச் சாதாரண உண்மையை அறியாதவராக இருந்துள்ளார் என்று இந்த ஹதீஸ் கூறுகிறது. மனிதன் மரணித்தே ஆக வேண்டும் என்ற அடிப்படையான விஷயம் கூட கடைசி நேரத்தில் அல்லாஹ் சொல்லிக் கொடுத்த பிறகு தான் அவருக்குத் தெரிய வந்துள்ளது என்றால் தனது சமுதாயத்துக்கு அவர்கள் மரணம் பற்றியோ மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கை பற்றியோ எதுவும் சொல்லித் தரவில்லை என்பதும் இந்த ஹதீஸுக்குள் அடங்கியுள்ளது."

பீஜே எந்த ஆதாரத்தை முன்வைத்து இப்படி எழுதியுள்ளார் என்பதை முதலில் நாம் விளங்கிக் கொண்டு அதன் பின் அந்த விளக்கம் எவ்வளவு கேலிக்குரியது என்று பார்ப்போம்.

"நீ மீண்டும் அவரிடம் செல். காளை மாட்டின் முதுகில் அவரது கையை வைக்கச் சொல். அவரது கையின் அடியில் உள்ள ஒவ்வொரு முடிக்கும் ஒரு வருடம் என்ற அடிப்படையில் அவருக்கு வாழ்நாள் கொடுக்கப்பட்டதாகக் கூறு" என அல்லாஹ் மலக்குல் மவ்த்திடம் கூறுகின்றான். அதை அவர் கூறியதும் மூஸா நபி அல்லாஹ்விடம், (தும்ம மாதா) "அதன் பின்னர் என்ன?" என்று கேட்கிறார்கள். அல்லாஹ் "மரணம்தான்!" என்றதும், "அப்படியென்றால் இப்போதே (மரணிக்கிறேன்!)" என்று கூறித்தான் தனது புனித பூமியில் மரணிக்க வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைக்கின்றார்கள்.

"பிறகு என்ன?" என மூஸா நபி கேட்டதை வைத்துத்தான் அவர் அது வரை மரணத்தைப் பற்றி அறியாமலேயே இருந்ததாக இந்த ஹதீஸ் கூறுகின்றது எனப் பீஜே வாதிட்டு ஹதீஸை மறுக்கின்றார்.

ஒரு ஹதீஸை இப்படித்தான் புரிந்துகொள்வதா? இப்படி விளங்க முற்பட்டால் பல குர்ஆன் வசனங்களும் அல்லாஹ்வின் அறிவு ஆற்றல் அனைத்தும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமைந்து விடும். அல்லாஹ் சோதித்து அறிவதாகக் கூறும் வசனங்கள், அல்லாஹ் வானவர்களிடம் கேட்கும் கேள்விகள் அனைத்தையும் பீஜே விளங்குவது போல் விளங்க முற்பட்டால் குஃப்ரில்தான் விழ நேரிடும். எனவே, "பிறகு என்ன?" என மூஸா நபி கேட்ட கேள்வியை வைத்து அது வரை மரணத்தைப் பற்றி அவர் அறியாமல் இருந்ததாக இந்த ஹதீஸ் கூறுவதாக பீஜே வாதிப்பது தவறாகும்.

அல்லது ஒரு கிராமத்தின் முகடுகள் தலைகீழாகக் கவிழ்ந்திருக்கும் போது அதனைக் கடந்து சென்ற ஒருவரின் நிலையை நீர் கவனிக்கவில்லையா? "இது அழிந்த பின் இதனை எவ்வாறு அல்லாஹ் உயிர்ப்பிப்பான்" என (வியப்போடு) அவர் கேட்டதும் அல்லாஹ் அவரை நூறு ஆண்டுகள் உயிரற்றவராக ஆக்கி, பின்னர் அவரை உயிர்ப்பித்து "எவ்வளவு காலம் நீர் (இந் நிலையில்) இருந்தீர்?" என்று கேட்டான். அ(தற்க)வர், "நான் ஒரு நாள் அல்லது ஒரு நாளின் சிறு பகுதியைக் கழித்திருப்பேன்' என்றார். (அதற்கு அல்லாஹ்) "இல்லை! நீர் நூறு ஆண்டுகளைக் கழித்துள்ளீர். உமது உணவையும், உமது பானத்தையும் பார்ப்பீராக! அவை கெட்டு விடவில்லை. (இறந்து உக்கிப் போன) உமது கழுதையையும் பார்ப்பீராக! என்றான். மனிதர்களுக்கு உம்மை ஓர் அத்தாட்சியாக ஆக்குவதற்காக (இவ்வாறு நாம் செய்தோம்.) மேலும் (அதன்) எலும்புகளை எவ்வாறு நாம் ஒன்று திரட்டிப் பின்னர் அதற்கு எவ்வாறு சதையைப் போர்த்துகின்றோம் என்பதையும் பார்ப்பீராக! அவருக்குத் தெளிவு ஏற்பட்ட போது, "நிச்சயமாக அல்லாஹ் யாவற்றின் மீதும் பேராற்றலுடையவன் என்பதை நான் அறிவேன்' என்று கூறினார். (2:259)

இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர் 'உஸைர்' என்று கூறப்படுகின்றது. அவர் யார் என்பதில் உடன்படாவிட்டாலும் அவர் ஒரு நல்ல மனிதர் என்ற விடயத்தில் பீஜே முரண்பட மாட்டார் என்று உறுதியாக நம்புகின்றேன். இந்த வசனத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்து போன ஒரு ஊரைப் பற்றி ஒரு நபி அல்லது நல்ல மனிதர் கூறும் போது இது அழிந்த பின் இதை அல்லாஹ் எவ்வாறு உயிர்ப்பிப்பான்?) என்று கேட்கின்றார்.

நீண்ட காலம் வாழ அவகாசம் அளிக்கப்பட்ட போது, "மூஸா நபி அதன் பின் என்ன?" எனக் கேட்டார். இதை வைத்து அது வரை அவர் மரணத்தைப் பற்றி அறிந்தே இருக்கவில்லை என இந்த ஹதீஸ் கூறுகின்றது என்று பீஜே வாதிப்பது போல் இந்த வசனத்தை வைத்து;

"அழிந்த ஊரை அல்லாஹ் எப்படி உயிர்ப்பிப்பான்?" என்று இவர் கேட்டுள்ளார். இவர் அல்லாஹ்வின் ஆற்றலில் சந்தேகம் கொண்டதாக இந்தச் சம்பவம் தெரிவிக்கின்றது. ஊர் என்ன! உலகமே அழிந்த பின் அல்லாஹ் அனைவரையும் உயிர் கொடுத்து எழுப்புவான் என்று நம்ப வேண்டியது முஸ்லிம்களின் அடிப்படை நம்பிக்கைகளில் ஒன்று. மறுமையை நம்பும் ஒருவர் இறந்த ஊரை எப்படி அல்லாஹ் உயிர்ப்பிப்பான் என்று கேட்க மாட்டான். ஒரு நபி (அல்லது பீஜே தனது தர்ஜமாவின் 79 ஆம் குறிப்பில் குறிப்பிடுவது போன்று (மிகச் சிறந்த நல்லடியார்) மறுமையைப் பற்றியும் அல்லாஹ்வின் உயிர் கொடுக்கும் ஆற்றலைப் பற்றியும் அறியாது இருந்தார் என்று இந்த ஆயத்துக் கூறுகின்றது. எனவே இந்த ஆயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறப் போகின்றார்களா? அல்லது ஹதீஸையும், குர்ஆனையும் மறுக்காமல் இரண்டையும் இணக்கப்பாடாகப் புரிந்து கொண்டு நேர்வழி செல்வதா? என்று சகோதரர்கள் சிந்திக்க வேண்டும்.

அல்லாஹ்வின் ஆற்றலை அறியாத, அப்படி இல்லை என்றால் அல்லாஹ்வின் ஆற்றலில் சந்தேகம் கொண்டு விட்டார். எனவே இவர் காஃபிர் எனக் கூற வேண்டும். ஆனால் அந்தக் கருத்து குர்ஆனின் கூற்றுக்கு முரணானதாகும். இதற்கு மாற்றமாக அவர் அல்லாஹ்வின் ஆற்றலை அறிந்திருந்தார் என ஏற்றுக்கொள்வதென்றால் மூஸா நபியின் இந்தக் கேள்வி அவர் மரணத்தை அறியாதிருந்ததாகக் கூறுகின்றது என எப்படி மறுக்க முடியும்? இந்த வசனத்தை ஏற்க முடியுமானால் ஹதீஸையும் ஏற்கலாம்; ஹதீஸை மறுப்பதாயின் இந்த வசனத்தையும் மறுக்க நேரிடும். இந்த வசனத்தை ஏற்று மூஸா நபி பற்றிய ஹதீஸை மறுப்பது முரண்பாடாகும். இரண்டையும் மறுத்துக் குப்ருக்குச் செல்வதா? ஒன்றை மறுத்து மற்றதை ஏற்று முரண்பாட்டில் வாழ்வதா? இரண்டையும் ஏற்று நேர்வழி செல்வதா?

இதற்கு மற்றுமொரு சம்பவத்தைக் கூற முடியும்.

ஸகரிய்யா நபி முதுமையை அடைந்த நிலையில், குழந்தைப் பாக்கியம் அற்ற நிலையில் அல்லாஹ்விடம் துஆச் செய்கின்றார்கள்.

அல்லாஹ் அவருக்கு நற்செய்தி கூறும் போது;

"உனக்கு ஒரு ஆண் குழந்தை கிடைக்கும். அதற்கு யஹ்யா என்பது பெயர். இதற்கு முன் இந்தப் பெயரில் எவரும் வாழ்ந்து இல்லை. அந்த மகன் நபியாகவும், தலைவராகவும், கற்பொழுக்கமுள்ளவராகவும் இருப்பார்" என்று முழுமையான ஒரு விளக்கம் அளிக்கின்றான்.

இந்த விளக்கத்தின் பின்னரும் அவர்;

அ(தற்க)வர், **"எனது இரட்சகனே! எனது மனைவியோ மலடியாகவும் ஆகி, நானும் முதுமையின் எல்லையை அடைந்திருக்க எனக்கு எவ்வாறு ஒரு மகன் உண்டாக முடியும்?" எனக் கேட்டார். (19:8)**

அல்லாஹ் அதற்கு;

**"அது அவ்வாறுதான். அது எனக்கு மிக இலகுவானதாகும். நீ எப்பொருளாகவும் இல்லாதிருந்த நிலையில் இதற்கு முன் உன்னை நான் படைத்திருக்கிறேன்" என்று உமது இரட்சகன் கூறினான் என (வானவர்) கூறினார்.**

அதன் பின்னர் கூட "என் இரட்சகனே! எனக்கொரு அடையாளத்தைக் காட்டு!" என்று கேட்கின்றார். (பார்க்க: அல்குர்ஆன் 19:1-11)

மூஸா நபி கேட்ட கேள்வியை பீஜே விளக்கியது போன்று இந்தச் சம்பவத்தை நோக்கினால் நிலை என்ன? ஒரு நபி அல்லாஹ்வின் ஆற்றலில் நம்பிக்கையிழந்துள்ளார். அல்லாஹ்வே "உனக்குக் குழந்தை பிறக்கும்!" என்று முழு விபரத்தையும் கூறிய பின்னர் கூட "அது எப்படி முடியும்!? நான் முதுமையின் முடிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றேன்; என் மனைவி மலடியாக இருக்கின்றாள்" என்று கேட்கின்றார். அல்லாஹ் அனைத்துக்கும் ஆற்றல் உள்ளவன் என்று நம்புவது ஒரு முஸ்லிமின் அடிப்படை நம்பிக்கைகளில் ஒன்று. அந்த நம்பிக்கை இல்லாதவராக ஸகரிய்யா நபி இருந்துள்ளார். எப்பொருளும் இல்லாமலேயே அல்லாஹ் உலகத்தைப் படைத்தான். முதல் மனிதர் ஆதம் (ﷺ) அவர்களைத் தாய்-தந்தை இல்லாமலேயே படைத்தான் என்று எல்லா இறைத் தூதர்களும் போதித்திருக்க ஒரு நபி முதியவருக்கும், மலடிக்கும் குழந்தை எப்படிக் கிடைக்கும் என்று அல்லாஹ் கூறிய பின் அவனிடமே எதிர்த்துக் கேள்வி கேட்பதா? அது எனக்கு எளிது. ஒன்றுமே இல்லாத நிலையிலிருந்து உன்னை நான் படைக்கவில்லையா? என அல்லாஹ் கேட்ட பின்னர் அல்லாஹ்வின் வாக்குறுதியில் ஒரு நபி நம்பிக்கை வைக்காமல் அத்தாட்சி காட்டு எனக் கேட்டதாக இந்தச் சம்பவம் கூறுகின்றது என்று கூறிக் குர்ஆனையும் மறுப்பதா? அல்லது ஸகரிய்யா நபியின் ஈமானை மறுத்து அவரைக் கா∴பிராக்குவதா?

பீஜே கூறுவது போன்று ஹதீஸ்களைத் தவறான வாதங்களை இத்தகைய நம்பி மக்கள் மறுத்து வந்தால் காலப் போக்கில் இதே அடிப்படையில் குர்ஆன் வசனங்களையும் மறுப்பார்கள். அதைத்தான் பீஜே தனது திர்மிதி முன்னுரையில் ஹதீஸ்களை மறுப்போர் முன்வைக்கும் வாதங்களைக் குர்ஆன் விடயத்திலும் முன்வைக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே பீஜே அவர்களின் தவறான போக்கில் சென்று ஆதாரபூர்வமான ஹதீஸ்களை மறுத்துத் தொடர்ந்து குர்ஆனையும் மறுக்கும் மனோநிலைக்குச் சென்று அல்லது குர்ஆன் மீது நம்பிக்கையும், பற்றும் அற்ற சமூகமாக வாழும் நிலைக்குச் சென்றிடாமல் எம்மை நாம் தற்காத்துக்கொள்ள வேண்டும்.

பீஜேயின் வாதங்களை ஏற்றால் நாம் குறிப்பிட்டவை போன்ற குர்ஆனியச் சம்பவங்களையும், வசனங்களையும் மறுக்க நேரிடும். இந்தக் குர்ஆன் கூறும் சம்பவங்களை ஏற்க முடியும் என்றால், 'மூஸா நபியும், மலக்குல் மவ்த்தும்' குறித்த இந்த ஹதீஸையும் ஏற்க முடியும். குர்ஆனியச் சம்பவத்தை ஏற்போம். ஆதாரபூர்வமான இந்த ஹதீஸைப் பொறுத்த வரை பொறுத்தமற்ற காரணங்களைக் கூறி மறுப்போம் என்பது முரண்பாடான நிலையாகும்.

**மூஸா நபியின் கேள்வியின் அர்த்தம் என்ன?**

"பிறகு என்ன?" என மூஸா நபி கேட்டது, மரணத்தைப் பற்றி அவர் அறிந்தே இருக்கவில்லை என்பதைக் காட்டவில்லை. தான் விரும்பியது என்ன என்பதை இந்தக் கேள்வி மூலம் உணர்த்துகின்றார்கள். 1000 வருடம் வாழ்ந்தாலும் அதன் பின்னர் நான் மரணிக்கத் தானே போகின்றேன். நான் மரணத்தை வெறுக்கவில்லை. மரணிக்க இப்போதே நான் தயாராகத்தான் இருக்கின்றேன். எனது ஆசையெல்லாம் புனித பூமியில் மரணிக்க வேண்டும் என்பதுதான் என்று தெளிவுபடுத்துகின்றார்கள். அல்லாஹ்விடம் "மரணத்தை விரும்பாத ஒருவரிடம் என்னை அனுப்பி விட்டாய்!" என்று மலக்கு கூறினார். அது தவறு என்று அவருக்கு உணர்த்த அல்லாஹ் விரும்புகின்றான். மூஸா நபிக்கு நீண்ட ஆயுளை அளிக்கின்றான். அவரும் "தான் தற்போதே மரணிக்கத் தயார்; ஆனால், தன் மரணம் பைத்துல் முகத்தஸுக்கு அருகில் இடம்பெற வேண்டும். இதுதான் என் வேண்டுதல்" என்று கூறுகின்றார். இதன் மூலம் மூஸா நபி மரணத்தை வெறுக்கிறார் என்ற மலக்குல் மவ்த்தின் கூற்று தவறானது என்பதை அல்லாஹ் அவருக்கு உணர்த்தி விடுகின்றான்.

பல விவாதங்கள் புரிந்த பீஜே அவர்களுக்கு மூஸா நபியின் இந்தக் கேள்வி தன்னிலை விளக்கத்திற்காகக் கேட்கப்பட்டது என்ற உண்மை எப்படித் தெரியாமல் போனது என்பது ஆச்சரியம்தான்.

இது வரை நாம் கூறியதிலிருந்து மூஸா நபி மரணத்தை வெறுத்தார் என்பதும், அவர் இந்த நிகழ்ச்சி வரை மரணம் பற்றி அறியாமல் இருந்தார் என்றும் இந்த ஹதீஸ் கூறுகின்றது என்றும் பீஜே வாதிடுவது தவறானது. இந்த வாதத்தை முன்வைத்து இந்த ஹதீஸை மறுப்பதென்றால் ஏராளமான அல்குர்ஆன் வசனங்களையும் மறுக்க நேரிடும் அளவுக்கு ஆபத்தான வாதங்கள் இவை என்பதை நீங்கள் தெளிவாக அறிந்திருப்பீர்கள்.

இது தொடர்பான மற்றும் சில ஐயங்களை அடுத்து நோக்குவோம். இன்ஷா அல்லாஹ்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி ஹதீஸ்களும், சமூகத்தில் அதன் தாக்கங்களும்

ஸலபி

குர்ஆன், ஹதீஸ் என்ற அடிப்படையான இரண்டு மூலாதாரங்களின் மீதுதான் இஸ்லாம் எனும் கட்டடம் எழுப்பப்பட்டுள்ளது. குர்ஆனைப் பொறுத்தவரையில் அது அல்லாஹ்வின் "கலாம்" பேச்சு என்பதால் அதில் யாரும் எந்தக் குளறுபடிகளும் செய்துவிட முடியாது. 1400 வருடங்களாக எத்தகைய இடைச்செருகல் களுக்கோ, கூட்டல் குறைத்தல்களுக்கோ உள்ளாகாமல் அட்சரம் பிசகாமல் அப்படியே அது பாதுகாக்கப்பட்டுள்ளது.

ஆனால், இரண்டாவது மூலாதாரமான ஹதீஸைப் பொறுத்தவரை அதன் கருத்து வஹி மூலம் பெறப்பட்டதாயினும் வாசக அமைப்பு நபிகளாருடையதாகும். நபி(ஸல்) அவர்களது மரணத்திற்குப் பின்னர் ஹதீஸை அறிவித்த அறிவிப்பாளர்களின் சில பலவீனங்களினால் ஹதீஸின் சில வாசகங்கள் விடுபட்டு, அல்லது மேலதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இவை அறிஞர்களால் ஒப்பீட்டாய்வின் மூலம் திருத்தப்பட்டுமுள்ளன. அதேவேளை இஸ்லாத்தின் எதிரிகளும், இஸ்லாத்தை அறியாத அறிவிலிகளும் சுயநலவாதிகளும் ஹதீஸ் என்ற பெயரில் போலியான செய்திகளை இட்டுக்கட்டி நபியவர்களின் பெயரில் பரப்பினர்.

இவ்வாறு பரப்பப்பட்ட "மவ்ழூ"ஆன ஹதீஸ்களின் விபரமும் திறனாய்வுக்கலை அறிஞர்கள் மூலம் அடையாளப்படுத்தப்பட்டன. எனினும் ஹதீஸ் கலையுடன் அதிக தொடர்பு அற்ற உலமாக்கள் தமது உரைகளுக்கு அழகு சேர்ப்பதற்காக இட்டுக்கட்டப்பட்ட பல்வேறு அறிவிப்புக்களை மக்கள் மத்தியில் பரப்பி அவற்றுக்கு ஒரு பிரபலத்தையும், சமூக அங்கீகாரத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

"என்மீது யார் நான் கூறாததை வேண்டுமென்றே இட்டுக்கட்டி கூறுகின்றாரோ அவர் தனது தங்குமிடத்தை நரகத்தில் தேடிக் கொள்ளட்டும்" என்ற கருத்தில் வந்துள்ள ஏராளமான அறிவிப்புக்கள் குறித்து இவர்களுக்கு அக்கறை இல்லை.

"ராவிகள்" எனப்படும் ஐந்து இலட்சம் ஹதீஸ் அறிவிப்பாளர்களின் வாழ்வை ஆராய்ந்து 'இட்டுக்கட்டப்பட்டன' என இமாம்கள் ஒதுக்கி இருப்பவற்றை நாம் மீண்டும் மக்கள் மன்றத்திற்குக் கொண்டு வருகின்றோமே என்ற கவலையும் இவர்களுக்கில்லை.

இத்தகைய போலி ஹதீஸ்கள் மக்கள் மன்றத்தில் பரவி பல்வேறுபட்ட சீரழிவுகளை ஏற்படுத்தியுள்ளன. அவற்றை மிகச் சுருக்கமாக சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

**அகீதா ரீதியிலான சீரழிவுகள்:**

இஸ்லாமிய அடிப்படையான அகீதாவுக்கே வேட்டுவைக்கும் பல்வேறு போலி ஹதீஸ்கள் மக்கள் மத்தியில் பிரபலம் பெற்றுள்ளன. இஸ்லாமிய அகீதாவுக்கு நேர் முரணான அத்வைத, சிந்தனைகளைப் பேசுவோரும் தமது வாதத்திற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறுபட்ட போலி ஹதீஸ்களையே ஆதாரங்களாக முன்வைக்கின்றனர்.

'யார் தன்னை அறிந்து கொண்டானோ அவன் தனது இரட்சகனை அறிந்து கொண்டான்'

இது எத்தகைய அடிப்படையுமற்ற இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும். அறிஞர் சுயூத்தி (ரஹ்) அவர்கள் தனது "தய்லுல் மவ்ழூஆத்" எனும் நூலிலும் (263), ஷெய்க் முல்லா அலிகாரி(ரஹ்) தனது "மவ்ழூஆத்"எனும் நூலிலும் இதை இடம்பெறச் செய்துள்ளனர்.

இவ்வாறே "நான் அறியப்படாத பொக்கிஷமாக, புதையலாக இருந்தேன். நான் அறியப்பட வேண்டும் என்று விரும்பினேன். எனது படைப்புக்களைப் படைத்தேன்" என அல்லாஹ் கூறுவதாக இடம்பெறும் இட்டுக்கட்டப்பட்ட செய்தியும், அத்வைதம் பேசுபவர்களால் பெரிதும் ஆதாரமாக எடுத்துப் பேசப்படுகின்றது. ஆனால் இது இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும். (பார்க்க : ஸில்ஸிலதுல் அஹாதீதுல் ழயீபா வல்மவ்ழூஆ, எண்: 66)

இவ்வாறே, ஈஸா(அலை) அவர்கள் மரணித்து விட்டதாக வாதிட்டு, "காதியானி" மதத்தை தோற்றுவித்த மிர்சா குலாம் அஹ்மத் எனும் பொய்யனைக் காதியானிகள், மஹ்தியாகவும், மஸீஹாகவும் சித்தரிக்கின்றனர். இவர்கள் தமது தவறான வாதத்திற்கு "ஈஸா(அலை) அன்றி மஹ்தி வேறில்லை" என்ற இப்னுமாஜாவில் இடம்பெறும் ஹதீஸையே எடுத்து வைத்துள்ளனர். இது "முன்கர்" என்ற தரத்திலுள்ள அறிவிப்பாகும். இமாம் இப்னுல் கையும் ஜவ்ஸி (ரஹ்) அவர்கள் தமது "அல்வாஹியாத்" என்ற நூலிலும் (1447) அறிஞர் ஷௌகானி தமது "அஹாதீதுல் மவ்லூஆத்" என்ற நூலிலும் இடம்பெறச் செய்து இதன் போலித் தன்மையைத் தெளிவுபடுத்தியுள்ளனர். (பார்க்க: ஸில்ஸிலா 1/175-176, எண்: 77)

**தவஸ்ஸுல்:**

அல்லாஹ்விடம் நாம் நேரடியாகவே பிரார்த்திக்க வேண்டும். இந்த அமைப்பில்தான் அல்குர்ஆனில் இடம்பெறும் அனைத்து துஆக்களும் அமைந்துள்ளன. ஆனால் சிலர் அன்பியாக்கள், அவ்லியாக்கள் பொருட்டால் பிரார்த்திக்கின்றனர். இந்த வழிகெட்ட நிலை தோன்றுவதற்கும் பல்வேறுபட்ட இட்டுக்கட்டப்பட்ட அறிவிப்புக்களே காரணமாக அமைந்தன.

"என் பொருட்டால் நீங்கள் வஸீலாக் கேளுங்கள். ஏனெனில் அல்லாஹ்விடத்தில் எனது அந்தஸ்து மகத்துவமானதாகும்" என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக எவ்வித அடிப்படையும் இல்லாத போலி ஹதீஸ் ஒன்று மக்கள் மத்தியில பிரபலமாகியுள்ளது.

இவ்வாறே ஆதம்(அலை) அவர்கள் நபி(ஸல்) அவர்களின் பொருட்டால் பாவமன்னிப்புக் கேட்டார்கள் என்கின்ற அல்குர்ஆனுக்கு முரணான இட்டுக்கட்டப்பட்ட அறிவிப்பும் "பொருட்டால்" பிரார்த்திப்பதற்கான வலுவான ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறான இட்டுக்கட்டப்பட்ட அறிவிப்புக்கள் மக்கள் மத்தியில் இறந்துவிட்ட நல்லடியார்களின் பொருட்டால் பிரார்த்தித்தல், அவர்களுடைய நினைவு தினங்களைக் கொண்டாடுதல், அதனை ஒட்டி கந்தூரிகள், நேர்ச்சைகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறுபட்ட இஸ்லாமிய அகீதாவுக்கு முரணான செயல்பாடுகள் உருவாகக் காரணமாக அமைந்திருப்பதைக் காணலாம்.

**சுன்னா - மறுப்பு:**

கடந்த காலத்தில் சில தனிப்பட்ட சிலரும், நவீன காலத்தில் சில குழுக்களும் சுன்னாவைப் பின்பற்ற முடியாது; குர்ஆன் ஒன்றே போதும் என்று வாதிட்டு வருகின்றனர். இவர்கள் தங்களை அஹ்லுல் குர்ஆன் என அறிவித்துக் கொள்கின்றனர். இந்த வழிகெட்ட கூட்டத்தினர் உருவாவதற்கு போலி ஹதீஸ்களே காரணமாக அமைந்தன.

இட்டுக்கட்டப்பட்ட அறிவிப்புக்கள் குர்ஆனுக்கு நேர் முரணாக அமைந்துள்ளன. அதேபோல் அவை பகுத்தறிவுக்கும் பொருத்தமற்றவையாக அமைந்துள்ளன. இதேவேளை அவை ஸஹீஹான ஹதீஸ்களுக்கும் முரண்படுகின்றன. இந்த முரண்பாடுகளைக் காணும் சிலர் ஒன்றுக்கொன்று முரண்படும் இவை இறைவனிடமிருந்து வந்திருக்க முடியாது என எண்ணுகின்றனர். ஆதலால் முரண்பாட்டுக்கு அப்பாற்பட்ட குர்ஆனை மட்டும் பின்பற்றினால் போதும் என வாதிக்கின்றனர். இந்த அகீதா ரீதியான சீர்கேடு உருவாவதற்குப் போலி ஹதீஸ்களும் அவை தொடர்பான அறிவு அற்றுப்போனமையுமே காரணமாக அமைந்துள்ளன. இது தொடர்பாக அறிஞர் அல்பானி (ரஹ்) அவர்கள் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இர்வாஉல் ஙலீலின்' முன்னுரையிலும் அறிஞர் அபூ அப்துல்லாஹ் லாகிர் நி.ஃ.மதுல்லாஹ் அவர்கள் தமது 'அல் அஹாதீதுழ் ழயீபா வல் மவ்லூஆ வஹதருஹா அஸ்ஸெய்யிஉ அலல் உம்மா' என்ற சிற்றேட்டிலும் உதாரணங்களுடன் விபரித்துள்ளனர்.

**வணக்க வழிபாடுகள்:**

அகீதாவில் பல்வேறுபட்ட சீரழிவுகளுக்கு போலி ஹதீஸ்கள் காரணமாக இருந்தது போலவே வணக்க வழிபாடுகளில் பல்வேறுபட்ட சுன்னாவுக்கு முரணான நிலைப்பாடுகள் தோன்றவும், பித்அத்கள் உருவாகவும் போலி ஹதீஸ்கள் துணை நின்றன. அவற்றுக்குச் சில உதாரணங்களை நோக்குவோம்.

**கருத்து வேறுபாடு அருளாகுமா?:**

"இமாம்களின் கருத்து வேறுபாடு சமுகத்திற்கு அருளாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக இட்டுக்கட்டப்பட்ட செய்தி ஒன்று பரவலாக மார்க்க அறிஞர்களால் பேசப்படுகின்றது. இவ்வாறே "எனது உம்மத்தின் கருத்து வேறுபாடு அருளாகும்" என்ற ஒரு செய்தியும் உண்டு.

இமாம் அப்துல் பர் அவர்கள் கூறியதாக அல்மனாவி அவர்கள் இந்தச் செய்தி பற்றி கூறும்போது இப்படி ஒரு ஹதீஸ் அறிஞர்களிடத்தில் அறியப்பட்டிருக்கவில்லை. இதற்கு ஸஹீஹானதோ, ழயீபானதோ, மவ்லூஆனதோ எந்த வகையான சனதும் (அறிவிப்பாளர் தொடரும்) இல்லை என்கின்றார்.

எந்தச் சனதும் இல்லாத இந்தச் செய்தியை இமாம் சுயூத்தி தனது 'அல்ஜாமிஉஸ் ஸகீரில்' இது எம் கைக்குக்கிட்டாத ஏதாவதொரு கிதாபிலிருந்து எடுக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறி நியாயப்படுத்த முற்படுகின்றார். போலி ஹதீஸை உறுதிப்படுத்த முயலும் இமாமவர்களின் இக்கூற்று பல்வேறுபட்ட ஸஹீஹான ஹதீஸ்கள் கூட முஸ்லிம் உலகத்தால் இழக்கப்பட்டுவிட்டன என்ற ஐயத்தை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்திருப்பதாக விமர்சிக்கப்படுகின்றது.

இமாம் இப்னு ஹஸ்ம் (ரஹ்) தமது "அல் இஹ்காம் பீ உஸுலில் அஹ்காம்" எனும் நூலில் (5/64) இந்த செய்தி பற்றிக் கூறும்போது, "இது தவறான கருத்தாகும். கருத்து வேறுபாடு அருளாக இருந்தால் கருத்து ஒற்றுமை என்பது அருள் அற்றதாக மாறிவிடும். இப்படி ஒரு முஸ்லிம் கூற முடியாது!" என்பதாகக் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு பல்வேறுபட்ட அறிஞர்களால் இச்செய்தி விமர்சிக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தி சமூகத்தில் பெரிய தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது. அறிஞர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளில் சரியானதை இனங்கண்டு பின்பற்றுவதை விட்டுவிட்டு தக்லீதின் அடிப்படையில் நடந்து கொள்வதற்கும், மத்ஹபுகளைக் கண்மூடிப் பின்பற்றுவதற்கும் இத்தகைய போலி ஹதீஸ்கள் மக்களை இட்டுச் சென்றுள்ளன. இதனால் எல்லா இபாதத்துகளிலும் கருத்து வேறுபாடு நிலவுகின்றது. அதையே மக்கள் அருளாக எண்ணி ஏற்றுக்கொண்டு செல்கின்றனர்.

**நபி வழிகள் மறுக்கப்படல்:**

சில இட்டுக்கட்டப்பட்ட அறிவிப்புக்கள் நேரடியாகவே சுன்னாவுக்கு முரணாக இருக்கும். பெரும்பாலும் தமது மத்ஹபுடைய இமாமின் கூற்றுக்கு வலு சேர்ப்பதற்காக இத்தகைய ஹதீஸ்கள் இட்டுக்கட்டப்பட்டிருக்கும். இவ்வாறு இட்டுக்கட்டப்பட்ட அறிவிப்புக்கள் அந்தந்த மத்ஹபைப் பின்பற்றுபவர்களால் பிரபலமடையச் செய்யப்பட்டிருக்கும். இதன் தாக்கத்தால் பல சுன்னத்தான அமல்கள் சமூகத்தில் மங்கி மறைந்து போயுள்ளன.

"வெள்ளிக்கிழமை தினம் இமாம் குத்பா ஓதும் போது உங்களில் ஒருவர் வந்தால் சுருக்கமான இரண்டு ரக்அத்துக்கள் தொழுது கொள்ளட்டும்" என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

தொழாமல் அமர்ந்துவிட்டவரைக்கூட எழுந்து தொழுமாறு நபி(ஸல்) அவர்கள் தமது குத்பாவின் போது கூறியுள்ளார்கள். இதன்படி இமாம் குத்பா ஓதிக்கொண்டிருந்தாலும் பள்ளிக்கு வருபவர் இரண்டு ரக்அத்து தொழுதுவிட்டுத்தான் பள்ளியில் அமர வேண்டும். ஆனால்,

கதீப் மிம்பரில் ஏறிவிட்டால் தொழுகையும் கிடையாது, பேசவும் கூடாது என்ற கருத்தில் பலவீனமான அறிவிப்பு ஒன்று உள்ளது. இந்தச் செய்தி பள்ளிகளில் அறிவிப்புப் பலகையில் மாட்டப்பட்டுள்ளது. இதனால் பள்ளிக்கு வருபவர்கள் தொழாமலே இருந்து விடுகின்றனர். மாறாக யாரேனும் தொழுதால் சில இமாம்கள் அவரை அப்படியே இருக்குமாறு நேரடியாகவே ஹதீஸுக்கு முரணாகக் கூறுகின்றனர். நபியவர்கள் இருந்தவரையும் தொழச் சொல்லியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் தொழுத பலரையும் தொழுகையை விட்டுவிட்டு அமரச் சொல்கின்றனர். இந்நடவடிக்கைக்கு போலி ஹதீஸே காரணமாகியுள்ளது.

இந்தச் செய்தியின் அறிவிப்பாளர் தொடரில் அய்யூப் இப்னு நுஹய்க் என்பவர் இடம்பெறுகின்றார். இவர் குறித்து, இமாம் அபூஹாதம் "அல்ஜரஹ் வத்த.'.தீல்" எனும் நூலில் (1/1/259) அவரது அறிவிப்புக்கள் மறுக்கப்படும் என்றும், அறிஞர் அல் ஹைதமி "அல் மஜ்மஉ"வில் (2/184) இவர் விடப்பட்டவர் என்றும், அறிஞர் அல்ஹாபிழ் இப்னு ஹஜர் "பத்ஹுல் பாரி"யில் (2/327) இது பலவீனமான அறிவிப்பு என்றும் கூறியுள்ளனர்.

இவ்வாறான பல்வேறுபட்ட அறிவிப்புக்கள் மூலம் நேரடியாக சுன்னாவுக்கு முரணான நிலைப்பாடு சமூகத்தில் மார்க்கமாகவே கடைப்பிடிக்கப்பட்டு வருவதைக் காணலாம்.

**இபாதத்துக்கள் புறக்கணிக்கப்படுதல்:**

சில இட்டுக்கட்டப்பட்ட அறிவிப்புக்கள் ஒரு இபாதத்தை விட அடுத்த இபாதத்தை உயர்வுபடுத்திப் பேசுவதாக அமைந்து விடுகின்றன. இதனால் பாதிக்கப்படும் சிலர் குறிப்பிட்ட சில வணக்கங்களைச் செய்துவிட்டு அடுத்த இபாதத்துக்களைப் புறக்கணிக்கின்றனர். உதாரணமாக திக்ர் குறித்த சில இட்டுக் கட்டப்பட்ட செய்திகள் அதில் அதீத ஈடுபாட்டையும் தொழுகை போன்ற அமல்களில் கூட பொடுபோக்கையும் ஏற்படுத்தி விடுகின்றது. சிலர் தொழுவதே திக்ருக்காகத்தான். எனவே குறிப்பிட்ட திக்ருகளைச் செய்துவிட்டால் தொழவேண்டிய அவசியம் கிடையாது என எண்ணுகின்றனர். இத்தகைய நிலையைத் தோற்றுவிக்கும் அறிவிப்புகளுக்கு;

சிந்திப்பது அரைவாசி இபாதத்தாகும். குறைந்த உணவு என்பதும் இபாதத்தாகும். (ஸில்ஸிலா 1/249) என்ற எவ்வித அடிப்படையுமற்ற பாதிலான செய்தியை உதாரணமாகக் கூறலாம்.

**முக்கியமற்றவை முக்கியத்துவம் பெறுதல்:**

சில செயற்பாடுகள் ஆகுமானவையாக அமைந்தாலும், ஷரீஆவின் அடிப்படையில் முக்கியத்துவம் பெற்றிருக்காது. ஆனால், போலியான செய்திகளில் அவற்றின் சிறப்புக்கள் பற்றி ஏராளமாக மிகைப்படுத்திக் கூறப்பட்டிருக்கும். இதனால் இஸ்லாம் முக்கியத்துவப்படுத்தாத பல செயற்பாடுகள் மிகக் கண்டிப்புடன் பின்பற்றப்படுவதையும் அது வலியுறுத்தும் உண்மையான ஷரீஆ ஓரங்கட்டப்படுவதையும் அறியலாம்.

"தலைப்பாகையுடன் தொழப்படும் ஒரு ரக்அத்து தலைப்பாகை இல்லாமல் செய்யப்படும் 70 ரக்அத்துக்களை விட சிறந்ததாகும்."

"தலைப்பாகையில் தொழும் தொழுகை 10 ஆயிரம் நன்மைக்கு சமமாகும்."

என்ற கருத்தில் பல்வேறுபட்ட இட்டுக்கட்டப்பட்ட செய்திகள் உள்ளன. இச்செய்திகளை விமர்சிக்கும் இமாம் அல்பானி அவர்கள் தலைப்பாகையுடன் தொழுவதற்குக் கிடைக்கும் கூலி ஜமாஅத்துடன் தொழப்படும் தொழுகைக்கு சமமானது என்று கூறுவது கூட அறிவுக்குப் பொருந்தாது. ஆனால் இங்கு பன்மடங்கு பெருக்கிக் கூறப்பட்டுள்ளது. ஜமாஅத்து தொழுகைக்கும் தலைப்பாகைக்கு மிடையில் சட்டத்தில் கூட பெரிய ஏற்றத்தாழ்வு உள்ளது. தலைப்பாகையை பொறுத்தவரையில் ஆகக்கூடியது அதனை முஸ்தஹப்பு எனலாம். இது இபாதத்துக் கிடையாது. ஆதத்தின் (வழக்காறின்) அடிப்படையில் வந்ததாகும். ஜமாஅத்துத் தொழுகையைப் பொறுத்தவரை ஆகக்குறைந்தது அது கட்டாய சுன்னத்தாகும். அது தொழுகையின் ருக்னுகளில் ஒன்று; அது இன்றி தொழுகை செல்லாது என்றும் கூறப்படுகின்றது. உண்மை என்னவென்றால் அது பர்ழாகும், தனியாகத் தொழுதாலும் தொழுகை சேரும். ஆனால் ஜமாஅத்தை விடுவது குற்றமாகும்.

**இப்படி இருக்கும் போது ஜமாஅத்துத் தொழுகைக்கு கிடைப்பதை விட தலைப்பாகையுடன் தொழுவதற்கு அதிக நன்மை கிடைக்குமென்று எப்படிக் கூற முடியும்?.** (பார்க்க ஸில்ஸிலா 1/ 253)

இவ்வாறான போலி ஹதீஸ்கள் மக்கள் மத்தியில் பரவி தலைப்பாகை போன்ற முக்கியத்துவமற்ற விடயங்களுக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்தன. இதனால் சிலர் தலைப்பாகை கட்டாத இமாமைப் பின்தொடர்ந்து தொழமாட்டோம் என அடம்பிடித்தனர். சிலர் பள்ளியில் பணிபுரியும் உலமாக்களுக்கு இதைக் கட்டாயமாக்கினர். மற்றும் சிலர் தலைப்பாகை கட்டினர். அதேநேரம் அதைக் கடைப்பிடிக்காத உலமாக்களை ஹதீஸைப் பின்பற்றாதவர், அதிக நன்மையில் நாட்டம் இல்லாதவர். சுன்னாவை கைவிட்டவர் என்று ஏளனமாகப் பார்த்தனர். சிலவேளை இவரது கட்டுப்பாட்டில் இருக்கும் பெண்கள் தலையை மூடாத போதுகூட கோபப்படாத அளவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பாகை இல்லாத இமாம்கள் மீது கோபப்பட்டனர்.

இவ்வாறே ஹஜ்ஜில் ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடுவது வலியுறுத்தப்படாத சுன்னாவாகும். ஆனால் ஹஜருல் அஸ்வத் அல்லாஹ்வின் கையாகும். அதைத் தொட்டவர் அல்லாஹ்வுடன் முஸாஹபா செய்தவராவார் என்ற மவ்லூஆன செய்தி மக்கள் மத்தியில் அதனை மிக முக்கிய சட்டமாக மாற்றிவிட்டது. அதன் விளைவை வருடா வருடம் ஹஜ்ஜில் அனுபவித்து வருகின்றோம்.

"யார் ஹஜ்ஜு செய்துவிட்டு என்னை ஸியாரத் செய்யவில்லையோ அவன் என்னைப் புறக்கணித்து விட்டான்." என்ற கருத்தில் ஏராளமான இட்டுக்கட்டப்பட்ட அறிவிப்புக்கள் உள்ளன. உண்மையில் ஹஜ்ஜுடன் மதீனாவுக்கு எந்த சம்பந்தமுமில்லை. ஆனால் ஹஜ் செய்யச் செல்லும் பல பாமர ஹாஜிகள் நபி(ஸல்) அவர்களது கப்ரை ஸியாரச் செய்வதைத்தான் அடிமனது ஆசையாக உள்ளத்தில் ஏந்திச் செல்கின்றனர். ஹஜ்ஜுடன் எவ்விதத்திலும் சம்பந்தப்படாத கப்று ஸியாரத் ஹஜ்ஜின் முக்கிய அம்சம் போல் மாறிவிட்டது. இவ்வாறான ஏராளமான உதாரணங்களைக் கூறலாம்.

**மூட நம்பிக்கைகள்:**

போலி ஹதீஸ்கள் பல்வேறுபட்ட மூட நம்பிக்கைகளையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி விட்டன.

"அழகிய பெண்ணின் முகத்தைப் பார்ப்பதும் பச்சைக் காட்சிகளைக் காண்பதும் கண் பார்வையை அதிகரிக்கச் செய்யும்." என்றொரு போலி ஹதீஸ் உண்டு. இது, பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கூறும் குர்ஆனின் கட்டளைக்கு நேரடியாக முரண்படுவதைக் காணலாம்.

"பணக்காரர்கள் கோழியை எடுக்கும்போது அந்த ஊரை அழித்துவிட அல்லாஹ் கட்டளையிடுவான்" என்ற செய்தி இப்னுமாஜாவில் இடம்பெற்றுள்ள இட்டுக்கட்டப்பட்ட அறிவிப்பாகும். (ஸில்ஸிலா 119)

இவ்வாறே "நீங்கள் கம்பளி ஆடையை அணியுங்கள்" என்பவை போன்ற இட்டுக்கட்டப்பட்ட செய்திகள் கம்பளி அணிவது இறையச்சத்தின் வெளிப்பாடு என்ற நிலையை ஏற்படுத்தியது.

"ஒருவர் அஸருக்குப் பின் தூங்கி அவரது அறிவு கெட்டுப்போனால் அவர் தன்னைத் தவிர பிறரை குறைகூற வேண்டாம்." என்ற செய்தி அஸருக்குப் பின் தூங்கினால் பைத்தியம் உண்டாகும் என்று கூறுகின்றது.

**தேசியவாத சிந்தனை:**

இஸ்லாமிய உலகைச் சிதைத்து, உஸ்மானிய்ய கிலாபத்தை உடைத்ததில் பெரும் பங்கு தேசியவாத சிந்தனைக்குண்டு. பல்வேறுபட்ட இட்டுக்கட்டப்பட்ட அறிவிப்புக்கள் மொழி, பிரதேச, தேசியவாத வெறி உணர்வுகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

சிலர் குறிப்பிட்ட இடங்களைச் சிறப்பித்து போலி ஹதீஸ்களை இட்டுக்கட்டினர். மொழி வெறி பிடித்த சிலர் அவரவர் பேசிய மொழிகளைப் புகழ்ந்து இட்டுக் கட்டினர். இவை மொழி, பிரதேச வேறுபாட்டை உருவாக்கியது. இதேவேளை, தேசியவாத சிந்தனைகளை நியாயப்படுத்தக்கூடிய ஒரு செய்தி உலமாக்களாலும் குறிப்பாக அரசியல் தலைவர்களாலும் பரவலாகப் பேசப்படுகின்றது.

"தாய்நாட்டை நேசிப்பது ஈமானில் உள்ளதாகும்." (ஸில்ஸிலா 36) என்பதே இந்த இட்டுக்கட்டப்பட்ட அறிவிப்பாகும். இதுபோன்ற செய்திகள் மார்க்கத்தின் பெயரிலேயே தேசியவாத சிந்தனைகள் தலைதூக்க உதவின.

இவ்வாறு நோக்கும் போது போலி ஹதீஸ்கள் முஸ்லிம் சமுதாயத்தில் பல்வேறுபட்ட தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பதை அறியலாம். இந்த சமய சமூக ரீதியிலான பாதிப்புக்களிலிருந்து சமூகத்தைக் காப்பதற்காக போலி ஹதீஸ்களை மக்களுக்கு இனம்காட்ட வேண்டிய கடமைகள் ஆலிம்களுக்குள்ளது. தாம் எழுதும் போதும், பேசும் போதும் நபி(ஸல்) அவர்கள் பெயரில் இட்டுக் கட்டப்பட்ட செய்திகளை மக்கள் முன்வைத்து விடக்கக்கூடாது என்ற அக்கறையும் அவதானமும் அவசியம் ஆலிம்களிடம் இருந்தாக வேண்டும். ஹதீஸ் என்ற பெயரில் கிடைப்பதையெல்லாம் மக்கள் மன்றத்திற்கு போட்டுவிடுவது ஹதீஸ்களின் தூய்மையைப் பாதுகாக்கப் பாடுபட்ட இமாம்களினதும், அறிஞர்களினதும் தியாகங்களை உதாசீனம் செய்வதாகவே அமைந்துவிடும். இது உலமாக்களுக்கு அழகல்ல. இந்த உண்மையை உணர்ந்து செயல்பட உலமாக்கள் முன்வருவார்களா?

**பிழை திருத்தம்**

*டிசம்பர் 09, 18 ஆம் பக்கம் இரண்டாவது நிரலின் 3 ஆவது பந்தியின் 6 வது வரியிலுள்ள 'அஞ்சிக்கொள்ளுங்கள்' என்று 'ஆக்கிக்கொள்ளுங்கள்' என இடம்பெற வேண்டும்.*

ஆ-ர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்கள் பள்ளியில் தொழுகைகளை நிறைவேற்றலாமா

அஷ்ஷைக்: எம். ஜே. எம். ரிஸ்வான் (மதனி)

பெண்கள் கொடுமைப்படுத்தப்பட்டு, பெண் பிள்ளைகள் உயிருடன் குழி தோண்டிப் புதைக்கப்பட்ட காலத்தில் அல்லாஹ்வின் தூதராக அனுப்பப்பட்ட நபி முஹம்மத்(ﷺ) அவர்கள் பெண்களுக்குரிய உரிமைகளை மிகத் தெளிவாக விளக்கினார்கள். அவற்றை முஸ்லிம்கள் காலம் காலமாகப் பேணி வந்தார்கள். அவற்றில் பெண்கள் பள்ளிக்குச் சென்று தொழுவதும் அடங்கும்.

பிற்பட்ட காலங்களில் இஸ்லாத்தில் இணைந்தவர்களாலும், மாற்று மத கலாச்சாரத்தின் தாக்கம் பெற்ற முஸ்லிம்களாலும் இவ்வாறான உரிமைகள் பறிக்கப்பட்டன என்பதே உண்மை.

பெண்ணை மணமுடிக்கின்ற போது சீதனம், சீர் வரிசை என்ற பெயரில் பெண்ணின் பொறுப்பாளியிடம் பலவந்தமாகப் பறித்தல், உயர் கல்வியைத் தொடர்வதை, இஸ்லாமிய அடிப்படையில் தொழில் புரிவதை மறுத்தல், பெண் ஒப்பமிடத் தெரிந்தால் போதும் என்ற வரட்டுத் தத்துவம் பேசுதல், கட்டாயம் முகத்தை மூட வேண்டும் என்ற போக்கு, மார்க்கத்தின் பெயரால் நிகழும் இத்தாக் கால கொடுமைகள், மாமியார் மருமகளை அடிமையாக வைத்தல், மாமனாரையும், மாமியாரையும் தலை குனிந்து மரியாதை செய்யும் படி பணித்தல் போன்ற கொடுமைகளுடன் பெண்கள் பள்ளிக்குச் சென்று தொழுவதை ஹராமாக்கும் தீர்ப்பையும் இணைத்துக் கூற முடியும்.

ஒரு காலத்தில் பெண்களுக்கு உரிமைகள் மதங்களில் மறுக்கப்பட்டதன் விளைவுதான் இன்று பெண்கள் நிர்வாணிகளாக, போகப் பொருட்களாகத் திட்டமிட்டே மாற்றப்படுகின்றனர், மாத்திரமின்றி, அது அவர்களின் உரிமை என்றும் சங்கநாதம் முழங்குவதையும், பெண்ணுரிமைக் கோஷமாகவும் முன்வைக்கப்படுகின்றது. இந்த நிலைக்கு மத குருமார்கள் வழி வகுத்தது போல பள்ளிக்குச் செல்வதை தடுக்கும் மௌலவிகளின் நடவடிக்கையும் அமைகின்றது என்பது கசப்பான உண்மை.

**பெண்களும், உலகத் தேவையும்:**

பெண்கள் தமது தேவவைகளை நிறைவேற்றிக்கொள்ள மஹ்ரமான ஆண்களுடன் வெளியில் செல்வதைக் கட்டாயப்படுத்தும் கலாசாரத்தை இஸ்லாம் உருவாக்கி இருப்பது போல மஹ்ரம் துணையின்றி செல்வதையும் சில சந்தர்ப்பங்களில் அனுமதித்தும் இருக்கின்றது.

ஆரம்ப காலப் பெண்கள் தமது மல-சலத் தேவைக்கர்க இரவு வேளைகளில் திறந்த வெளிக்கு வெளியேறிச் செல்பவர்களாக இருந்தனர். அல்லாஹ்வின் தூதரிடம் உமர்(رضي الله عنه) அவர்கள், "உங்கள் மனைவியருக்கு ஹிஜாபைக் கொண்டு வாருங்கள்!" எனக் கூறுபவர்களாக இருந்தார்கள். ஆனால் நபி(ﷺ) அவர்கள் அதைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவில்லை. நபி(ﷺ) அவர்களின் மனைவியரில் ஒருவரான ஸவ்தா பின்த் ஸம்ஆ(رضي الله عنها) அவர்கள் ஒரு இரவு வெளியேறிச் சென்றதை அவதானித்த உமர்(رضي الله عنه) அவர்கள், அவர்கள் கொழுத்த பெண்ணாக இருந்ததால் "சவ்தாவே! உங்களை நாம் அறிந்து கொண்டோம். ஹிஜாப் சட்டம் சீக்கிரம் வந்து விட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இவ்வாறு கூறுவார்கள். அதற்கமைவாக ஹிஜாபின் வசனத்தை அல்லாஹ் இறக்கிவைத்தான்!" என அன்னை ஆயிஷா(رضي الله عنها) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(புகாரி ஹதீஸ் எண்: 143. பாடம்: பெண்கள் மலசலத் தேவைக்காக வெளியில் செல்லுதல்), (முஸ்லிம் ஹதீஸ் எண்: 4030)

மற்றொரு அறிவிப்பில், ஹிஜாப் இறங்கிய பின்னர் ஸவ்தா(رضي الله عنها) அவர்கள் ஒரு தேவையின் நிமித்தம் வெளியேறிச் செல்வதைக் கண்ட உமர்(رضي الله عنه) அவர்கள் "ஸவ்தாவே! உம்மை எமக்குத் தெரியாமல் இல்லை. நீங்கள் எப்படி வெளியேறலாம் என்று சிந்தியுங்கள்!" என்று சொன்னதைக் கேட்டு அல்லாஹ்வின் தூதரிடம், "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் எனது தேவைக்காக வெளியேறிச் சென்ற நேரத்தில் உமர் எனக்கு இவ்வாறு, இவ்வாறெல்லாம் சொன்னார் எனக் கூறினாரே!" எனக் கூறும் ஸவ்தா(رضي الله عنها) அவர்கள், உடன் அல்லாஹ்வின் தூதருக்கு வஹி அறிவிக்கப்பட்டது, (அதனால் ஏற்பட்ட) வியர்வையைத் துடைத்துக் கொண்டே

فَقَالَ إِنَّهُ قَدْ أُذِنَ لَكُنَّ أَنْ تَخْرُجْنَ
لِحَاجَتِكُنَّ (البخاري)

**'நீங்கள் உங்கள் தேவைகளுக்காக வெளியேறிச் செல்வது நிச்சயம் அனுமதிக்கப்பட்டுள்ளது எனக் கூறினார்கள்'** என்ற ஸவ்தா(رضي الله عنها) அவர்கள் கூறும் செய்தி புகாரி, முஸ்லிமில் பதிவு செய்யப்பட்டுள்ளதைப் பார்க்கின்றோம்.

**மேற்படி ஹதீஸுக்கு இமாம்கள் தரும் விளக்கம்:**

قَالَ ابْن بَطَّال : فقه هَذَا الْحَدِيث أَنَّهُ يَجُوز لِلنِّسَاء التَّصَرُّف فِيمَا لَهُنَّ الْحَاجَة إِلَيْهِ مِنْ مَصَالِحهنَّ ، .......... وَفِيهِ جَوَاز كَلَام الرِّجَال مَعَ النِّسَاء فِي الطُّرُق لِلضَّرُورَة ، .......... وَفِيهِ أَنَّ النَّبِيّ صَلَّى اللَّه عَلَيْهِ وَسَلَّمَ كَانَ يَنْتَظِر الْوَحْي فِي الْأُمُور الشَّرْعِيَّة ؛ لِأَنَّهُ لَمْ يَأْمُرهُنَّ بِالْحِجَابِ مَعَ وُضُوح الْحَاجَة إِلَيْهِ حَتَّى نَزَلَتْ الْآيَة ، وَكَذَا فِي إِذْنه لَهُنَّ بِالْخُرُوجِ . وَاَللَّه أَعْلَم (فتح الباري لابن حجر - (1 / 238

பெண்கள் தமது நலனுடன் தொடர்புடைய தமது தேவைகளை தாமே நிறைவு செய்து கொள்வதை அனுமதித்தல், அவசியத் தேவைகளின் போது பாதைகளில் பெண்களுடன் பேசுதல், பெண்கள் மறைந்தும், மறைத்தும் வாழ வேண்டும் என்ற நிலை இருந்தும் அவ்வாறு தன்னிச்சையான கட்டளைப் பிறப்பிக்காது மார்க்க விவகாரங்களில் நபி(ﷺ) அவர்கள் வஹியை எதிர்பார்ப்பவர்களாக இருந்தமை போன்ற விளக்கங்கள் இதில் பெறப்படுகின்றன என்ற கருத்தை இமாம் இப்னு பத்தால்(ரஹ்) அவர்கள் மூலம் இப்னு ஹஜர்(ரஹ்) வெளியிட்டுள்ளதைப் பார்க்கின்றோம்.

(பார்க்க: பத்ஹுல்பாரி)

**(شرح النووي على مسلم - (7 / 306**

فِيهِ جَوَاز خُرُوج الْمَرْأَة مِنْ بَيْت زَوْجهَا ..... لِقَضَاءِ حَاجَة الْإِنْسَان إِلَى الْمَوْضِع الْمُعْتَاد لِذَلِكَ بِغَيْرِ اسْتِئْذَان الزَّوْج ، لِأَنَّهُ مِمَّا أَذِنَ فِيهِ الشَّرْع .

ஒரு பெண் தனது கணவனின் அனுமதியின்றி வழமையான இடத்திற்கு தேவையை நிறைவு செய்ய வெளியேறிச் செல்வது அனுமதி என்பதைக் காட்டுகின்றது. ஏனெனில் இது மார்க்கம் அனுமதித்தவற்றில் உள்ளதாகும் என இமாம் நவவி(ரஹ்) அவர்கள் விளக்கியுள்ளார்கள். (பார்க்க: ஷரஹ் முஸ்லிம்) இந்த கருத்தைத்தான் நாமும் முன்வைக்கின்றோம்.

**பள்ளிவாசலுக்கு வருவதை அனுமதிக்கும் நபிமொழிகள்:**

பெண்கள் பள்ளிக்குச் சென்று தொழுவதை அனுமதிக்கின்ற ஆதாரபூர்வமான பல நபிமொழிகள் இருக்கின்றன. அவற்றில் சிலதை மாத்திரம் இங்கு தருகின்றோம்.

1) உமர்(رضي الله عنه) அவர்களின் மனைவி ஒருவர் இஷா, மற்றும் சுபஹ் தொழுகைக்காக பள்ளியில் நடைபெறும் (ஜமாஅத்) கூட்டுத் தொழுகையில் கலந்து கொள்பவராக இருந்தார்கள். உமர்(رضي الله عنه) அவர்கள் இதை வெறுத்து, ரோஷப்படுகின்ற போதும் "நீங்கள் ஏன் இவ்வாறு செல்கின்றீர்கள்?" என அவர்களிடம் கேட்கப்பட்டது. அப்போது, அவர்கள் "என்னைத் தடுக்கத் தடையாய் இருப்பது என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியுமா?" எனக் கேட்ட பின் "அல்லாஹ்வின் அடிமைகளை (பெண்களை) அல்லாஹ்வின் பள்ளிகளை விட்டும் தடுக்காதீர்கள் என்ற இறைத்தூதரின் வார்த்தைதான் அவரைத் தடுக்கின்றது" எனக் கூறினார்கள். (புகாரி)

2) "உங்கள் பெண்கள் பள்ளிக்குச் செல்ல அனுமதி கோரினால் அங்கு செல்ல விடாது அவர்களைத் தடுக்காதீர்கள்! என நபிகள் நாயகம்(ﷺ) அவர்கள் கூற நான் கேட்டேன்" என அப்துல்லாஹ் பின் உமர்(ரலி) அவர்கள் அவரது மகன் பிலால், "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நிச்சயம் நாம் அவர்களைத் தடுப்போம்!" எனக் கூறினார், அதற்கு அவரைத் தாறுமாறாகத் திட்டி விட்டு, "நான் அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் மூலம் செய்தியை அறிவிக்கின்றேன்! நீ சத்தியம் செய்து தடுப்பேன் என்கின்றாயா?" எனக் கேட்டார்கள்.

(முஸ்லிம் 667)

**நபி(ﷺ) அவர்களின் காலத்தில் பெண்கள் பள்ளியில் தொழுததற்கான சான்றுகள்.**

நபி(ﷺ) அவர்களின் காலத்தில் பெண்கள் அவர்களின் பள்ளியில் ஜமாஅத் தொழுகையில் கலந்திருக்கின்றார்கள் என்பதைப் பின்வரும் நபிமொழிகள் மூலம் உறுதி செய்யலாம்.

1) நபிகள் நாயகம்(ﷺ) அவர்களுடன் தொழும் ஆண்கள் தங்களது வேஷ்டிகள் சிறியவையாக இருந்ததால் அவற்றை (கீழாடைகளை) தங்கள் பிடரியில் கட்டிக்கொண்டு தொழுபவர்களாக இருந்தார்கள்.

**'ஆண்கள் சம நிலைக்கு வரும் வரை நீங்கள் உங்கள் தலைகளை உயர்த்தாதீர்கள் என அவர்களுக்கு நபி (ﷺ) அவர்களால் (அறிவுரை) கூறப்பட்டது'** (புகாரி, முஸ்லிம், நஸயி) இது பெண்கள் ஆண்களுடன் பள்ளியில் கூட்டுத் தொழுகையில் கலந்து கொண்டதை நிரூபிக்கும் செய்தியாகும்.

2) நபிகள் நாயகம்(ﷺ) அவர்கள் சுபஹ் தொழுகையை நேரகாலத்துடன் தொழுவார்கள். அதில் கலந்துகொள்ளும் மு'மினான பெண்கள் தங்கள் போர்வையால் போர்த்திக் கொண்டு திரும்பும் வேளை இருட்டின் கடுமையால் அவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியாது போகும் என அன்னை ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(புகாரி 825, முஸ்லிம் 1026, அபூதாவூத், நஸயி)

3) "நான் தொழுகையில் நின்று அதில் நீடிக்க நினைத்துக்கொண்டிருப்பேன். அப்போது சிறு பிள்ளையின் அழுகுரலைச் செவிமடுப்பேன். அதன் தாய் அதன் மீது படும் கஷ்டத்தை அஞ்சி அதை நான் சுருக்கமாக்கிக்கொள்வேன்!" என நபி(ﷺ) அவர்கள் கூறுவார்கள். (புகாரி, முஸ்லிம், அபூதாவூத்)

4) "ஆண்களில் தொழுகை வரிசையில் சிறந்தது முதலாவதும், பெண்களின் வரிசையில் சிறந்தது அதில் இறுதியானதுமாகும்!" என நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம், அபூதாவூத்)

5) "உம்மு சுலைம்(ரலி) அவர்களின் வீட்டில் நபி(ﷺ) அவர்கள் தொழுகை நடத்தினார்கள். நானும், ஒரு அநாதையும் அவர்களுக்குப் பின்னால் நின்றோம். உம்மு சுலைம்(ரலி) அவர்கள் எமக்குப் பின்னால் நின்றார்கள்!" என அனஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புகாரி)

6) "நபி(ﷺ) அவர்கள் தொழுகை முடிந்து ஸலாம் சொன்னால் பெண்கள் எழுந்து செல்வார்கள். அதில் சற்று தாமதிப்பார்கள்." (புகாரி) "இது ஆண்-பெண் கலப்பில்லாதிருக்கவே இவ்வாறு செய்திருக்கிறார்கள்!" என இது பற்றி விளக்குகின்ற அறிவிப்பாளர் (அல்லாஹ் மிக அறிந்தவன்) எனக் கூறியே கூறுகின்றார்.

**பெருநாள் தொழுகை:**

முஸ்லிம் பெண்கள்-ஆண்கள் பங்குகொள்ளும் இவ்வாறான நிகழ்வில் கலந்துகொள்ள மார்க்கம் பின்வருமாறு அங்கீகாரம் தந்துள்ளது.

"பெருநாள் தினத்தில் குமரிப் பெண்கள், மாதவிடாய் பெண்கள் உட்பட அனைவரும் பெருநாள் தொழுகை நடைபெறும் திடலுக்குப் புறப்பட வேண்டும்!" என அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கட்டளையிட்டார்கள். அப்போது ஒரு பெண் "அல்லாஹ்வின் தூதரே! எம்மில் ஒருத்திக்கு தலையில் அணிய முந்தாணை இல்லாவிட்டால் (போகாமல் இருக்கலாமா)?" என நபி(ﷺ) அவர்களிடம் வினவினார். "அவளது தோழி அவளது (மேலதிக) முந்தாணையை தனது சகதோரிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிவிக்கட்டும். நன்மையிலும், முஸ்லிம்களின் பிரார்த்தனையிலும் பங்குகொள்ளட்டும்!" என நபியவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்).

இந்த ஹதீஸைப் பதிவு செய்யும் இமாம் புகாரி(ரஹ்) அவர்கள் இதை உறுதி செய்யும் வண்ணம்

بَابُ خُرُوجِ النِّسَاءِ وَالْحُيَّضِ إِلَى الْمُصَلَّى
(البخاري)

'சாதாரண நிலையில் உள்ள பெண்களும், மாதவிடாய்ப் பெண்களும் திடலுக்கு வெளியாகிச் செல்லுதல்' என தலைப்பிட்டுள்ளதையும், முஸ்லிமின் கிரந்தத்திற்கு விளக்கம் தரும் இமாம் நவவி (ரஹ்) அவர்கள்;

بَابُ ذِكْرِ إِبَاحَةِ خُرُوجِ النِّسَاءِ فِي الْعِيدَيْنِ
إِلَى الْمُصَلَّى وَشُهُودِ الْخُطْبَةِ مُفَارِقَاتٍ
لِلرِّجَالِ (صحيح مسلم 4 / 404)

பெண்கள் ஆண்களைப் பிரிந்தவர்களாக இரு பெருநாளில் திடலுக்குச் செல்வதும், குத்பாவிற்குச் சமூகம் தருவதும் ஆகுமானது என்பதை விளக்கும் பாடம்" என தலைப்பிட்டுள்ளதையும் பார்க்கின்றோம்.

**சிறந்தது எது பள்ளியா? வீடா?**

இப்படித் தெளிவான அனுமதி இருப்பதை யாரும் மறுப்பது போன்று பேசினால் அவர்கள் இந்தச் செய்தி பற்றிய தெளிவற்றவர்கள் என்றே கருத வேண்டி ஏற்படும் என்பதை சாதாரண அறிவு படைத்தவரும் தெரிந்ததே;! இருப்பினும் சிறப்பு எதில் இருக்கின்றது என்பதை பற்றிப் பேசினால் வீடுதான் என்பதை பின்வரும் நபி மொழியின் மூலம் உறுதி செய்ய முடியும்.

"உங்கள் பெண்களைப் பள்ளிவாயில்களை விட்டும் தடை செய்யாதீர்கள்! அவர்களின் வீடுகள் அவர்களுக்குச் சிறந்ததாகும்!" (அபூதாவூத்)

பெண்கள் பள்ளிக்கு வருவதைத் தடை செய்யக் கணவன்மாருக்கு அனுமதி இல்லை என்பதை உமர்(ரழி) அவர்களின் மனைவியரில் ஒருவர் கூறிய செய்தியை முன்னர் குறிப்பிட்டிருந்தோம். அதையும் இணைத்தே படிக்கவும்.

**பெண்கள் பள்ளிக்கு வரும்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள்:**

பெண்கள் பள்ளிக்கு வருகின்ற போது பின்வரும் ஒழுங்குகள் பேணப்படுவது அவசியமாகும்.

**1) மணம் பூசி வருவதைத் தவிர்த்தல்:**

"(பெண்களே!) உங்களில் யாராவது பள்ளிக்கு வந்தால் அவர் வாசனை பூச வேண்டாம்! என நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் எங்களுக்குக் கூறினார்கள்" என அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(ரழி) அவர்களின் மனைவி ஸைனப்(ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (முஸ்லிம்)

அவர்களின் மற்றொரு அறிவிப்பில்;
"உங்களில் ஒருவர் இஷாவுக்குப் பள்ளிக்கு வருகின்ற போது அவ்விரவு நறுமணம் பூசி வரவேண்டாம்!" என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக இடம்பெற்றுள்ளதைப் பார்க்கின்றோம். (முஸ்லிம்)

"எந்தப் பெண் நறுமணத்தைப் பூசிக் கொண்டாளோ அவள் இஷாத் தொழுகைக்கு நம்முடன் சமூகம் தரவேண்டாம்!" என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

இவ்வாறான செய்திகள் மூலம் பெண்கள் நறுமணம் பூசியவர்களாகத் தொழுகைக்கு வருவது தடை செய்யப்பட்டுள்ளதைப் பார்க்கின்றோம்.

**2) இஸ்லாமிய ஆடையுடன் செல்லுதல்:**

"முஃமினான பெண்கள் தமது போர்வைகளால் போர்த்தியவர்களாக நபி(ஸல்) அவர்களுடன் ஃபஜ்ர் தொழுகையில் கலந்துகொள்வார்கள். தொழுகை முடிந்து கலைந்து செல்வார்கள். இருளின் கடுமையால் அவர்களை யாரும் அறிந்துகொள்ள மாட்டார்கள்" என அன்னை ஆயிஷா(ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புகாரி)

"நரகவாதிகளான இரு பிரிவினர் உள்ளனர். அவர்கள் போன்றோரை நான் என்றும் கண்டதில்லை" எனக் கூறிய நபி(ஸல்) அவர்கள், "ஆடை அணிந்தும் நிர்வாணிகளான பெண்கள், வளைந்து, நெளிந்து நடப்பவர்கள், அவர்களின் தலைகள் சாய்ந்து செல்லும் ஒட்டகத்தின் திமிழ்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றிருக்கும், அவர்கள் சுவர்க்கத்தில் நுழையவோ, அதன் வாடையை நுகரவோ மாட்டார்கள்" எனக் கூறினார்கள். (முஸ்லிம்)

**3) பார்வைகளைத் தாழ்த்தி, அலங்காரங்களை வெளிப்படுத்தாது செல்லுதல்:**

பெண்கள் பள்ளிக்கு மாத்திரமல்ல. வெளியில் செல்லுகின்ற போதும் கூட பொதுவாக கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளில் இதுவும் ஒன்றாகும்.

தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும், தமது கற்புகளைக் காத்துக் கொள்ளுமாறும், (முகம், கை போன்ற) தானாக வெளிப்படும் உறுப்புக்கள் நீங்கலாக ஏனைய எல்லாப் பகுதிகளையும் மறைக்கும் படியும், தங்களது முந்தாணைகளால் (முழுமையாக) போர்த்திக்கொள்ளும் படியும், தங்களது அலங்காரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றும் முஃமினான பெண்களுக்கு நபியே நீர் கூறுவீராக!

(அந்நூர்:31)

இந்த வசனத்தைக் கவனத்திற் கொண்டு பெண்கள் வெளியில் செல்லும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளைப் பேண வேண்டும்.

**4) வீதி ஓரங்களால் செல்லுவதும், திரும்புவதும்:**

வீதியில் பெண்கள் ஆண்களுடன் கலக்கின்ற நிலை தவிர்க்கப்பட வேண்டும். பள்ளிக்குச் செல்லும் போதும், வீடு திரும்பும் போதும் இந்த ஒழுங்கை கட்டாயம் பேணியாக வேண்டும்.

நபி(ﷺ) அவர்கள் பள்ளியில் இருந்து வெளியேறிய போது ஆண்கள், பெண்கள் அனைவரும் கலந்து நிற்பதைக் கண்டார்கள். பெண்களைப் பார்த்துக் கொஞ்சம் தாமதியுங்கள், பாதையில் முட்டிக் கொண்டு செல்வது உங்களுக்குரியதல்ல, நீங்கள் பாதை ஓரத்தைப் பிடித்துச் செல்லுங்கள் எனக் கூறினார்கள். அதனால் பெண்கள் செல்லுகின்ற போது தனது ஆடை சுவரில் உரசியபடி செல்பவளாக இருந்தார்கள்.

(அபூதாவூத்)

**பெண்கள் பள்ளிக்கு வருவதைத் தடுப்பதாகக் நம்பப்படும் செய்தியும், அதற்கான மறுப்பும்:**

பெண்கள் பள்ளிக்கு வருவதையும், அவர்கள் அனுமதி கோரும் பட்சத்தில் அனுமதி வழங்கப்படல் வேண்டும் என்பதையும் வலியுறுத்தும் பல நபிமொழிகளைக் கண்டுகொள்ளாத மௌலவிகள் பலர் ஆயிஷா(ரழி) அவர்களின் கருத்துடன் அமைந்த பின்வரும் கூற்றை நபிமொழிகளை விட முன்னிலைப்படுத்தி அனைத்து ஹதீஸ்களையும் செயலிழக்கச் செய்யும் ஒருதலைப் பட்சமான நடவடிக்கையை அவதானிக்கின்றோம். இது சான்றுகளை அணுகத் தெரியாதவர்களின் செயல்முறையாகும்.

عَنْ عَمْرَةَ بِنْتَ عَبْدِ الرَّحْمَنِ أَنَّهَا سَمِعَتْ
عَائِشَةَ زَوْجَ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ
تَقُولُ لَوْ أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ
وَسَلَّمَ رَأَى مَا أَحْدَثَ النِّسَاءُ لَمَنَعَهُنَّ الْمَسْجِدَ
كَمَا مُنِعَتْ نِسَاءُ بَنِي إِسْرَائِيلَ قَالَ فَقُلْتُ
لِعَمْرَةَ أَنِسَاءُ بَنِي إِسْرَائِيلَ مُنِعْنَ الْمَسْجِدَ
قَالَتْ نَعَمْ (صحيح مسلم)

பெண்கள் உருவாக்கிக் கொண்ட (புதிய)வைகளை நபிகள் நாயகம்(ﷺ) அவர்கள் அவதானித்திருந்தால் பனூ இஸ்ரவேலரின் பெண்கள் தடுக்கப்பட்டது போல நமது பெண்களையும் பள்ளிக்கு வராது நிச்சயம் தடுத்திருப்பார்கள் என அன்னை ஆயிஷா(ரழி) அவர்கள் குறிப்பிடுவதை அவர்களின் 'இஜ்திஹாத்' கருத்தாகக் கொள்ளாமல் நபிமொழியாகக் கொண்டு பள்ளிக்குச் செல்வதை அனுமதிக்கும் பல நபிமொழிகள் இதன் மூலம் உதாசீனம் செய்யப்படும் நிலையைப் பரவலாக அவதானிக்கின்றோம்.

இது அன்னை அவர்களின் கூற்று என்பதே உண்மை. பள்ளிக்குச் செல்வது அல்லாஹ்வின் தூதர் தனது மரணத்துக் முன்னால் அனுமதித்த ஒன்றாகும். அவர்களின் காலத்தில் பெண்கள் பள்ளிக்கு வந்து சென்றார்கள். அவ்வாறு அவர்களைத் தடை செய்வதாக இருந்தால் நிச்சயமாக அவர்கள் உயிருடன் இருக்கின்ற போதே தடை செய்திருப்பார்கள்.

அல்லாஹ் அனைவருக்கும் மார்க்கத்தில் விளக்கத்தை தருவானாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்க வெறியும் பிடிவாதமும்

## காரணிகள், விளைவுகள், அதற்கான பரிகாரங்கள்

- தோப்பூர். எம்.ஐ.எம். ஜஹானன்கீர் (ஸலபி) -

இயக்க வெறி இன்று தலைதூக்கி, இஸ்லாமிய நெறியையும், அது வீழ்த்தி விட்டதைக் காண முடிகின்றது. இது குறித்து அறிஞர் அல்பானி அவர்களின் அறுபுக் கட்டுரை உரை வடிவம் ஒன்று குறித்த தமிழ் வரி இங்கே வடிவம் பெறுகின்றது.

**'நிச்சயமாக இதுவே எனது நேரான வழியாகும். எனவே, இதனையே நீங்கள் பின்பற்றுங்கள். பல வழிகளைப் பின்பற்றாதீர்கள். அப்பொழுது அது அவனது வழியை விட்டும் உங்களைச் சிதறடித்து விடும். நீங்கள் (அல்லாஹ்வை) அஞ்சி நடக்கும் பொருட்டு இதைக் கொண்டு உங்களுக்கு ஏவுகின்றான்.'** (6:153)

"அல்லாஹ்வின் கரம் கூட்டத்தோடு உள்ளது." (நஸஈ)

"நீர் சமூகத்தோடு சேர்ந்து நடப்பீராக! ஓநாய் தனித்து நிற்கும் ஆட்டையே வேட்டையாடிச் சாப்பிடுகிறது. ( அஹ்மத். அபூதாவூத். நஸஈ )"

முஸ்லிம்கள் குர்ஆன்-ஸுன்னாவை விளங்குகின்ற விடயத்தில் ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசையாக இருப்பதுடன், அதன் எல்லைக்குள் நின்று இயன்றளவு அதனைப் பின்பற்றுவதும் அவர்கள் மீதும் கடமையாகும்.

**வகுப்பு வாதத்தின் பாதகங்கள்:**

இமாம் அவர்கள் வகுப்பு வாதத்தால் ஏற்படும் தீமைகளைப் பின்வருமாறு வகைப்படுத்துகிறார்.

**(1) தங்களது அமைப்பை சாராதவர்களை எதிர்த்தல்:**

அவர்களது அணியிலும், வழிமுறையிலும் சாராதவர்களை ஓரங்கட்டுதல் இன்று சர்வ சாதாரணமாகி விட்டது. அவன் சிறந்த இஸ்லாமிய சகோதரனாக இருந்தாலும் சரியே! காரணம் என்னவெனின் அவன் குறித்த அமைப்பில், கட்சியில் இணைந்து செயற்படாததேயாகும்.

**(2) தங்களது அமைப்பைச் சார்ந்த தனி நபர் ஒவ்வொருவருக்கும் கருத்து சுதந்திரத்தை வழங்காதிருத்தல்:**

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் குறித்த கருத்து மார்க்கத்துக்கு முரணாக இருந்தாலும் கூட அந்தக் கருத்தை குறித்த அமைப்பு தனது ஆதரவாளர்களுக்கு திணிக்க முற்படுவது குறித்த கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் அவர்களை தங்கள் அமைப்பிலிருந்து நீக்கும் இன்று ஒரு விளையாட்டாக மாறி விட்டது.

ஆனால் அவர்கள் இணைந்திருப்பது இஸ்லாமிய அமைப்பு என்பதைக் கூட கவனத்திற்கொள்வதில்லை. அதாவது அவர்கள் யூத-கிறிஸ்தவர்கள் தங்களுடைய பாதிரிகளையும், சன்னியாஸிகளையும் பின்பற்றுவதைப் போன்று (கண்மூடித்தனமாக) பின்பற்ற வேண்டுமென்றே எதிர்பார்க்கிறார்கள். ஹராம்-ஹலால் விடயத்தில் அவர்கள் எதைக் கூறினும் சரியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்;

**'அவர்கள் அல்லாஹ்வை அன்றி, தங்களது மத குருக்களையும், தங்களது துறவிகளையும், மர்யமின் மகன் மஸீஹையும் கடவுள்களாக எடுத்துக் கொண்டனர். ஒரே கடவுளை வணங்குமாறே அவர்கள் ஏவப்பட்டனர். அவனைத் தவிர (உண்மையாக) வணங்கப்படத் தகுதியானவன் வேறு யாரும் இல்லை. அவர்கள் இணை வைப்பவற்றை விட்டும் அவன் தூய்மையானவன்.'** (9:31)

**பிடிவாதத்தின் காரணம்:**

வகுப்புவாதம், கட்சிவாதம், இனவாதம்: இவை தோன்றுவதற்கு முக்கிய காரணியாகக் குர்ஆனையும், ஸுன்னாவையும், அதன் அடிப்படையில் வாழ்ந்த முன்னோர்களின் வழிமுறைகளையும் வழிகாட்டலாகக் கொள்ளாமையாகும்.

அஷ்ஷெய்க் அல்பானீ அவர்கள் இன்று இஸ்லாமியர்களுக்கு மத்தியில் காணக் கூடிய பல்வேறு அமைப்புகள் தங்களுக்கு மத்தியில் அதிகமான முரண்பாடுகளைக் கொண்டதாகவே அமைக்கப் பட்டுள்ளன என்பதைத் தெளிவுபடுத்துகிறார்கள்.

இந்தக் கூட்டமைப்பு இஸ்லாமிய வழிமுறையைப் பின்பற்றியதாக அமைய வில்லையென்பதை இமாமவர்கள் பின்வரும் அல்லாஹ்வின் கூற்றை ஆதாரமாக வைத்துத் தெளிவுபடுத்துகிறார்;

நபி(ﷺ) அவர்கள் இந்த இறை வசனங்களுக்குப் பின்வருமாறு விளக்கமளிக்கிறார்கள்;

இறை தூதரவர்கள் அவர்களது தோழர்களுடன் தரையில் பணிவான முறையில் அமர்ந்திருந்தார்கள். அப்போது ரசூல்(ﷺ) அவர்கள் தங்களது கரத்தால் எங்களுக்கு ஒரு கோட்டை வரைந்து காட்டினார்கள். பிறகு அக்கோட்டின் இடப் புறத்திலும், வலப் புறத்திலும் பல கோடுகளைக் கீறினார்கள். பிறகு இவை பல (குறுக்கு)வழிகள். இவ்வொவ்வொரு (குறுக்கு) வழியிலும் ஷைத்தான்கள் நின்று கொண்டு தன் பால் அழைப்பு விடுத்துக்கொண்டிருக்கின்றனர் என்று கூறி விட்டுப் பின்வரும் குர்ஆன் வசனத்தை ஓதிக் காண்பித்தார்கள். 'நிச்சயமாக இதுதான் எனது நேரான வழி. எனவே, இதையே பின்பற்றுங்கள். (குறுக்கு) வழிகளைப் பின்பற்றாதீர்கள். அவ்வாறு நீங்கள் அவற்றைப் பின்பற்றினால் உங்களை நேரான பாதையிலிருந்து பிரித்து விடும். நீங்கள் பயபக்தியுடையோராக இருப்பதற்காக வேண்டி அல்லாஹ் உங்களுக்கு இவ்வாறு உபதேசிக்கின்றான்." (திர்மிதி)

நமது முழுமையான வெற்றி பல பிரிவுகளாக, பல கட்சிகளாக அமைப்புக்களாகப் பிரிந்து நிற்பதில் இல்லை என்பதை இந்த நபிமொழி உறுதிப்படுத்துகிறது. உண்மையான வெற்றி நபி(ﷺ) அவர்களுடைய பாதையைப் பின்பற்றி அதை சார்ந்திருப்பதில்தான் தங்கியுள்ளது.

ஒரேயொரு அமைப்பைத் தவிர வேறு எந்த அமைப்புக்களும் கிடையாது. அந்த அமைப்புத்தான்;

**'யார் அல்லாஹ்வையும், அவனது தூதரையும், நம்பிக்கை கொண்டோரையும் நேசத்திற்குரியவர்களாக எடுத்துக்கொள்கிறார்களோ, நிச்சயமாக அல்லாஹ்வின் அணியினராகிய அவர்களே வெற்றியாளர்களாவர்.'** (5:56)

இந்தக் கூட்டத்திலே எவர் இருக்க ஆசைப்படுகிறாரோ, இம்மை-மறுமை என்ற ஈருலகிலும் வெற்றி பெற விரும்புகிறாரோ அவர் இந்தக் கூட்டத்தின் அடையாளத்தையும், வழிமுறையையும் தெளிவாக அறிந்திருப்பது அவசியமாகும்.

இந்த அமைப்பின் அடையாளங்களை இமாம்கள் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்கள். இந்த அமைப்பைச் சென்றடைவதற்கு ஒரேயொரு வழிதான் இருக்குமென்றால் அதற்கு ஒரு வழிமுறை மாத்திரம் இருப்பதுதான் அவசியம். அந்த அமைப்புகளுக்கும், இயக்கங்களுக்கும் பல வழிகளிருந்தால் பல வழிமுறைகள் இருக்குமென்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது.

"நானும், எனது தோழர்களும் எதிலுள்ளோமோ" என்ற இறைத் தூதரின் கூற்று வெற்றி பெற்ற கூட்டத்தின் வெற்றி நபி(ﷺ) அவர்களைப் பின்பற்றுவதில் மாத்திரம் தங்கியிருப்பதில்லை. அவருடனிருந்த தோழர்களையும் பின்பற்றுவதிலேயும் தங்கியிருக்கிறது. எனவே இஸ்லாமிய அமைப்புக்களனைத்தும் நபியையும், ஸஹாபாக்களையும் பின்பற்றுவது அவசியமாகும்.

**பிடிவாதத்திற்குரிய பரிகாரங்கள்:**

இந்த இனவாதம்-கட்சிவாதங்களிலிருந்து விடுபட இமாம் அல்பானீ அவர்கள் பல காரணிகளை முன்வைக்கிறார்கள்;

**(1) இந்த இஸ்லாமிய அமைப்புக்களில் பல உலமாக்கள் அங்கத்துவம் வகிக்க வேண்டும்:**

இன்றைய இஸ்லாமிய உலகில் பல்வேறு அமைப்புக்களில் காணப்படும் அதிகமான பிரச்சினைகளுக்கு அவ்வமைப்புக்களில் உலமாக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்துவமின்மையே காரணமாகும். இந்த உலமாக்கள் இஸ்லாம் சார்ந்த முக்கியமான அறிவைப் பல துறையிலும் பெற்றிருக்க வேண்டும். இவ்வமைப்புக்களின் பக்கம் அழைக்கும் அழைப்பாளர்கள் குர்ஆன்-ஸுன்னா சம்பந்தமான முழுமையான அறிவைப் பெற்றிடுவது அவசியமாகும். இதற்கு மாற்றமாகக் குறையறிவோடு குறித்த அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் ஈடுபடுகின்ற போது பிரச்சினைகள் இடம்பெற அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

**(2) இந்த அமைப்புக்கள் குர்ஆன்-ஸுன்னாவின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டிருத்தல் வேண்டும்:**

மார்க்க விடயங்களில் பல துறைகளிலும் தேர்ச்சி பெற்ற அறிஞர்களது முதல் கடமையாக, இந்த அமைப்புக்களை உருவாக்கும் போது குர்ஆன்-ஸுன்னாவின் அடிப்படையில் கட்டியெழுப்புவது இவர்களது கடமை என இமாமவர்கள் கருதுகிறார்கள்.

அத்துடன் அகீதாவிலும், ஒன்றுபடுத்தி அதனைச் செயற்படுத்துவதற்கும் அவர்களைத் தூண்ட வேண்டும்.

**(3) இவ்வமைப்பைச் சார்ந்த ஒவ்வொரு தனி மனிதனுக்கும் கல்விச் சுதந்திரத்தை வழங்குதல் வேண்டும்:**

இஸ்லாமிய அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்கு மத்தியில் முரண்பட்ட கருத்துக்கள் காணப்படுவது தவிர்க்க முடியாததொன்றாகும். அனைத்து நலவுகளும் முன்னோர்களைப் பின்பற்றுகின்ற அதே சந்தர்ப்பத்தில் அனைத்துத் தீமைகளும் பின்னோரைப் பின்பற்றுவதிலேதான் இருக்கிறது என்பதை நாம் உறுதியாக நம்புகிறோம். முன்னோர்களிடத்தில் சில மார்க்க விவகாரங்களில்-விடயங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்தன என்பதை எவராலும் மறுக்க முடியாது.

**(4) இஸ்லாத்தைச் சரியான முறையில் விளங்கிச் செயல்படுவது:**

இந்த விடயத்தில் இஸ்லாமிய அமைப்புக்கள் தனது உறுப்பினர்களைத் தெளிவான இஸ்லாமியக் கொள்கை-கோட்பாடு, அதன் தனித்துவத்தைப் பேணி நடக்கக் கூடியவர்களாக உருவாக்க வேண்டும். அடிப்படை விடயங்களிலும், துணைப் பிரிவுகளிலும் தெளிவான அறிவைப் பெற்றிருக்க வேண்டும். இந்த அடிப்படையில் நபியவர்கள் இஸ்லாமியப் பிரச்சாரத்திற்கு முதலாவது அனுப்பிய தூதுவர்களிடத்தில்-அழைப்பாளர்களிடத்தில் இந்தப் பண்பு காணப்பட்டது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

**(5) எந்த அடிப்படையிலே இந்த அமைப்புக்கள் செயற்படுவது என்பதிலே கவனம் செலுத்த வேண்டுமேயன்றி உறுப்பினர்களைச் சேர்ப்பதில் கவனம் செலுத்தக் கூடாது:**

ஒவ்வொரு தனி மனிதனும் மார்க்க விடயங்களில் தனிப்பட்ட கவனம் செலுத்தல் வேண்டும். சில அமைப்புக்கள் ஸுன்னாவைப் பின்பற்றக் கூடியவர்களையும், நூதன அனுஷ்டானங்களைப் பின்பற்றக் கூடியவர்களையும், மற்றும் முன்னோர்களையும்-பின்னோர்களையும் உள்ளடக்கியிருப்பதை இமாமவர்கள் கடுமையாகச் சாடுகிறார்கள்.

முழுமையான வெற்றி ஒரேயணியில் ஒன்று சேர்வதிலே உள்ளது. அந்த வழிதான் நபி(ﷺ) அவர்கள் காட்டிய வழியாகும். மாறாக, பல பிரிவுகளாக-அமைப்புக்களாகப் பிரிந்து செயற்படுவதில் எந்த வெற்றியும் இல்லை.

இதனைப் பின்வரும் ஹதீஸ் உறுதிப்படுத்துகிறது;

“அறிந்துகொள்ளுங்கள்! நிச்சயமாக உங்களுக்கு முன்னிருந்த வேதம் கொடுக்கப்பட்டோர் எழுபத்தி இரண்டு பிரிவாகப் பிரிந்தார்கள். எனது சமூகம் எழுபத்து மூன்றாகப் பிரியும். அதிலே எழுபத்தி இரண்டு பிரிவுகள் நரகிலே. ஒரு பிரிவு மட்டும் சுவனம் நுழையும். அதுதான் ஜமாஅத்” என்று கூறினார்கள். (அஹ்மத்)

இன்னொரு ரிவாயத்தில்;
“அனைவரும் நரகிலே. ஒரு பிரிவைத் தவிர. அதுதான் நானும், எனது தோழர்களும் எவ்வழியோ அவ்வழி” என்று கூறினார்கள். (திர்மிதி)

எனவே, பிரிவுகள் ஒருபோதும் வெற்றிக்கு இட்டுச் செல்லாது என்பது வெள்ளிடை மலையாகும். ஆகவே பிரிவுகளை ஒன்றுபடுத்தி நபி(ﷺ) அவர்கள் கூறிய ‘நானும், எனது தோழர்களும் எவ்வழியோ அவ்வழி நடப்பவர்களே வெற்றி பெற்ற கூட்டத்தினர்’ என்ற கூற்றுக்கிணங்க நாம் அனைவரும் ஒன்றுபட்டு நேர்வழி நடந்து அவர்கள் கூறிய வெற்றி பெற்ற கூட்டத்தினரில் நாமும் பங்காளிகளாக மாறுவதற்கு அல்லாஹ் எம்மனைவருக்கும் துணை புரிவானாக!

(நன்றி: புர்கான் - 542)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமை

அகத்திமுறிப்பு முஃபீஸ்

மனித வாழ்க்கை இடர்களுக்கும் துன்பங்களுக்கும் மத்தியில் அமைந்திருக்கிறது. சோதனைகள்-சந்தோசங்கள் என்பன ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றதாகும். பூ விழுந்தால் சந்தோசம்; தலை விழுந்தால் சோதனை. இவ்வாறு வாழ்க்கைச் சக்கரம் மாறி மாறிச் சுழன்றுகொண்டிருக்கிறது.

எமக்குச் சோதனைகள்-வேதனைகள் வருகின்ற போது பேண வேண்டிய முக்கியமான விடயம் தான் 'பொறுமை' என்ற அணிகலன். இதை அணிந்தால்தான் சாதனைகளை மிக இலகுவில் அடைய முடியும். மனித வாழ்வானது போராட்டங்கள், சோதனைகள் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. இவற்றுக்கெல்லாம் முகங்கொடுத்து வாழ வேண்டிய மனிதன் அதற்கான மன உறுதியைப் பெற்றுக்கொள்ளக் கையாள வேண்டிய விடயம் தான் பொறுமை என இஸ்லாம் கூறுகின்றது.

பெரும்பாலான ஈமானிய நற்குணங்கள் 'பொறுமை' என்ற பெயரின் கீழ் நுழைந்துகொள்கின்றன.

பொறுமையானது மனித இனத்தின் தனித்தன்மையாக இருக்கின்றது. ஏனெனில் விலங்குகள் குறையுள்ள (ஐந்தறிவு) படைப்பாகப் படைக்கப்பட்ட அதே நேரம் வானவர்கள் முழுமையானவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். விலங்குகளைப் பொறுத்த வரை அவற்றின் அசைவையும், அமைதியையும் தீர்மானிப்பது இச்சைதான். இச்சைக்கெதிராகப் போராடிப் பொறுமை காக்கின்ற ஆற்றல் அவற்றுக்கில்லை. அதே போன்று வானவர்கள் அல்லாஹ்வின் சந்நிதானத்துக்கு நெருக்கமானவர்கள். ஆசைகள் ஏதும் அற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

எனவே, மனித இனமே தமது ஆசைகளை அடக்கி இழப்புக்களைத் தாங்கிக் 'கழா கத்ர்' மீது நம்பிக்கை வைத்துப் பொறுமை காக்க வேண்டி உள்ளது.

பொறுமையானது மதிப்புமிக்கதோர் நற்பண்பாகும். பொறுமையின்றி மார்க்க விஷயங்களில், உலக விஷயங்களில் உயர்வு பெற முடியாது. எனவே பொறுமை என்ற நற்பண்பை அணிகலனாக அணிந்து நம் வாழ்க்கையை அலங்கரிக்க வேண்டும்.

அல்குர்ஆன் வசனமொன்று பொறுமையை இவ்வாறு இயம்புகிறது;

**'நிச்சயமாக நாம் ஓரளவு பயத்தாலும், பசியாலும், செல்வங்கள், உயிர்கள், மற்றும் விளைச்சல்கள் ஆகியவற்றில் ஏற்படும் இழப்புகளாலும் உங்களைச் சோதிப்போம். பொறுமையாளர்களுக்கு (நபியே!) நீர் நன்மாராயம் கூறுவீராக!' (2:155)**

இவ்வசனத்தின் மூலம் செல்வம், பசி, பயம்... போன்ற சோதனைகள் மூலமும், இன்னும் பல விடயங்கள் மூலமும் சோதனைகள் ஏற்படும். அவ்வாறான நேரங்களில் பொறுமை காக்க வேண்டும் என அல்லாஹ் கட்டளையிடுகின்றான்.

நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்; "பொறுமையைப் பெற்றவனை விடச் சிறந்த சன்மானத்தைப் பெற்றவன் எவனுமில்லை" (புகாரி)

இதன் மூலம் பொறுமையானது உயர் பெறுமதி வாய்ந்த ஒன்று என விளங்க முடிகிறது.

உலக வாழ்க்கையில் ஏற்படும் அபிவிருத்தி, ஏக்கம், ஏமாற்றம், திடீர் திருப்பங்கள் என்பவற்றின் பாதிப்பிலிருந்து ஒரு முஸ்லிமைப் பாதுகாப்பது பொறுமையே! விதை விதைத்த விவசாயி பொறுமை இழந்தால் அறுவடை செய்திட முடியாது. செடியை நாட்டியவன் பொறுத்திருக்காவிடில் பழம் பறித்திட முடியாது. மாணவனுக்குக் கற்பதில் பொறுமை இல்லையென்றால் அறிஞனாக முடியாது. போராளி பொறுமை காட்டவில்லையென்றால் வெற்றி பெற முடியாது. உலகில் தோன்றி சாதித்தவர்கள் எல்லாம் பொறுமையின் மூலமே தமது இலட்சியத்தை அடைந்துள்ளனர். அவர்கள் கசப்பை இனிப்பாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டவர்கள்; துன்பங்களைச் சுகமாய் ஏற்றனர்; சிரமங்களை இலேசாகக் கருதினர்; முற்பாதையில் நடந்தனர்; கற்களைக் கூட நகங்களால் தோண்டினார்கள்; பாதைகளில் உள்ள தடைகளைக் கண்டுகொள்ளவில்லை. ஈட்டிகள் அவர்கள் முதுகைப் பதம் பார்த்தன; நாய்கள் சுற்றிக் குரைத்துக்கொண்டிருந்தன. இத்தனைக்கும் அவர்கள் மலைத்துத் திகைத்து நிற்கவில்லை. துன்பங்களைத் திரை போட்டு மூடி விட்டுத் தொல்லைகளை ஏரிட்டும் பார்க்காமல் உறுதியைக் கேடயமாக்கிப் பொறுமையை ஆயுதமாகக் கொண்டு வெற்றி கண்டனர் என்று அழகாகப் பாடினான் ஓர் கவிஞன்.

இந்தக் கவிஞன் தனது கவி வரிகள் மூலம் பொறுமையைக் கூற முனைகின்றான்.

இதோ இன்னோர் கவிஞர் வெற்றியாளர்களின் அடையாளத்தைக் கூறும் போது, 'லட்சியத் தேடல் நீண்டு கொண்டே போனாலும் நிராசை வேண்டாம். பொறுமையுடன் முயன்றால் வெற்றி அடையலாம். பொறுமையாளர்கள் ஆச்சரியமான மனிதர்கள். லட்சியத்தை அடைந்து விடுகின்றனர். வாசல் கதவுகளை இடைவிடாது தட்டுபவனே உள்ளே நுழைய முடியும்' என்கின்றான்

எனவே இக்கவிவரிகள் எல்லாம் பொறுமையைப் பற்றியே கூறுகின்றன. அதன் மூலம்தான் உயர்வான அந்தஸ்தை அடைய முடியும் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றன.

அல்லாஹ் அல்குர்ஆனில் கிட்டத்தட்ட 90 இடங்களில் இந்தப் பொறுமையைப் பற்றிக் கூறுகின்ற அதே நேரம், இன்னும் சில இடங்களில் தொழுகையுடன் சேர்த்து இதைக் குறிப்பிடுகின்றான். முதுகை உடைத்து, கழுத்தை நெறித்து, ஆளை முடக்கி விடுகின்ற அளவுக்கு நெருக்கடிகள்-சோதனைகள்-துன்பங்கள் எம் வாழ்வில் ஏற்படும் போது சோர்ந்து விடக் கூடாது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்; "ஒரு முஃமினின் விடயம் ஆச்சரியமாக இருக்கிறது. அவனது அனைத்து விடயங்களும் நன்மையாக அமைகின்றன. அவனுக்கு நலவாகவே அமைந்து விடுகின்றன.

இந்த நபி மொழி மூலம் பொறுமையின் மூலம் எமக்கு நன்மையைத் தவிர வேறெதுவும் ஏற்படுவதில்லை என்பது தெளிவாக விளங்குகிறது.

செய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா(ரஹ்) கூறுவதாகப் பேரறிஞர் இப்னுல் கைய்யிம்(ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்;

தடுக்கப்பட்டவைகளை விட்டு விலகி இருப்பதில் காட்டும் பொறுமையை விட அல்லாஹ்வுக்கு வழிப்படுவதைப் பேணுவதில் கொள்ளும் பொறுமைதான் உயர்ந்தது; சிறப்பானது. ஏனெனில், பாவத்தை விடுவதால் கிடைக்கும் பயன்பாடுகளை விட நன்மையைச் செய்வதால் கிடைக்கும் இலாபமே அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது. பாவத்தைச் செய்வதால் ஏற்படும் குழப்பத்தை விட அல்லாஹ்வுக்குக் கட்டுப்படாமலிருப்பதால் விளையும் தீமைகள் அல்லாஹ்வுக்கு மிகவும் வெருப்பூட்டுகின்றன.

நபி(ஸல்) அவர்களின் வாழ்நாளில் நடந்த சம்பவத்தை எடுத்துக் காட்டுவது சிறப்பானதாகும். ஒரு பெண்மணி நபியிடம் தனது நோயைப் பற்றி முறையிட்டார். அப்போது, நபி(ஸல்) அவர்கள் "நீ பொறுமையாக இருந்தால் உனக்குச் சுவனம் உண்டு" எனக் கூறினார்கள். அப்படியே அப்பெண்மனி நோய் ஏற்படும் போது ஆடை என்னை விட்டும் அகழ்கிறது. அதற்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டினார். அதற்கிணங் நபியவர்களும் பிரார்த்தித்து வந்தார்கள்.

இந்தச் சம்பவத்தின் மூலம் நமக்கு எந்தக் கஷ்டம் வருகின்ற போதும் பொறுமையைக் கடைபிடித்தால் நிச்சயம் நமக்கு வெற்றி கிடைக்கும் என்பதை விளங்க முடிகிறது.

ஒரு மனிதன் பொறுமையைக் கடைபிடிக்கின்ற போது அவனில் மன உறுதியும், வீரமும் துளிர் விடுகின்றன. சோதனைகளைத் தாங்கி மன உறுதியுடன் வாழும் போது வீரனாக மாறுகின்றான். அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் சோதனைகளை எதிர்கொள்ள முன்வருகின்றான்; அல்லாஹ் மீது நம்பிக்கை வைக்கின்றான்; அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றுகின்றான். நீதி-நியாயத்துக்காக வாதாடவும், தேவை ஏற்பட்டால் போராடவும் அவனுக்குத் துணிவு ஏற்படுகின்றது. அதன் மூலம் சமுதாயத்தில் பிரகாசிக்கின்றான்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்;
"பொறுமையின்றி அவசரப்படுத்தித் தாக்குபவன் வீரன் அல்ல; மாறாக, உண்மை வீரன் யாரென்றால் கோபத்தின் போது தன் மனதைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பவனே வீரன் ஆவான்." (அபூஹுரைரா(ரழி) - முஸ்லிம், மிஷ்காத்)

இந்த அறிவிப்பின் மூலம் மனதைக் கட்டுப்படுத்தியிருப்பதானது பொறுமையுடன் இருப்பதையே குறிக்கின்றது. யஃகூப்(அலை) அவர்கள் தனது மகன் யூசுப் நபியை அவரது சகோதரர்கள் காட்டிற்கு அழைத்துச் சென்று பாழ்க் கிணற்றில் தள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு, "ஓநாய் தின்று விட்டது!" என்று பொய் கூறிய போது, "பொறுமையைக் கடைபிடிப்பதுதான் சிறந்தது!" என்று கூறினார்.

இதை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது;

**மேலும், அவர்கள் அவரது சட்டையின் மீது பொய்யான இரத்தத்தை(த் துவைத்து)க் கொண்டு வந்தனர். (அதற்கு அவர்களது தந்தை) "இல்லை! உங்களின் உள்ளங்கள் ஏதோ ஒரு (தீய) காரியத்தை உங்களுக்கு அழகாகக் காட்டி விட்டன. எனவே, அழகிய பொறுமையே இதற்கு வழி. நீங்கள் வர்ணித்துக் கூறுபவற்றில் அல்லாஹ்வே உதவி தேடப்படுபவன்" என்று கூறினார். (யூசுப்:18)**

அதே போன்று தனது மகன் புன்யாமீனை இழந்த போதும் பொறுமை காப்பது சிறந்தது என்றார்.

ஆனால் இன்று எமது சமூகத்தின் நிலையைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்! தமது வீட்டில் ஒரு துன்பமோ அல்லது கஷ்டமோ நேருகின்ற போது நாம் எந்தளவிற்குப் பொறுமையைக் கையாள்கின்றோம்? ஒருவர் மரணித்து விட்டால் எந்தளவிற்கு இறைவனை வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டுகின்றோம்? இறைவனுக்குக் கண்ணில்லையா? புத்தியில்லையா? எங்களை மட்டுமா சோதிக்க வேண்டும்? எங்களுக்கு மட்டும் தானா இப்படி...? என்று தலையைப் பிய்த்துக் கொண்டு அழுகின்றனர்; ஒப்பாரி வைக்கின்றனர். இதற்கு ஒரு வரலாற்றுச் சம்பவத்தை எடுத்துக் காட்டாகச் சொல்லலாம்.

அபூதல்ஹா(ரழி) வெளியூர் சென்றிருந்த சமயத்தில் அவரின் அன்புக் குழந்தையொன்று இறந்து விட்டது. தாய் உம்மு ஸுலைம்(ரழி) சித்தம் கலங்கி நின்றிடவில்லை. குழந்தையைச் சுத்தமாகக் குளிப்பாட்டினார். கஃபன் ஆடையை அணிவித்து வாசனைத் திரவியங்களைத் தடவினார். ஆடையால் குழந்தையைச் சுற்றினார். கணவன் அபூதல்ஹா(ரழி) அவர்கள் வீட்டிற்கு வந்தார்கள். "நோயுற்றிருந்த குழந்தை எப்படி இருக்கிறது?" என்று வினவினார். "அது அடங்கி விட்டது! எல்லாம் சரியாகி விட்டது" என்றார் மனைவி உம்மு ஸுலைம்(ரழி). நோய் அடங்கிச் சுகம் வந்து விட்டதால் குழந்தை நிம்மதியாக உறங்கிக்கொண்டிருக்கிறது என்று நினைத்துக் கொண்டார் கணவர் அபூதல்ஹா(ரழி).

பின்னர் அன்றிரவை இத்தம்பதியினர் இன்பமாய் இணைந்து கழித்தனர். அதிகாலை கண்விழித்ததும் கணவர் அபூதல்ஹா(ரழி) அவர்களிடம், "கணவரே! ஒரு பொருளை இரவலாகப் பெற்றால், பின்னர் அதைத் தந்தவர் திருப்பிக் கேட்கும் போது கொடுக்க மறுக்கலாமா?" எனக் கேட்டார் உம்மு ஸுலைம்(ரழி). அதற்குக் கணவர், "கூடாது! பெற்ற இரவலைத் திருப்பிக் கொடுப்பதே சரியானது!" என்றார். அதற்கு மனைவி, "எல்லாம் வல்ல ஏக இறைவன் அல்லாஹ் நமக்கொரு குழந்தையை இரவலாகத் தந்தான்; அதை அவனே எடுத்துக் கொண்டான்" என்றார். இதைக் கேட்ட அபூதல்ஹா(ரழி) முதலில் பதறினார். பின்னர், "இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்" என்றார்.

பின்னர் நபி(ஸல்) அவர்களிடம் அபூதல்ஹா(ரழி) வந்து நடந்தவற்றை ஒன்று விடாமல் சொன்னார். அதைக் கேட்ட நபி(ஸல்) அவர்கள், "நேற்றிரவு நீங்கள் இருவரும் ஈடுபட்டிருந்த அந்த இன்பமான இணைப்பில் இறைவன் அருள் வளத்தைப் பொழிவானாக!" என்றார். இதுவல்லவா இறைவன் மீதான நம்பிக்கை!? சோதனையிலும் பொறுமை!? உம்மு ஸுலைம்(ரழி) என்ற மாதர் குல மாணிக்கத்தின் வார்த்தைகளைக் கேட்டீர்களா? அல்லாஹ் தந்த இரவலை எப்பொழுதும் எடுத்துக்கொள்வான் என்பதை எவ்வளவு அழகாய்க் கூறினார்!? பொறுமை காத்தார்!? இவ்வாறு துன்பங்கள் ஏற்படும் போது "இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்" என்று கூறி, ஈமானிய உறுதியுடன் இருப்பதே பொறுமையை எளிதாக்கித் தரும்.

மக்களைச் சந்திக்காமலும், அவர்களிடமிருந்து ஏற்படும் தீங்குகளைச் சகித்துக்கொள்ள முடியாமலும் இருக்கின்ற முஸ்லிமை விட மக்களோடு வாழ்ந்து, அவர்களிடமிருந்து வரும் தீங்குகளைச் சகித்துக் கொண்டு, பொறுமையுடன் வாழும் ஒரு முஸ்லிம் மிகச் சிறந்தவனாவான்." (திர்மிதி)

**பொறுமையால் கிடைக்கும் இம்மை-மறுமைப் பயன்கள்:**

(1) **அல்லாஹ்வின் அன்பு.** (3:146)
(2) **அழகிய கூலி.** (19:96)
(3) **அளவற்ற கூலி.** (39:10)
(4) **உதவி, வெற்றி.** (3:125)
(5) **தலைமைத்துவத் தகுதி.** (32:24)
(6) **யாரும் பெறாத வாழ்த்துக்கள்.** (2:155,157)
(7) **ஆண்மையும், வீரமும் மிக்கோர்.** (3:186)
(8) **எதிரிகள் சதியிலிருந்து பாதுகாப்பு.** (3:120)
(9) **சுவனமும், வானவர்களின் ஸலாமும்.** (76:12)

எனவே சகோதரர்களே!


"நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்" என்ற அல்குர்ஆன் ஆயத்தை மனதில் நிறுத்திப் பொறுமையாளர்களாக மாறி, நாளை சுவனத்தில் நுழைய இறைவன் எமக்கு அருள் புரிவானாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளின் ஆளுமை விருத்திக்கு அண்ணல் நபியின் அழகிய வழிகாட்டல்

இஸ்மாயில் (ஸலபி)



இஸ்லாமிய நெறியில் குழந்தை வளர்ப்பு எனும் போது அவர்களது லௌகீக நலன் நாடிய ஆளுமைகள் மட்டுமன்றி, அவர்களின் 'ஹிதாயத்' எனும் ஆன்மிக ஆளுமை விருத்தியும் நோக்கமாகக் கொள்ளப்படும். இந்த வகையில் குழந்தைகளின் ஆன்மிக-லௌகீக முன்னேற்றத்திற்கு நபி(ﷺ) அவர்கள் கொடுத்த முக்கியத்துவம், அதற்காக அவர்கள் காட்டிய வழிமுறைகளை இங்கே சுருக்கமாகத் தொகுத்துத் தர விரும்புகின்றோம்.

**1. பிரார்த்தனை:**

நபி(ﷺ) அவர்கள் தமது எதிரிகளின் குழந்தைகளின் எதிர்கால முன்னேற்றத்திற்காகக் கூடப் பிரார்த்தனை செய்துள்ளார்கள். இது எதிர்கால சந்ததிகளின் சீர்திருத்தத்திற்கு அவர்கள் வழங்கிய முக்கியத்துவத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

நபி(ﷺ) அவர்கள் தாயிப் நகருக்குப் பிரச்சாரத்திற்குச் சென்ற போது, அம்மக்கள் நபி(ﷺ) அவர்களைத் துரத்தித் துரத்தித் தாக்கினர். நபி(ﷺ) அவர்களின் பொன்னான மேனியில் ஏற்பட்ட காயங்களிலிருந்து வடிந்த இரத்தத்தால் அவர்களின் பாதணிகள் தோய்ந்து போகும் அளவுக்குத் தாக்கப்பட்டார்கள்.

அப்போது அவர்கள் செய்த பிரார்த்தனை உருக்கமானதாகும். அப்போது அல்லாஹ்தஆலா நபியவர்கள் விரும்பினால் அந்த மக்களை அழித்து விட மலைக்குப் பொறுப்பான மலக்கை அனுப்பினான்.

எனினும் நபி(ﷺ) அவர்கள்;
"இவர்கள் இல்லாவிட்டாலும் இவர்களின் சந்ததிகளில் அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்காமல் அவன் ஒருவனை மட்டும் வணங்குபவர்கள் உருவாக வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன்" எனக் கூறினார்கள்.

தனது எதிரிகளின் குழந்தைகள் கூட அல்லாஹ்வை மட்டும் வணங்குபவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக வேண்டும் என நபி(ﷺ) அவர்கள் பிரார்த்தித்துள்ளார்கள். நாம், "நமக்குச் சந்ததி தேவை!", "எனக்குப் பேரப்பிள்ளை தேவை!", "எனக்கு ஆண் பிள்ளை தேவை! என்றுதான் ஆசைப்படுகின்றோம்; அதற்காகத்தான் பிரார்த்திக்கின்றோம்; நேர்ச்சை செய்கின்றோம். என்றாவது, ஒரு நாளாவது "அல்லாஹ்வுக்கு இணை வைக்கக் கூடாது!", "அவன் ஒருவனை மட்டுமே வணங்கும் சந்ததி தேவை!" என்று பிரார்த்தித்துள்ளோமா? எனச் சற்று சிந்தித்துப் பாருங்கள்!

நபி(ﷺ) அவர்கள் குழந்தையின் உருவாக்கம் ஷைத்தானியத்திலிருந்து உருவாகாமல், ஆன்மிகத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என்று வழிகாட்டினார்கள்.

உங்களில் ஒருவர் தன் மனைவியிடம் தாம்பத்தியத்திற்காகச் சென்றால்;

بسم الله اللهم جنبنا الشيطان وجنب الشيطان مارزقتنا

"பிஸ்மில்லாஹ்! ஜன்னிப்னஷ் ஷைத்தான வஜன்னிபிஷ் ஷைத்தான மா ரஸக்தனா"

பொருள்:- எம்மை விட்டும், எமது (இந்த உறவின் மூலம்) எமக்கு நீ வழங்கும் குழந்தையை விட்டும் ஷைத்தானைத் தூரப்படுத்துவாயாக!" என்று ஓதினால் அவர்களுக்குக் கிடைக்கும் குழந்தையை ஷைத்தான் அடைய மாட்டான் என்று கூறினார்கள்.

இந்த துஆவை ஓதி எமது சந்ததிகளை ஆன்மிகத்தின் அடித்தளத்தில் உருவாக்கினோமா? அல்லது ஷைத்தானின் அடிப்படையில் உருவாக்கினோமா? என்பதை அனைவரும் ஒரு முறை சிந்தித்துப் பார்ப்பது சிறந்ததாகும்.

**கருவறைக் குழந்தைக்கும் துஆ:**

கருவில் குழந்தை நீர்த் துளியாக இருக்கும் போதே நபி(ﷺ) அவர்கள் அதற்காகப் பிரார்த்தித்துள்ளார்கள்.

அபூதல்ஹா(رضي الله عنه) அவர்கள் பயணத்தில் இருக்கும் போது அவரது குழந்தை மரணித்து விட்டது. அவர் வீட்டுக்கு வந்ததும், அவரது மனைவி மரணச் செய்தியைக் கூறாது, அவருக்கு உணவளித்து, அன்று இல்லறத்திலும் ஈடுபட்டனர். ஈற்றில் மரணச் செய்தியைக் கூறினார்கள். இது குறித்து அபூதல்ஹா நபி(ﷺ) அவர்களிடம் கூறிய போது, "உங்கள் இருவரின் இரவிலும் அல்லாஹ் அருள் செய்வானாக!" என்று பிரார்த்தித்தார்கள்.

நண்பரின் குழந்தை கருவில் உருவான போதே அதற்காகப் பிரார்த்தித்துள்ளார்கள். இந்தப் பிரார்த்தனையின் பலனை அவர் அடைந்தார் என்று வரலாறு கூறுகின்றது.

**கருவறையிலிருந்தே கரிசனை ஆரம்பம்:**

இன்று 'சிறுவர் உரிமை' பற்றிப் பலவாறு பேசுகின்றனர். குழந்தை கருவில் இருக்கும் போதே அதன் நலன் குறித்து நபி(ﷺ) அவர்கள் அக்கறை செலுத்தியுள்ளார்கள். இஸ்லாமிய சட்ட வரையறைகளும் இதை எமக்கு உணர்த்துகின்றன.



**தண்டனையைத் தள்ளிப் போடல்:**

ஒரு பெண் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்து அவள் கர்ப்பிணியாகவும் இருந்தால், குழந்தையின் நலன் நாடி அவளது தண்டனை தள்ளிப் போடப்படும்.

ஒரு பெண் தான் விபச்சாரம் செய்ததாகவும், அதனால் தான் கருவுற்றுள்ளதாகவும் கூறுகின்றாள். நபி(ﷺ), அவளுக்குத் தண்டனையளிக்காது "குழந்தையைப் பெற்று விட்டு வா!" என்கின்றார்கள். பெண்ணின் பொறுப்புதாரியை அழைத்து, "இந்தப் பெண்ணுடன் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும்!" என்றும் கூறுகின்றார்கள்.

அந்தப் பெண், குழந்தையைப் பெற்ற பின்னர் வந்த போது குழந்தை பால் மறந்ததன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் வரச் சொன்னார்கள். குழந்தைக்குப் பால் மறந்து உரொட்டி உண்ணும் பருவத்தில் அந்தப் பெண் வந்த போது அவளுக்குத் தண்டனை அளிக்கப்பட்டது.

தாய் செய்த தவறுக்குத் தண்டனை அளிக்கும் போது, தவறுடன் சம்பந்தப்படாத குழந்தை பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதில் நபியவர்கள் காட்டிய அக்கறை இந்த ஹதீஸ் மூலம் தெளிவாகின்றது. அத்துடன் குழந்தையின் தாய்ப்பால் அருந்தும் உரிமைக்கு இஸ்லாம் கொடுத்த முக்கியத்துவமும் இங்கு தெளிவாகின்றது. ஆனால் இன்றைய சூழலில் ஒரு தாய் தவறு செய்து விட்டு தனது தவறுக்குக் கருவறையையே கல்லறையாக்கிக் குழந்தையைக் கொல்கிறாள். பெற்ற பிள்ளையைக் காட்டிலும், கழிவு நீர் ஓடும் காண்களிலும் வீசி எரிகிறாள். கழுத்தை நெறித்துக் கொல்கிறாள். கருணையின் உறைவிடமான கர்ப்பப் பைக்குள்ளேயே இப்படியும் கொடூரமா?

**கடமைகளை நீக்குதல்:**


இஸ்லாம் விதித்த கடமைகள் சிலவற்றைக் கூட குழந்தை நலன் நாடித் தாய்க்கு இஸ்லாம் நீக்கி விடுகின்றது. ஒரு பெண் கர்ப்பிணியாக இருந்து அல்லது பாலூட்டும் தாயாக இருந்து, தான் நோன்பு நோற்பதால் குழந்தைக்குப் பாதிப்பு ஏற்படும் எனில் அவள் நோன்பை விட்டு விட இஸ்லாம் அனுமதித்துள்ளது. இவ்வாறே ஜமாஅத் தொழுகை நடக்கும் போது குழந்தைகளின் அழுகுரல் கேட்டால் நபி(ஸல்) அவர்கள் ஓதுவதைச் சுருக்கி விடுவார்கள் என்பதை ஹதீஸ் மூலம் அறிகிறோம்.

**சலுகை அளித்தல்:**

ஒரு பெண்ணை அவளது கணவன் முதல் இரு தலாக் கூறினால், அவளுக்கு இத்தாக் காலம் முடியும் வரை செலவு கொடுக்க வேண்டும். மூன்றாம் தலாக் கூறி விட்டால் செலவு கொடுக்க வேண்டியதில்லை. இருப்பினும் மூன்றாம் தலாக் கூறப்பட்ட பெண் கர்ப்பிணியாக இருந்தால், குழந்தையைப் பெற்றெடுக்கும் வரை அவளுக்கு அவன் வாழ்வாதாரம் அளிக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் சட்டமாகும். இது 'சிறுவர் உரிமை' கருவறையில் இருந்தே ஆரம்பிக்கின்றது என்பதையும், சிறுவர் நலனில் இஸ்லாம் எவ்வளவு அக்கறை செலுத்துகின்றது என்பதையும் தெளிவுபடுத்துகின்றது.

**ஆணோ, பெண்ணோ குழந்தை என்பது அருளே!**

சிலர் பெண் குழந்தையென்றதும் முகம் சுளிக்கின்றனர். குழந்தை ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அல்லாஹ்வின் மிகப் பெரும் அருள்தான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். குழந்தைப் பராமரிப்பில் ஆண்-பெண் பேதம் என்பது இருக்கவே கூடாது.



சிலர் 'அதிக குழந்தை அபாக்கியம்!' என எண்ணி, உருவான கருவையும் கலைத்து விடத் துடிக்கின்றனர். அல்குர்ஆன் குழந்தை பற்றிக்கூறும் இடங்களில் நற்செய்தி (19:7, 11:61, 16:59) என்றே கூறுகின்றது. எனவே, குழந்தைச் செல்வத்தைப் பாக்கியமாகப் பார்க்க வேண்டும். ஆண், பெண் பேதம் பார்க்கலாகாது.

**நபிகளாரின் தஹ்னீக்:**

நபி(ஸல்) அவர்கள் குழந்தைகள் விடயத்தில் காட்டிய அக்கறையைத் தெளிவுபடுத்தும் அம்சங்களில் இதுவும் ஒன்றாகும். தஹ்னீக் என்பது ஈத்தப்பழம் அல்லது இனிப்பான ஒரு பொருளை வாயில் மென்று மென்மைப்படுத்தி பிறந்த குழந்தையின் வாயில் வைப்பதைக் குறிக்கும். நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு குழந்தைகளுக்குச் செய்து அவர்களின் பரகத்திற்காக துஆவும் செய்துள்ளார்கள். இவ்வாறு இனிப்பூட்டுவது குழந்தைகளுக்கு நலனளிக்கின்றது. என்றும்

அவர்களின் தாங்கும் சக்தியை அதிகரிக்கின்றது என்றும் நவீன மருத்துவம் கூறுகின்றது.

விபச்சாரத்தில் பிறந்த குழந்தை என்றாலும் உரிமை பரிக்கப்படக்கூடாது.

நபி(ﷺ) அவர்கள் குழந்தைகளின் உரிமை விடயத்தில் அவதானமாக நடந்துகொள்ளுமாறு ஏவியுள்ளார்கள். ஏற்கனவே நாம் குறிப்பிட்ட ஹதீஸில் விபச்சாரத்தில் பிறந்த ஒரு குழந்தை என்றாலும் அல்லாஹ்வின் தண்டனையை நிறைவேற்றுவதால் கூட தாயின் பாலைக் குடிக்கும் உரிமையை இழந்துவிடக் கூடாது என்பதிலே கரிசனை காட்டியுள்ளார்கள்.

இன்று சில தந்தையர்கள் தமது மனைவியரின் மரணத்தின் பின்னர் மறுமணம் புரிகின்றனர். இரண்டாவது மனைவி முதல் மனைவியின் குழந்தைகளைக் கொடுமைப் படுத்துவதைப் பார்க்கின்றோம். பூனையைக் கொடுமைப்படுத்திய பெண் நரகம் சென்றாள் எனக் கூறும் மார்க்கத்தில் இருந்துகொண்டு தாயில்லாக் குழந்தைகளை அதுவும் தனது கனவனின் குழந்தைகளைக் கொடுமை செய்யும் பெண்ணின் நிலை என்னவாகும் என்பதை இத்தகையவர்கள் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

**அகீகா வழங்குதல்:**

குழந்தையின் ஆன்மீக ஆளுமையையும் அல்லாஹ்வின் அருளையும் பெற அகீகா எனும் விருந்தோம்பல் வழி செய்கின்றது.

நாம் ஜாஹிலிய்யாக் காலத்தில் குழந்தை பிறந்தால் ஆட்டை அறுத்து அதன் இரத்தத்தைக் குழந்தையின் தலையில் பூசுவோம். இஸ்லாம் வந்த பின்னர் ஆட்டை அறுத்துப் பகிர்வோம். குழந்தையின் தலையை மழித்து அதற்கு குங்குமத்தைப் பூசுவோம் என அபூஹுரைரா (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே, குழந்தை பிறந்து 7ம் நாளில் ஆட்டை அறுத்து விருந்து வழங்குதல் அல்லது மாமிசத்தைப் பகிர்தல் நபிவழியாகும்.

"ஒவ்வொரு குழந்தையும் ஆகீகாவுக்கு அடகு வைக்கப்பட்டுள்ளது. ஏழாம் நாளில் அதற்காக அறுக்கப்பட்டு தலை மழிக்கப்படும். குழந்தைக்குப் பெயர் சூட்டப்படும்" என நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள். (திர்மதி, நஸஈ)

எனவே அகீகா வழங்கி அல்லாஹ்வின் அருளைப் பெறுவதும் குழந்தை வளர்ப்புடன் சம்பந்தப்பட்டதாகும்.

**அழகிய பெயர் சூட்டல்:**

குழந்தைகளுக்குச் சூட்டப்படும் பெயர்கள் அழகானதாக இருக்க வேண்டும். நல்ல அர்த்தம் கொண்டதாகவும், அசிங்கமான உச்சரிப்பு அற்றதாகவும் இருக்க வேண்டும்.

குழந்தைகளின் பெயர்கள் வித்தியாசமாக அமைந்து விட்டால் அதுவே அவர்களுக்குப் பட்டப் பெயராக மாறி விடும். தனது தரக்குறைவான பெயரைக் கூறும் போதே அவன் கூனிக் குறுகிக் குற்ற உணர்வுடன் வாழும் நிலை உருவாகும். எனவே பெயர் அழகாகவும், நல்ல அர்த்தமுடையதாகவும், எடுப்பாகவும் இருக்க வேண்டும்.

நபிமார்களின் பெயர்களைச் சூட்டுங்கள். உங்கள் பெயர்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது 'அப்துல்லாஹ்', 'அப்துர்ரஹ்மான்' என்பதாகும். ஹாரிஸ் - حارث உழைப்பாளி. ஹும்மாம் - همام முயற்சிப்பவன் என்பன மிகவும் உண்மையானவையாகும். ஹர்ப் (போர்), முர்ரா (கசப்பு) என்பன மிகவும் வெறுக்கத்தக்கவையாகும் என நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

(இப்னு உமர்(ரழி) - அபூதாவூத், நஸஈ)

இவ்வாறே சில பெயர்களைக் குறிப்பிட்டு அந்தப் பெயர்களை வைக்க வேண்டாம் என்றும் நபி(ﷺ) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் போது விழிப்புடன் இருக்க வேண்டும். இன்று சிலர் தமது பிள்ளைகளின் பெயர் ஆங்கில உச்சரிப்புக்கு style ஆக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆயினும் அதன் அர்த்தம் பற்றி அவர்கள் அலட்டிக்கொள்வதில்லை. ஆரம்ப காலத்தில் இருந்தது போல் நபிமார்களின் பெயர்களைச் சூட்டும் வழக்கமும் அருகி வருகின்றது. அவை பழைய பெயர்களாகப் பார்க்கப்படுகின்றன. இவ்வாறே முக்கிய ஸஹாபாக்களின் பெயர்கள் கூட பழைய பெயர் என்ற காரணத்தால் புறக்கணிக்கப்படுவதையும் அவதானிக்கலாம். இதனால் இஸ்லாமிய வரலாற்றை மறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்ததிகளாக எதிர்கால சந்ததியினர் மாறும் அபாயம் உள்ளது.

**சிகை அலங்காரத்தில் கவனம் செலுத்துதல்:**

நபி(ﷺ) அவர்கள் குழந்தை பிறந்து 7 ஆம் நாளில் அதன் தலைமுடி மழிக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றார்கள். இதன் மூலம் குழந்தையை விட்டும் தொல்லைகள் அகற்றப்படும் என்றும் கூறுகின்றார்கள். இவ்வாறான நிலையில் கைக் குழந்தைகளுக்கு மொட்டை அடிப்பது அதற்கு இராகத்தையும், சுகத்தையும் அளிக்கும்.



வளர்ந்த சிறுவர்-சிறுமியர் என்றால், "சிறுவர் தானே!" என அவர்களின் சிகை அலங்காரத்தில் கவனம் செலுத்தாது இருக்க முடியாது. அவர்களின் தோற்றம் கோமாளித்தனமானதாகவோ, வெகுளித்தனத்தை வெளிப்படுத்துவதாகவோ அமைந்து விடக் கூடாது. இது அவர்களின் ஆளுமையைப் பாதிக்கும். தன்மானச் சிக்கலை உண்டுபண்ணும்.

இப்னு உமர்(ؓ) அவர்கள் இது குறித்துக் கூறும் போது, "நபி(ﷺ) அவர்கள் 'அல்கஸஃ' வைத் தடுத்தார்கள்" என்று குறிப்பிட்டார்கள். "அல்கஸஃ என்றால் என்ன?" எனக் கேட்ட போது, "சிறுவர்களின் தலையில் ஒரு பகுதியைச் சிரைத்து, மறுபகுதியை விட்டு விடுவதாகும்" எனக் குறிப்பிட்டார்கள்.

(புகாரி, முஸ்லிம்)

**பிள்ளைகளின் பெயரால் புனைப்பெயர் சூட்டல்:**

ஒருவருக்கு அப்துல்லாஹ் என்றொரு குழந்தை இருந்தால், அவர் தன்னை அபூ அப்துல்லாஹ் என அடையாளப்படுத்திக்கொள்வதை இது குறிக்கும். இது குழந்தையிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

எனது பெயரால்தான் என் தந்தை அறியப்படுகின்றார் என அறியும் போது, தான் தவறு செய்தால் தனது குடும்பத்தின் பெயர் கெட்டு விடும் என்ற உணர்வை ஏற்படுத்தும். நபி(ﷺ) அவர்கள் அல்லாஹ்வின் தூதராக இருந்தும் கூட அவரது மகன் காசிமின் பெயரால் அபுல் காசிம் என அழைக்கப்பட்டுள்ளார்கள்.

அபூ ஷுறைஹ்(ؓ) அவர்கள் கூறுகின்றார்கள்;

"தாம் வெளியூரில் இருந்து நபி(ﷺ) அவர்களைச் சந்திப்பதற்காகத் தமது தூதுக்குழுவினருடன் வந்திருந்த வேளை எனது கூட்டத்தினர் என்னை அபுல் ஹகம் (அறிவின் தந்தை) என அழைப்பதை நபி(ﷺ) அவர்கள் செவியுற்றார்கள். உடனே நபி(ﷺ) அவர்கள் என்னை அழைத்து, "அல்லாஹ்தான் ஞானம் மிக்கவன். அவனிடமே அனைத்து ஞானங்களும் மீளும். எனவே, நீ உன்னை 'அபுல் ஹகம்' என்று புனைப் பெயர் சூட்டிக்கொள்ளாதே!" என்றார்கள். அதற்கு நான், "அல்லாஹ்வின் தூதரே! எனது கூட்டத்தினருக்கு மத்தியில் ஏதேனும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் என்னிடம் வருவார்கள். நான் அளிக்கும் தீர்ப்பை இரு சாராரும் திருப்தியுடன் ஏற்பார்கள்!" என்று கூறினேன். இது கேட்ட நபி(ﷺ) அவர்கள், "இது எவ்வளவு அழகான விடயம்!" என்று கூறி விட்டு, "உனக்குக் குழந்தைகள் இருக்கின்றார்களா?" எனக் கேட்டார்கள். "ஷுரைஹ், முஸ்லிம், அப்துல்லாஹ் என்று மூவர் உள்ளனர்!" என்றேன். "அவர்களில் மூத்தவர் யார்?" என நபி(ﷺ) அவர்கள் கேட்டார்கள். நான், "ஷுரைஹ்!" என்றேன். "அப்படியாயின் நீ அபூஷுரைஹ்!" என நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

(அபூதாவூத்)

எனவே, குழந்தைகளின் பெயரைக் கொண்டு தந்தை 'அபூ' என்றும், தாய் 'உம்மு' என்றும் அழைக்கப்படுவது குழந்தைகளுக்கும் குடும்பத்திற்குமிடையில் நெருக்கத்தை உண்டுபண்ணுவதுடன் அவர்களிடத்தில் பொறுப்புணர்ச்சியையும் ஏற்படுத்தும்.

இன்ஷா அல்லாஹ்
அடுத்த இதழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூஸா நபியின் தடி

## 6. பிர்அவ்னின் மாளிகையில்

பிர்அவ்னுக்குச் சொந்தமான
பல்வேறு மாளிகைகள்
நைல் நதியின் கரையோரத்தில்
கட்டப்பட்டிருந்தன.

நைல் நதியின்
அழகிய கரையோரத்தில்
ஒவ்வொரு மாளிகையாக
மாறிமாறி உல்லாசமாய் இருப்பான்
ஓய்வெடுத்துக் கொள்வான்

ஒருநாள்
நைல் நதிக் கரையருகே அமர்ந்து
உல்லாசமாய் இருக்கையில்
தனது காலுக்குக் கீழால் ஓடும்
அந்த நதியை நோட்டமிடுகிறான்.

எகிப்து தேசத்து
பட்டத்து இராணியான
அவனது மனைவியும்
அவனோடு அமர்ந்து
உல்லாசமாய் இருக்கையில்
தனது காலுக்குக் கீழ் ஓடும்
நைல் நதியை நோட்டமிடுகிறாள்

இந்த இன்பகரமான வேளையில்
நைல் நதியில் மிதந்து
அலைகள் முத்தமிடுவதுபோல்
தத்தளித்து வரும் பெட்டியின்மீது
இருவரின் பார்வையும் பதிகிறது.

தலைவனே! கணவனே!
அப்பெட்டியைக் கண்டீரா?

நைல் நதியில் பெட்டியா?
இந்நதியில் விழுந்துவிட்ட
பலகைத்துண்டு அது

இல்லை தலைவனே!
அது பெட்டியேதான்.

சம்பாஷணை முடியமுன்
அப்பெட்டியோ அண்மித்து
வந்துவிட்டது.

இது பெட்டியேதான்
இது பெட்டியேதான் என்று
அங்குள்ளவர்கள் சத்தமிட்டனர்.

பணியாளர்களில் ஒருவரை அழைத்து
"இப்பெட்டியை வெளியிலெடுத்து
அதனை நீயே எடுத்துக் கொள்"
என்று கட்டளை பிறப்பித்தான்.

கட்டளைக்கு கட்டுப்பட்ட பணியாள்
நைலில் இறங்கி
பெட்டியை வெளியே கொண்டுவந்தான்
அதனை திறந்தபோது
அங்கே பச்சிளம் குழந்தை
புன்முறுவல் பூத்தது.

அனைவரும் பேதலித்துப் போனார்கள்.
ஒவ்வொருவராய் மாறிமாறி
தொட்டுப் பார்த்து அதிர்ந்துவிட்டனர்.
பிர்அவ்னும் அதிர்ந்துவிட்டான்
அவனும்கூட
அப் பிள்ளையை வாங்கிப் பார்த்தான்.

"இதுவும் இஸ்ரவேலர்களின் பிள்ளையே
எனவே இதனையும்
அரசர் அறுத்துவிட வேண்டும்"
என அவர்கள் ஆலோசனை கூறினர்.

அப்பிள்ளையைப் பார்த்த பிள்ளைப்
பேறில்லாத இராணிக்கோ
இருப்புக் கொள்ளவில்லை
பிள்ளைப் பாசம் பொத்துக் கொண்டு வந்தது.
தனது நெஞ்சுடன் அள்ளி அணைத்தாள்
மாறிமாறிக் கொஞ்சினாள்.

"எனக்கும் உங்களுக்கும்
இப்பிள்ளை கண் குளிர்ச்சியாய் இருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை கொல்ல வேண்டாம்
வைத்துக் கொள்வோம்
இதை நமது பிள்ளையாக வளர்ப்போம்
பின்னொரு காலத்தில்
எமக்கு உதவி புரியலாம்"
என்று இராணி கூறியதைக் கேட்ட
பிர்அவ்ன் அடங்கிப் போனான்.
அக்குழந்தைதான் பின்னர்
மூஸா நபியாக மாறியது.

இப்படித்தான் மூஸா
பிர்அவ்னின் கோட்டைக்குள் நுழைகிறார்
பிர்அவ்னினதும்
அவனது பட்டாளத்தினதும்
எதிர்பார்ப்புக்கள் அனைத்தும்
தவிடுபொடியாகின.
அவர்களது பாதுகாப்பிலேயே
பிள்ளை வளர்கிறது.

## அபூபக்கர் சித்தீக் (ரழி)

அப்துல்லாஹ் பின் உத்மான் பின் அபீகுஹாபா என்பது அவரது பெயர். சுவனவாதிகள் என நபிகளாரால் அறிமுகப்படுத்தப்பட்ட பத்துப் பேரில் இவரும் ஒருவர். நபிகளாருக்கு இரு வருடங்கள் இளையவர். வயது வந்தவர்களில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முதலாமவரும் இவரே. யத்ரிபுக்கு நபிகளார் ஹிஜ்ரத் மேற்கொண்டபோது அவருடன் கூடவே இருந்தார். நபிகளாருக்குப் பின் ஹிஜ்ரி பத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று இரண்டு வருடங்களும் மூன்று மாதங்களும் ஆட்சி செய்தார். தனது மகள் ஆயிஷா(ரழி) அவர்களை நபிகளாருக்கு திருமணம் செய்து கொடுத்தவர். அன்னையாரின் வீட்டில் நபிகளாருக்குப் பக்கத்தில் அடக்கம் செய்யப்பட்டவர். இவருக்கு ஆறு பிள்ளைகள். அப்துல்லாஹ், அப்துர்ரஹ்மான், முஹம்மத் என மூன்று புதல்வர்களும் அஸ்மா, ஆயிஷா, உம்முகுல்தூம் என மூன்று பெண்மக்களுமாவர் (ரழியல்லாஹு அன்ஹும்)

## ஹலீமதுஸ்ஸஃதிய்யா

இவர்கள் நபிகளாரின் இரண்டாவது தாய். நபிகளாருக்கு பால் கொடுத்ததால் இவருக்கும் சிறப்பு உண்டு. இலக்கண இலக்கியம் தவறாது நாகரீகமாக அரபுமொழி பேசுகின்ற பனீஸஃது குலத்தைச் சேர்ந்தவர்கள். ஆறு வயதில் தன் தாயாரிடம் நபிகளார் வந்துவிட்டபோது சிறுவர் முஹம்மதை நினைத்து ஹலீமாவும் அவர்களது பிள்ளைகள் மூவரும் இவரால் அடைந்த நன்மைகளை நினைத்து கவலைப்பட்டுக் கொண்டே இருந்தார்கள்.

## கஃப் இப்னு ஸுபைர்

பெரும் புலவர். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளமுன், நபிகளாரை தூசித்து கவி பாடியவர்களுள் இவரே முதலாமவர். இஸ்லாத்தை ஏற்றபின் நபிகளாரைப் பற்றிப்பாடி, கவி வரிகளாலேயே மன்னிப்பும் கேட்டவர். இதனால் ஆச்சரியப்பட்ட நபிகளார் அவருக்கு தனது போர்வையை வழங்கி கௌரவித்தார்கள். இருபதினாயிரம் திர்ஹம் கொடுத்து இப்போர்வையை அன்றைய கலீபா முஆவியா பின் அபீசுபியான் விலைக்கு வாங்கினார். தாத்தாரியர்கள் படையெடுத்து பக்தாதை தீயிட்டுக் கொளுத்தும்வரை இப்போர்வையை உமைய்யா, அப்பாசிய கலீபாக்கள் அணிவது வழக்கமாக இருந்தது என்பது வரலாறாகும். (பறாஇமுல் ஈமான் நவம்பர் 2009 துல்கஃதா 1430)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிஜாபை அசிங்கப்படுத்தாதீர்! சகோதரிகளே!



– ஷாகிரா சத்தார் –
பரகஹதெனிய தேசிய பாடசாலை.

(நபியே!) நம்பிக்கையாளர்களான பெண்களிடம், அவர்கள் தமது பார்வைகளைத் தாழ்த்திக்கொள்ளுமாறும், தமது கற்புகளைப் பாதுகாத்துக்கொள்ளுமாறும், அவர்களது அலங்காரத்தில் வெளிப்படுவதைத் தவிர வேறு எதையும் அவர்கள் வெளிப்படுத்தக் கூடாது என்றும், தமது முந்தானைகளை தமது மார்பகங்கள் மீது போட்டுக்கொள்ளுமாறும் (நபியே!) நீர் அவர்க்ளுக்குக் கூறுவீராக! மேலும், அவர்கள் தமது அலங்காரத்தைத் தமது கணவன்மார்கள் அல்லது தமது தந்தையர் அல்லது தமது கணவன்மார்களின் தந்தையர்... (24:31)

இன்று பாடசாலை செல்லும் பருவப் பெண்களின் நிலையையும் ஹிஜாபின் நிலையையும் ஆராய்ந்தால், மிகவும் பரிதாபத்திற்கிடமாக அமைந்துள்ளதைக் காணலாம். முஸ்லிம் பாடசாலைகளில் கட்டாயப்படுத்தப்பட்டுள்ள ‘ஃபர்தா’வைத் தவிர மாலை நேர வகுப்புகளிற்கும், ஏனைய கருத்தரங்கு போன்ற அம்சங்களிலும் எமது பெண் மாணவிகள் பயணம் செய்யும் காட்சியானது மிகவும் வருத்தப்படக் கூடிய நிலையிலேயே உள்ளது. இதனிலும் மேலாக அந்நிய மொழிப் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவியர், குட்டையான சீருடைகளை (சட்டைகளை) அணிவது மட்டுமல்லாமல், கழுத்தில் ஹிஜாபினைச் சுற்றிக் கொண்டு செல்வதையும் காணலாம்.

ஏன் சகோதரிகளே... உங்களின் பாதுகாப்பிற்காகவே கடமையாக்கப்பட்ட ஹிஜாப் முறையினை நீங்கள் கஷ்டமாக, அன்றில் அவமானமாக உணர்கிறீர்களா..? இல்லையானால் தாங்கள் முஸ்லிம்கள் என்றும் வெளிப்படுத்துவதற்கான ஒரு அடையாளமாகக் கருதுகின்றீர்களா..? இதன் மூலம் தாங்களே தங்களுடைய மார்க்கத்தினை இழிவுபடுத்துவதனை உணரவில்லையா?

முன்னைய காலங்களில் முஸ்லிம்களின் நன்னடத்தைகளைக் கண்டு அந்நியக் கலாசார மக்கள் இஸ்லாத்தை ஏற்க முன்வந்தனர். ஆனால், இன்று எமது நடத்தையானது அவர்களை விரண்டோடச் செய்கின்றது. முக்கியமாக எமது பெண்கள் அரை-குறையான ஹிஜாப் முறையுடன் வீதிகளிலும், கல்வி நிலையங்களிலும், பஸ்களில் பயணம் செய்யும் வேளையிலும் அவர்களின் நடத்தைகள் கண்டு பிறர் முகஞ்சுழிக்கும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. முழு ஹிஜாப் முறையுடனும் தகுந்த துணையொருவருடனும் மேற்கொள்ள வேண்டிய பயணங்களை ஒழுக்கம், கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றை மீறி தலையை மறைக்காத நிலையில், அரை-குறை ஹிஜாப் முறையோடு தனியாகவே பயணம் செய்யத் துணிந்திருப்பதைக் காணலாம். இது இன்றைய இளம் பருவத்தினரின் ஹிஜாப் மீதான பற்றற்ற நிலையையே எடுத்துக் காட்டுகின்றது. ஒரு பெண்மனி முழு ஹிஜாப் முறையுடன் செல்லும் போது கிடைக்கப் பெற்ற மதிப்பு-மரியாதை என்பன தற்கால ஒருவரின் ஆடை முறையினால் அவமதிக்கப்படுகின்றது; கேலிக்குள்ளாக்கப்படுகின்றது. எனினும் இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணராமல் இன்றைய பருவப் பெண்கள் தங்கள் உடல் அலங்காரங்களையும், உடையலங்காரங்களையும் வெளிப்படுத்திக் கொண்டு திரிவது மிகவும் கவலைக்குரியதாகும்.

அநேகமானவர்கள் ஹிஜாப் முறையைப் பேணி வந்த போதிலும் அவை வெகுவாக அலங்கரிக்கப்பட்டு, பளிச்சென்று மினுக்கிக்கொண்டிருக்கும் ஹிஜாப்-ஹபாயா போன்றவற்றையே தேர்வு செய்கின்றனர். தங்களுடைய அழகை மறைக்கவென்று அணியக் கூடிய 'ஹபாயா' - அவை கூட அலங்கரிக்கப்பட்டிருந்தால் என்ன பயன்? நாம் எம்மை அலங்கரித்து, அழகுபடுத்திக்கொள்ள வேண்டும். அல்லாஹ்வும் அழகாக இருப்பதையே விரும்புகின்றான். எனினும் நாம் அணியக் கூடிய 'ஹபாயா-ஹிஜாப்' வெகுவாக அலங்கரிக்கப்பட்டுப் பல ஆயிரங்களை அவ் அலங்காரங்களுக்காகவே செலவிடக் கூடியவர்களாகவும் எம்மில் பலர் இருக்கின்றனர். இது ஒரு வகையில் வீண் செலவாக மட்டுமல்லாமல், அதன் மூலம் பலரின் பார்வைகளைத் தன் புறம் ஈர்த்துப் பாவங்களைத் தேடிக்கொள்கிறோமே தவிர வேறில்லை. நன்மையொன்றை எதிர்பார்த்து மேற்கொள்ளக் கூடிய செயலொன்று தீமையையே பெற்றுத் தருமென்றால்..?

**உங்களது வீடுகளிலே நீங்கள் தங்கியிருங்கள். முந்தைய அறியாமைக் காலத்தில் (பெண்கள்) தமது அழகை வெளிப்படுத்தியது போன்று நீங்களும் வெளிப்படுத்தித் திரியாதீர்கள். மேலும், தொழுகையை நிலைநாட்டுங்கள்; ஸகாத்தையும் கொடுத்து வாருங்கள். இன்னும், அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுங்கள். 'அஹ்லுல் பைத்' (எனும் நபியின் குடும்பத்)தினராகிய உங்களை விட்டும் அசுத்தத்தை அகற்றி உங்களை முற்றிலும் பரிசுத்தப்படுத்திடவே அல்லாஹ் விரும்புகின்றான். (33:33)**

மேற்குறிப்பிட்ட அல்குர்ஆன் வசனம் பெண்கள் தங்கள் அலங்காரங்களைத் தன் வசிப்பிட எல்லைக்குள்ளேயே வரையறுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தப்படுகின்றது. ஆனாலும் எமது சமூகத்தில் கல்வியறிவுள்ள தாய்மார்களும், இவ்விடயங்களில் அசட்டையாக இருப்பது வேதனைக்குரியது. தங்கள் உடைகளில் முழுக் கவனம் செலுத்தி, ஹிஜாப் முறையையும் பேணி, ஆனாலும் தங்கள் பெண் பிள்ளைகள் விடயத்தில் அசட்டையாகவும், பொடுபோக்காகவும் இருந்து வருகின்றனர். முஸ்லிம்கள் செறிந்து வாழக் கூடிய பிரதேசங்களிலேயே இவ்வாறு அதிகமாகக் காணப்படுகிறது. தாங்கள் முழு ஹிஜாப்-ஹபாயா முறையிலும் தங்களுடைய பெண்களுக்கு ஆண்களைப் போன்று முழு நீளக் காற்சாட்டைகள், கட்டையான மேற்சட்டைகள் (Trousers, Short up, etc..) போன்ற 'அசிங்கங்களை' அணிவித்து மகிழ்கின்றனர். ஒற்றைக் காலில் 'கொலுஸ' வேறு. இதை விடக் கேவலமாக அவர்களின் கழுத்துகளில் ஹிஜாபினைச் சுற்றி விட்டுத் தலையை மறைக்காத நிலையில் வீதிகளில் அழைத்துச் செல்கின்றனர். பெற்றவள் முழு ஹிஜாப்-ஹபாயா முறையுடன் மகள் ஆடவர் போன்று தன் இரு தோள்களில் ஹிஜாபினைத் தொங்க விட்ட படியான தோற்றத்துடன் அலைகின்றனர்.

("ஆண்கள் பெண்களைப் போன்று ஆடை அணிவதையும், பெண்கள் ஆண்களைப் போன்று உடை அணிவதையும் நபி(ﷺ) அவர்கள் சபித்துள்ளார்கள். அபூதாவூத்")

இது வெறும் கற்பனையில் வடித்த காட்சிகளல்ல. முஸ்லிம்கள் அதிகமாக வாழ்கின்ற, அதிகமாக மார்க்கப் போதனைகள் இடம்பெறுகின்ற, இஸ்லாமியக் கலாச்சாரச் செயற்பாடுகளில் முதன்மை வகிக்கின்ற பிரதேசங்களில் இடம்பெறுகின்ற உண்மை நிலைகளாகும். ஏனோ! இதை விட ஹிஜாப் அணியாமலிருந்திருக்கலாமோ? என்று கூடத் தோன்றச் செய்கின்றது. வல்ல நாயன் அல்லாஹுதஆலா இவர்களுடைய பாவங்களை மன்னிப்பதோடு, மார்க்கத்தில் போதிய விளக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும்.

தாய்மீர்களே! உங்களுடைய பெண் பிள்ளைகள் சுவனத்தை இலேசாக அடைந்துகொள்வதை நீங்கள் விரும்பவில்லையா..? உங்களால் உங்கள் பெண் பிள்ளைகள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாமலில்லை. உங்கள் அனுமதியோடு தானே இளம் பெண்கள் வழி தவறுகின்றனர்? நீங்கள் அனுமதித்தாலேயன்றி, அவ்வாறான வெறுக்கத்தக்க ஆடைகளை வாங்கிக் கொடுத்தாலன்றி அவர்களாகவே இவ்வாறு அசிங்கமான ஆடை முறைகளுடன் வெளியேற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புகளில்லை. இது போன்ற பாவங்களுக்குக் காரணமாகவும், அதற்கு மேலாக வழி காட்டியாகவும் இருக்கும் உங்களை மறுமையில் அல்லாஹ் விசாரிப்பான். நீங்கள் மறுமைக்கு அஞ்சிக்கொள்ளுங்கள்!

ஒரு முறை நபி(ஸல்) அவர்கள் அழுதுகொண்டிருந்தார்கள். அதற்குக் காரணத்தை வினவிய ஃபாத்திமா(ரழி) நாயகியிடம் கூறியதாவது, “நபி(ஸல்) அவர்கள் வானுலகம் சென்ற போது, அவர்களுக்கு நரகம் காட்டப்பட்டது. இதில் அதிகமாகப் பெண்களே வேதனைக்குள்ளாக்கப்பட்டதும் காட்டப்பட்டது. இதில் ஒரு பெண் தன் மேனியை நெருப்புக் கத்தரிக் கோளால் கத்தரித்துக்கொண்டிருந்தாள்.” “ஏன் அப்பெண் அவ்வாறு வேதனை செய்யப்பட்டாள்?” என வினவிய போது, “அப்பெண் தன் மேனியை அலங்கரித்துப் பிறருக்குக் காட்டித் திரிந்தாள்” என்றும் பதிலளித்தார்கள்.

இன்றைய பெண்கள் நிலையும் இப்படித்தான். தனது புற அலங்காரங்களை மிகக் கச்சிதமாகக் கவனத்திற்கொண்டு வீதிகளில் காட்சிப் பொருள் போன்று வலம் வரும் எமது பெண்கள் மறுமையின் நிலையை எண்ணி அஞ்சிக்கொள்ளட்டும்.

இன்னும் எம்மில் சிலர் தமது தலையை மறைக்காதவர்களாகவும் இருக்கின்றனர். இவர்கள் தோள்களின் மீது ஹிஜாப் போர்வை காணப்பட்டாலும், தனது கூந்தல், கூந்தல் அலங்காரங்கள், வெகு நீளமாக தனது தோள்களைத் தொடக் கூடிய காதணிகள் போன்றவை வெளியே தெரியக் கூடிய வகையில் ஹிஜாப் அணிகின்றனர். தங்களது ஆடைகளின் நிறத்திலமைந்த காதணிகளை வெளியே காட்ட வேண்டுமென்பதற்காகவே ஹிஜாபினை அசட்டைப்படுத்துகின்றனர். இதன் மூலம் ஹிஜாப் முறை மட்டுமல்ல; முஸ்லிம் பெண்கள் நிலையே தாழ்த்தப்படுகின்றதென்பதை அறிய மறுக்கின்றனர். இவர் நரகத்தின் பெண்களின் நிலையை எண்ணித் தனது வாழ்வை சீர்படுத்திக்கொள்ளட்டும்.

நபியே! உமது மனைவியருக்கும், உமது புதல்வியருக்கும், நம்பிக்கையாளர்களின் பெண்களுக்கும், அவர்கள் தமது முந்தானைகளைத் தங்கள் மீது தொங்க விடுமாறு கூறுவீராக! அவர்கள் அறியப்படுவதற்கும், நோவினைப்படுத்தப்படாமல் இருப்பதற்கும் இதுவே மிக நெருக்கமானதாகும். மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாகவும், நிகரற்ற அன்புடையவனாகவும் இருக்கின்றான். (33:59)

மேற்குறிப்பிட்டவொரு சந்தர்ப்பத்தில் நரகில் பெண்களின் நிலையானது;

“நரகில் ஒரு பெண்ணின் கூந்தலை இழுத்துக் கட்டித் தலை கீழாகத் தொங்க விடப்பட்டு வேதனை செய்யப்படுகிறாள். கீழே எரிந்துகொண்டிருக்கும் நெருப்பின் சுவாலை அவளுடைய முளைக்கு ஏறி, உருகி வடிந்துகொண்டிருக்கின்றது” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். தனது கூந்தலை அந்நிய ஆண்களுக்கு முன் மறைக்காதவர்கள், தன் தலை மீது ஆடை இல்லாதவர்களின் நிலையே இவ்வாறு இருக்கும் என்றும் தெளிவுபடுத்தினார்கள்.

(அறிவிப்பவர்: அலி(ரழி))

எனவே சகோதரிகளே!

ஹிஜாபினை ஒரு கஷ்டமாக உணராமல் தங்கள் பாதுகாப்பிற்காகவும், உயர்விற்காகவும்தான் என்றெண்ணி மதிப்பளியுங்கள்!

மேலும், தாய்மார்களே!

தங்களுடைய பெண் பிள்ளைகளின் உடை-நடத்தைகளில் முன்னரை விட அதிகக் கவனம் செலுத்திப் பூரண ஹிஜாப் முறையினைப் பின்பற்ற வழி செய்யுங்கள்!



இவற்றுக்கெல்லாம் அல்லாஹ் எம்மோடு துணையிருக்க பிரார்த்திப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்கத்தை விட்டும் வேதனையுடன்

---(ஸலபி)---

அல்லாஹ் மனிதனுக்கு அளித்த ஆறாவது அறிவு அவனை விண்ணை முட்டும் அளவுக்கு வளர்த்துள்ளது! நவீன கண்டுபிடிப்புக்கள், விஞ்ஞான ஆய்வுகள் உலகையே உள்ளங்கையில் உள்ளடக்கும் தொலைத் தொடர்பு சாதனங்கள் என்பன இதை நிரூபிக்கின்றன.

ஆனால், மனித மாண்புகள்தான் மண்ணுக்குள் மாண்டுகொண்டிருக்கின்றன. இந்த வகையில் இன்றைய தொலைத் தொடர்பு சாதனங்கள் ஆயிரம் ஆயிரம் நன்மைகள் பயக்கக் கூடியவை என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை. எனினும் அந்தத் தொலைத் தொடர்பு சாதனங்களை அதிகமானவர்கள் ஆபாசத்திற்கும், வக்கிரத்திற்கும்தான் பயன்படுத்துகின்றனர் என்பது மனிதம் வெட்கித் தலைகுனியும் வேதனையான விடயமாகும்.

அறிவியல் அற்புதமான இணையத்தில் எத்தனையோ நன்மைகள் உள்ளன. ஆனால் இணையத்தில் தேடப்படுகின்ற அம்சங்கள் பெரும்பாலும் ஆபாசம் நிறைந்த காட்சிகளும், கருத்துக்களும்தான். அந்த ஆபாசங்களும், கண்ணியமாக மதிக்கப்பட வேண்டிய உறவுகளுடன் சம்பந்தப்பட்ட அசிங்கங்களாக அமைவது ஆச்சரியமானதாகும். 'மாணவன்-ஆசிரியை கள்ள உறவு', 'மாமி-மருமகன் கள்ள உறவு' என்று உறவுகளை உடைத்து சமூகக் கட்டுக்கோப்பைச் சீரழிக்கும் ஆபாசங்கள் அள்ளி வீசப்படுகின்றன. இதன் ஆபத்தை உலகம் உணர்ந்து வருகின்றது. இன்றைய உலகில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகம் நிகழும் இடமாக வீடுகள் அமைந்து விட்டன. இந்த ஆபாச அத்துமீறல்களை நடத்துவோர் பெரும்பாலும் அப்பாக்களாகவும், மாமாக்களாகவும், தாத்தாக்களாகவும் இருப்பது அசிங்கத்திலும் அசிங்கமாகும்.

இந்த ஆபாசப் படையெடுப்பிலிருந்து எமது இளம் சந்ததிகளை மீட்காவிட்டால், வீட்டில் சின்னப் பிள்ளைகளை வளர்க்க முடியாத ஆபத்தை அனைவரும் சந்திக்கும் அசிங்கமான சமூக நிலையைச் சமாளிக்க முடியாது போகும். இதைப் பற்றி இன்னும் விரிவாக நடந்த சில செய்திகளுடன் விபரித்தால் அதுவே விரசமாகி விடலாம் என அஞ்சுகின்றேன்.

இதே போன்று தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்படும் 'மெகா தொடர்கள்' இன்று முஸ்லிம் பெண்களுக்கு 'மகா எதிரிகளாக' மாறியுள்ளன. குடும்ப நாடகங்கள் என்ற பெயரில் அண்ணன் மனைவியை அடைய முயற்சிக்கும் தம்பியின் தந்திரங்கள், மாமிக்கு மருமகளும், மருமகளுக்கு மாமியும் வில்லத்தனமாகச் செய்யும் சூழ்ச்சிகள் எனப் பிஞ்சுகளின் உள்ளங்களில் குடும்பம் பற்றிய நல்லெண்ணங்களைக் குறைத்து, நஞ்சு கலக்கும் காட்சிகள் காட்டப்படுகின்றன. அத்துடன் சின்னச் சின்ன ஆபாசங்கள் அவர்களைப் பிஞ்சிலே பழுக்க வைக்கின்றன. இதனால் 10 வயதில் 15 வயதுக்குரிய பாலியல் உணர்வுடன் அவர்கள் நோக்கவும், பார்க்கவும் பழக்கப்பட்டு விடுகின்றார்கள். 10 வயது பையன்கள் நால்வர் 8 வயது நண்பியைக் கூட்டு பலாத்காரத்திற்குட்படுத்திய நிகழ்வுகள் கூட நடந்துகொண்டிருக்கின்றன. 12 வயது சிறுமி குழந்தை பெற்றுக் குழந்தைக்குப் 11 வயது நண்பன்தான் தந்தையெனப் பேட்டியளிக்கின்றாள். அந்தக் குழந்தைக்குப் 14, 15 வயதில் இன்னும் இரண்டு பையன்கள் உரிமை கொண்டாடுகின்றார்கள். இந்த இழிநிலைக்குத் தொலைக்காட்சிதான் காரணம் என ஆய்வாளர்கள் அதிர்ச்சித் தகவல் அளிக்கின்றனர்.

எனவே தொல்லையாய்ப் போன இந்தத் தொலைக் காட்சி மூலம் எமது மார்க்கம், நிம்மதி, கொள்கை அனைத்தையும் [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துக்கொள்வது மார்க்கக் கடமையாகும்.

ஒரு உயர் அதிகாரி தனது குடும்ப நிலை குறித்துக் கூறும் போது, "சேர் வீட்டில் கம்ப்யூட்டர் மகனின் அறையில் இருக்கிறது. நண்பர்களுடன் அவன் வந்து கதவையும் மூடி விட்டு அறைக்குள் சத்தமில்லாமல் கம்ப்யூட்டரைப் போடுகிறான். அவர்கள் ஏதோ தவறுதான் செய்கிறார்கள் என்பது புரிகிறது. வளர்ந்த பிள்ளை; என்ன செய்வது என்றுதான் புரியவில்லை" என்று கூறினார்.

நான் அவருக்கு ஆலோசனை கூறும் போது, "நீங்களும் அந்தக் கம்ப்யூட்டரை அடிக்கடி பயன்படுத்துங்கள். அத்துடன் சில நாட்கள் கழித்துக் கம்ப்யூட்டரை ஒரு பொது ஹோலுக்குள் கொண்டு வந்து விடுங்கள்!" என்று கூறினேன்.

இப்படி எத்தனையோ பெற்றோர்கள் தன் குழந்தைகள் குறித்த அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

சில பெற்றோர்களின் பொறுப்பற்ற செயலால் குழந்தைகள் அழிவில் வீழ்ந்த நிகழ்வுகளும் உள்ளன. ஒரு தந்தை ஆபாச (CD) இறுவட்டொன்றைப் பார்த்து விட்டு அப்படியே வைத்து விட்டு அடுத்த நாள் பயணம் செய்கின்றான். மகன் ஒரு (CD) இறுவட்டு இருப்பதைக் கண்டு அதைப் போட்டுப் பார்க்கின்றான். அந்த ஆபாசக் காட்சிகள் அவனைக் கவர்கின்றன. சிறிது நேரத்தின் பின் பின்னால் யாரோ ஒருவருடைய அசைவு தெரிகிறது. பார்த்தால் தங்கையும் அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கின்றாள்.

நிலைமை சகோதர பாசத்தை ஆபாசமாக மாற்றி விடுகின்றது. இருவரும் தவறுகின்றனர். இந்தத் தவறு தொடர்கின்றது. ஈற்றில் சகோதரி "ஏதோ நடந்தது நடந்து விட்டது; இதன் பின் வேண்டாம்!" என்கிறாள். சகோதரனால் தவிர்க்க முடியாத வெறி. எனவே அவள் பெற்றோரிடம் முறையிடுகின்றாள். பிரித்து வைக்கின்றனர். அவன் மனம் மாறவில்லை. தற்போது அவன் உள நல மருத்துவர்களின் உதவியை நாடும் உளவியல் நோயாளியாக மாறியுள்ளான். எனவே இதன் ஆபத்தையும், அசிங்கத்தையும் ஆழ அகலம் உணர்ந்து உஷாராக இருப்பது அவசியமாகும்.

இதே போன்று இன்று அதிகரித்து வரும் cellphone பாவனையும் சமூகத்தைச் சல்லரிக்கின்றது. சில ஆபாச (SMS) குருந்தகவல்களால் தற்கொலை செய்து கொண்ட பெண்களும் உள்ளனர். சில தற்செயலான cellphone அழைப்புக்களுக்கு உணர்ச்சி வசப்பட்ட பெண்கள் தமது வாழ்வையே இழந்துள்ளனர்.

சில காமுகக் கூட்டங்கள் கணவனை இழந்த இளவயதுப் பெண்கள் அல்லது கணவனைப் பிரிந்து வாழும் பெண்கள், தொழில் நிமித்தம் தனியாக வதியும் பெண்களை மோப்பம் பிடித்து அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களும் இயல்பாக ஆபாசமாகப் பேசினால் தொடர்பை நீடித்துத் தமது வலைக்குள் வீழ்த்துகின்றனர். பின்னர் அனுபவித்து முடிந்ததும் போகப் போகப் பணம் கறக்க முற்படுகின்றனர். இந்த வலையில் மாட்டிக் கொண்ட பெண்களும் மானம்-மரியாதைக்குப் பயந்து பணத்தைப் போட்டு மானத்தை மறைக்க முயல்கின்றனர். இவர்கள் பணத்தைக் கொடுத்து விட்டு, "களவு போய் விட்டது; நகைகளைத் தொலைத்து விட்டேன்" என கதையளக்கின்றனர். நிமிட நேரத்தில் அவர்கள் தன் நிலை மறந்ததால் நிம்மதியில்லாமல் தூண்டில் மீனாய்த் துடிக்கின்றனர். ஏன் இந்த அவஸ்த்தை? இது தேவைதானா?

அடுத்து, வீடியோ அடங்கிய செல்.ஃபோன் மூலம் ஆபாசப் படங்கள் பரிமாறப்படுகின்றன. இந்தச் செல்.ஃபோன்களும் பலரது வாழ்வைப் பழி தீர்த்துள்ளன.

ஒரு இளம் பெண் வயிற்று வலி எனத் தினமும் கதவை மூடிக் கொண்டு அழுகிறாள். ஈற்றில் ஒரு நாள் தற்கொலை செய்துகொள்கின்றாள். வயிற்று வலி தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டதாக பெற்றோர் நினைக்கின்றனர். எனினும் அவளது நண்பியின் தகவல் அதிர்ச்சியானது.


அந்தப் பெண் ஒரு செல்.ஃபோன் விற்பனை நிலையத்தில் பணியாற்றியுள்ளாள். அதன் உரிமையாளன் அவளுடன் தவறான பாலியல் தொடர்பு வைத்துள்ளான். இது அவளின் சம்மதத்துடன் நடந்துள்ளது. எனினும் அவள் அறியாவண்ணம் அவன் ஆபாசமாக ஃபோனில் வீடியோ பண்ணப்பட்டுள்ளாள். சில நாட்களுக்குப் பின்னர் அந்தப் பெண்ணைத் தனது நண்பர்களையும் திருப்திப்படுத்துமாறு முதலாளி கேட்டுள்ளான். இவள் மறுத்த போது, இவளது ஆபாசப் படங்களைக் காட்டி "இதை சீடியாக அச்சிட்டு விநியோகிப்போம்" என்று அச்சுறுத்தப்பட்டுள்ளாள். இந்த இக்கட்டிலிருந்து விடுபட முடியாத அந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டாள் என்பதுதான் அந்த அதிர்ச்சித் தகவலாகும்.

(50ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் அமைதி பெற...



தொடர் 2

## தவக்குல் வைத்து உழைப்போம்

அபூ அனான்

சுமக்க முடியாத பாரத்தைக் கையில் வைத்திருக்கின்ற போது அதை வைக்க இடம் தேடுகின்றோம். சுமந்து கொண்டுதான் செல்ல வேண்டும் என்ற நிலையிருந்தால் சேர்ந்து சுமக்க யாராவது துணைக்கு வருவார்களா? என ஏங்குகின்றோம். இது இயல்பானதே!

உள்ளமும் இத்தகைய உதவும் உறவுகளை நாடுகின்றது. சுமக்க முடியாத பாரங்கள் அதை அழுத்திக்கொண்டிருக்கும் போது இதை யார் தலையிலாவது சுமத்தி விட்டு நிம்மதிப் பெருமூச்சு விட விரும்புகின்றது. பாரத்தை ஒருவன் மீது சுமத்தி விட்டால் இயல்பாகவே அது அமைதி அடைகின்றது.

வியாபாரத்தில் நஷ்டம்; வாழ்வில் கஷ்டம்; துஷ்டர்கள் தொல்லை, கொள்ளை நோய், அநியாயக்காரர்களின் அச்சுறுத்தல் என உள்ளம் எனும் ஓடம் கவலைக் கடலில் தத்தளிக்கும் போது நம்மை விட வலிமை படைத்த ஒருவரிடம் முறையிட்டு, அவரும் “நான் அதைப் பார்த்துக்கொள்கிறேன்!” என உத்தரவாதம் அளித்து விட்டார். அவர் பார்த்துக்கொள்வார் என்கிற எண்ணம். அந்த ஓடத்துக்குத் துடுப்பாய்த் முளைக்கின்றது. ஓடமும் தள்ளாட்டம் இல்லாமல் தன்னம்பிக்கையுடன் துடிப்பாய்ப் பயணிக்கும்.

உங்கள் உள்ளச் சுமைகளை யாரிடம் இறக்கி வைக்கலாம்? உலகத்தில் உங்களுக்கு நம்பிக்கையான சிலரிடம் உங்கள் உளக் குமுறலைக் கூறி உதவி தேடலாம். ஆனால் நீங்கள் உங்கள் பொறுப்புக்கள் அனைத்தையும் தங்குதடையின்றி பொறுப்புச் சாட்ட ஒருவன் இருக்கின்றான். அவன் ஒருவனே பொறுப்புச் சாட்ட உண்மையில் தகுதியானவன்! அவன்தான் உங்களைப் படைத்தவன். அவனிடம் உங்கள் உளக் குமுறல்களைக் கொட்டுங்கள். உங்கள் சுமைகளை அவனிடம் ஒப்படைத்து விட்டு காரியமாற்றுங்கள்! இதையே இஸ்லாம் ‘தவக்குல்’ என்கிறது.

**தவக்குல் என்றால் என்ன?**

முறையாகக் காரியமாற்றாமல் கடவுள் பார்த்துக்கொள்வார் என்று சேர்வுற்று சோம்பிக் கிடப்பதன் பொருள் தவக்குல் அல்ல. தவக்குல் என்பது ஒரு மனிதன் தனது சக்திக்கு ஏற்ப முயற்சிக்க வேண்டும். முடிவை இறைவன் கையில் விட்டு விட வேண்டும். முயற்சிக்காமல் முடங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடப்பதன் பெயர் தவக்குல் (கடவுளிடம் பாரம் சாட்டுதல்) என்று ஆகி விடாது. 'ஒட்டகத்தைக் கட்டி விட்டு அல்லாஹ்வின் மீது பாரம் சாட்டுங்கள்' என்பது இஸ்லாத்தின் கருத்தாகும்.

நபி(ﷺ) அவர்களைக் கொலை செய்வதற்காக மக்கத்துக் குறைஷிகள் திட்டம் தீட்டினர். நபி(ﷺ) அவர்கள் இரகசியமாக அபூபக்கர்(ரலி) அவர்களை அழைத்துக் கொண்டு மதீனாவுக்குச் சென்றார்கள். செல்லும் போது வழமையாகப் போகும் வழியில் செல்லாமல் பாதையை மாற்றிச் சென்றார்கள்.

குறைஷிகள் எப்படியும் தம்மைத் தேடி வருவார்கள்; அவர்கள் கையில் மாட்டிக்கொள்ள நேரிடும் என்பதால் தொடர்ந்து பயணிக்காமல் 'தவ்ர்' எனும் குகையில் மூன்று நாட்கள் மறைந்திருந்தார்கள். குறைஷிகள் வழியில் தேடி அலைந்து விட்டு முஹம்மத் தப்பி விட்டார் என எண்ணி தேடுதல் வேட்டையில் இருந்து ஓய்ந்த பின்னர் பயணத்தைத் தங்கு-தடையின்றி தொடர்வதற்காகவே இவ்வாறு ஒளிந்திருந்தார்கள்.

தாம் ஒளிந்திருக்கும் போது தமக்கு உணவு கொண்டு வருவதற்காகவும் மக்கத்துச் செய்திகளை உளவறிந்து வருவதற்காகவும் ஏற்பாடுகளைச் செய்தார்கள். இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்து குகைக்குள் இருக்கும் போது குறைஷிகள் கூட்டம் ஒன்று குகையைச் சுற்றி வட்டமிடுகின்றனர். அவர்களின் கால்பாதங்கள் குகைக்குள் இருக்கும் நபி(ﷺ) அவர்களுக்கும், அவரது தோழர் அபூபக்கர்(ரலி) அவர்களுக்கும் தெரிகின்றன. சாதாரணமாக யாராவது குனிந்து பார்த்து விட்டால் கூட அந்தக் கூட்டத்திடம் இறைத் தூதரும் அவரது நல்லறத் தோழரும் மாட்டிக்கொள்வார்கள் எனும் நிலை. இந்த நிலையில் நபியின் நல்லறத் தோழர் அபூபக்கர்(ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! அவர்களின் ஒருவன் தன் காலைப் பார்த்தால் கூட நம்மைக் கண்டுகொள்வார்களே! நாம் என்ன செய்வது? இருவர்தானே இருக்கின்றோம்?" எனத் தனது அச்சத்தை வெளியிட்டார்கள். அப்போது, அல்லாஹ்வின் தூதர் "அச்சப்படாதீர்கள்! நாம் இருவர் அல்ல; அல்லாஹ் எம்முடன் இருக்கின்றான்!" என ஆறுதல் கூறினார்கள். இதுதான் 'தவக்குல்'. முடிந்தவரை-மனித சக்திக்குட்பட்ட வரை முயற்சி செய்ய வேண்டும். முடிவை அல்லாஹ்வின் கையில் ஒப்படைக்க வேண்டும்.

இதை விட்டு விட்டு கவலை மேலோங்கும் போதெல்லாம் கண்ணத்தில் கை வைத்துத் தூங்கிக் கொண்டு, "அல்லாஹ் பார்த்துக்கொள்வான்!" என்று சொல்வது தவக்குல் ஆகாது. இஸ்லாம் இந்தப் போக்கை வன்மையாகக் கண்டிக்கின்றது.

ஒரு இளைஞர் தொடர்ந்தும் மஸ்ஜிதிலேயே இருப்பதை அவதானித்த இரண்டாம் கலீ∴பா உமர்(ரலி) அவர்கள் அந்த இளைஞனிடம், "நீ உனது உணவுத் தேவைக்கு என்ன செய்கின்றாய்?" எனக் கேட்டார்கள். அவனும் "அல்லாஹ் தருகின்றான்!" என்று கூறினான். உடனே உமர்(ரலி) அவர்கள் "வானம் தங்கத்தையோ, பொன்னையோ மழையாகப் பெய்வதில்லை. ஒழுங்காக உழைத்து உண்டு கொண்டு அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்!" என அவனைக் கண்டித்து மஸ்ஜிதிலிருந்து அனுப்பினார்கள்.

எனவே, முயற்சியின்றி முடங்கிக் கிடக்காமல் அல்லாஹ்வின் பொறுப்பில் பாரத்தைப் போட்டு விட்டு உச்சக்கட்ட முயற்சியில் இறங்குங்கள்! அல்லாஹ் துணை நிற்பான் என்ற முழு மனதுடன் முயற்சியுங்கள்! இந்த நம்பிக்கை உங்களுக்கு உங்கள் இரு கரங்களுடன் இன்னுமொரு கரமாகக் கூட வந்து உழைக்கும் உற்சாகமளிக்கும்; உத்வேகம் தரும். அந்த உற்சாகமும், உத்வேகமும் நிச்சயம் உங்களுக்கு வெற்றியளிக்கும். இதோ! குர்ஆனும், ஹதீஸும் கூறும் செய்திகளைக் கேளுங்கள்!

**நம்பிக்கை வைப்போர் அல்லாஹ்வின் மீதே முழுமையாக நம்பிக்கை வைக்கட்டும் (14:11)**

நம்பிக்கை எப்படி வைக்க வேண்டும்? என்பதைப் பற்றி அல்லாஹ் கூறும் போது;

**நீர் உறுதியான முடிவுக்கு வந்து விட்டால் அல்லாஹ்வின் மீது முழுமையாக நம்பிக்கை வைப்பீராக! நிச்சயமாக அல்லாஹ் (தன் மீது) முழுமையாக நம்பிக்கை வைப்போரை நேசிக்கின்றான். (3:159)**

இந்த வசனம் ஒரு விடயத்தில் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியாக முடிவு எடுத்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து காரியமாற்ற வேண்டும் என்று கூறுகின்றது.

எவர் அல்லாஹ்வின் மீது முழுமையாக நம்பிக்கை வைக்கின்றாரோ அவருக்கு அவனே போதுமானவன். (65:3)

வந்த சோதனைகள், வேதனைகள், நஷ்டங்கள், கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள் இவைகளுக்கு மட்டுமல்ல; ஒரு சோதனை வரப்போகின்றது என்ற அச்ச நிலை இருந்தாலும் அல்லாஹ்வின் மீது தவக்குல் வைப்பதுதான் மன அமைதிக்கு அருமருந்தாகும்.

இப்றாஹீம்(ﷺ) அவர்களை எதிரிகள் நெருப்புக் குண்டத்திற்குள் போட்ட போது, "எமக்கு அல்லாஹ் ஒருவனே போதுமானவன்! அவனே பொறுப்பாளர்களில் சிறந்தவனாவான்!" என்று கூறினார்கள். (இப்னு அப்பாஸ்(ரலி), புகாரி)

மதீனத்து முஸ்லிம்களைப் பூண்டோடு அழித்து விட வேண்டும் என்ற வெறியுடன் மதீனாவை நோக்கிப் பத்தாயிரம் கொலை வெறியர்கள் வந்துகொண்டிருந்தனர். இந்த அச்சமும், பீதியும் கொண்ட செய்தி அன்றைய முஸ்லிம்களை அணுவளவும் ஆட்டம் காணச் செய்யவில்லை.

"நிச்சயமாக மக்கள் உங்களுக்கு எதிராகத் திரண்டு விட்டனர். எனவே, அவர்களை நீங்கள் பயந்துகொள்ளுங்கள்" என மனிதர்களில் சிலர் அவர்களுக்குக் கூறவே, அது அவர்களுக்கு நம்பிக்கையை மேலும் அதிகப்படுத்தியது. இன்னும், "அல்லாஹ்வே எமக்குப் போதுமானவன். அவனே பொறுப்பாளர்களில் சிறந்தவனாவான்" என்றும் கூறினர். அவர்களுக்கு எந்த ஒரு தீங்கும் நேராமலேயே அல்லாஹ்வின் அருளையும், பாக்கியத்தையும் பெற்று அவர்கள் திரும்பினர். மேலும், அல்லாஹ்வின் பொருத்தத்தையும் பெற்றுக் கொண்டார்கள். அல்லாஹ் மகத்தான அருளுக்குரியவன். (3:173-174)

அவர்களின் இந்தத் தவக்குல் அவர்களைக் கை விடவில்லை. அவர்கள் என்ன செய்வது என்று ஆலோசித்தனர். 10,000 பேர்களை எதிர்கொள்ளும் படைப் பலம் இருக்கவில்லை. எனவே, அறிவு பலத்தை வைத்து மதீனாவின் இயற்கைச் சூழலையும் ஆய்வு செய்து எதிரிகள் மதீனாவுக்கு உள்ளே நுழைய முடியாவண்ணம் ஆழமான அகலமான அகழி தோண்டினர். மதீனாவுக்கு வந்த எதிரிகள் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அந்த அகழியை எவரும் கடந்து வராவண்ணம் முஸ்லிம் அம்பு வீரர்கள் காவல் காத்துத் தற்காப்புப் போர் செய்தனர். காஃபிர்கள் முஸ்லிம்களை முற்றுகையிட்டு அவர்களை வழிக்குக் கொண்டு வரும் திட்டத்தில் முற்றுகையை நீட்டினர். அப்போது அல்லாஹ்வின் புறத்திலிருந்து உதவி வந்தது. பயங்கரமான காற்றும் மழையும் தொடர்ந்து வீசிக் கொலை வெறியர்கள் வந்த வழியே திரும்பிச் செல்லும் நிலையை ஏற்படுத்தியது. இதுதான் தவக்குலின் வெற்றி!

எனவே, சோதனைகள் வரும் போது,

حسبي الله ونعم الوكيل

'ஹஸ்பியல்லாஹு வ நிஃமல் வகீல்' (எனக்கு அல்லாஹ் ஒருவனே போதுமானவன்; பொறுப்புச் சாட்டப்படுவோரில் அவனே மிகவும் சிறந்தவன்) என்ற (கருத்துள்ள வாசகத்தை) உறுதியாக உள்ளத்தில் நிறுத்திப் பிரச்சினையை எதிர்கொள்ளுங்கள்! அல்லாஹ் உதவுவான்!

"நீங்கள் அல்லாஹ்வின் மீது தவக்குல் வைக்க வேண்டிய முறையில் தவக்குல் வைத்தால் பறவைகளுக்கு வாழ்வாதாரம் அளிப்பது போல் அவன் உங்களுக்கும் வாழ்வாதாரத்தை அளிப்பான். அவை காலையில் வெறும் வயிற்றுடன் கூட்டை விட்டுச் சென்று மாலையில் நிரம்பிய வயிற்றுடன் கூட்டிற்கு வருகின்றன" என நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

(இப்னு உமர்(ரலி), திர்மிதி)

அல்லாஹ்வின் நம்பிக்கை வைத்தால் அவன் கைவிட மாட்டான். அதே நேரம் மனித முயற்சியும் அவசியமாகும். அந்தப் பறவைகள் கூட்டிலேயே தூங்கிக் கிடப்பதாக ஹதீஸ் கூறவில்லை. அவைகளும் காலையில் உணவு தேடிச் சென்று உழைத்துக் கொண்டுதான் வருகின்றன என்பது கவனத்தில் கொள்ளத் தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முஸ்லிமின் முழு வாழ்வும் அல்லாஹ்வின் மீது தவக்குல் கொண்டதாக இருக்க வேண்டும் என இஸ்லாம் போதிக்கின்றது.

நபி(ﷺ) அவர்கள் தனது வீட்டை விட்டும் வெளியேறினால்...

بِسْمِ اللّٰهِ ، تَوَكَّلْتُ عَلَى اللّٰهِ ،
لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَا بِاللّٰهِ

என்று ஓதி விட்டுச் செல்வார்கள்.

பொருள்:- அல்லாஹ்வின் பெயரால் வெளியே செல்கிறேன். அவன் மேலே நம்பிக்கை வைக்கிறேன். நன்மை ஒன்றைச் செய்திடவோ, தீமை ஒன்றைத் தவிர்ந்திடவோ அவன் மூலமன்றி (எனக்கு) முடியாது.

(நூற்கள் : திர்மிதி, அபூதாவுத்)

இவ்வாறே எவரேனும் வீட்டை விட்டும் வெளியேறும் போது...

بِسْمِ اللّٰهِ ، تَوَكَّلْتُ عَلَى اللّٰهِ ،
لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَا بِاللّٰهِ

என்று கூறினால், அவருக்கு " நேர்வழி பெற்று விட்டால் இது உனக்குப் போதுமாகி விட்டது. நீ பாதுகாப்புப் பெற்று விட்டாய்" என்று கூறப்படும். ஷைத்தான் அவனை விட்டும் விலகி விடுவான் (ஹதீஸின் கருத்து).

(அனஸ்(ﷺ), அபூதாவூத், திர்மிதி, நஸஈ)

இவ்வாறே தூங்கச் செல்லும் போது...

اَللّٰهُمَّ أَسْلَمْتُ وَجْهِيْ إِلَيْكَ وَفَوَّضْتُ أَمْرِيْ إِلَيْكَ
وَأَلْجَأْتُ ظَهْرِيْ إِلَيْكَ رَغْبَةً وَرَهْبَةً إِلَيْكَ لَا مَلْجَأَ
وَلَا مَنْجَا مِنْكَ إِلاَّ إِلَيْكَ اَللّٰهُمَّ آمَنْتُ بِكِتَابِكَ الَّذِيْ
أَنْزَلْتَ وَبِنَبِيِّكَ الَّذِيْ أَرْسَلْتَ.

பொருள்:- இறைவா! என் முகத்தை உனக்குக் கட்டுப்படச் செய்து விட்டேன். என் காரியத்தை உன்னிடம் ஒப்படைத்து விட்டேன். என் முதுகை உன் பக்கம் சாய்த்து விட்டேன். (உனது அருளில்) நம்பக்கை வைத்து விட்டேன். (உனது தண்டனைக்கு) அஞ்சி விட்டேன். உன்னை விட்டும் தப்பிக்க உன்னிடம் வேறு ஏதும் இடம் இல்லை. இறைவா! நீ அருளிய வேதத்தையும், நீ அனுப்பிய வேதத்தையும் நம்பினேன்.

(புகாரி 247)

என நமது காரியங்கள் அனைத்தையும் அல்லாஹ்விடம் ஒப்படைக்கும் துஆவை ஓதுமாறு நபி(ﷺ) அவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள்.

இவ்வாறு ஓதி விட்டு ஒருவர் உறங்கும் போது மரணித்து விட்டால் தூய இஸ்லாத்தில் இறப்பதாகவும், காலையை அடைந்தால் நன்மைகளை அடைந்துகொள்வதாகவும் நபி(ﷺ) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(பரா.ஃ. இப்னு ஆஷிப்(ﷺ) - புகாரி, முஸ்லிம்)

எனவே முழு வாழ்விலும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து எமது பொறுப்புக்களை அவன் மீது பாரம் சாட்டி கரிசனையுடன் காரியமாற்றினால் வெற்றி நிச்சயம்.

இது வேத சத்தியம்!
உள்ளத்தின் வேதனைகள் அகலும்!
உங்களாலும் சாதனைகள் நிகழும்!

யானையின் பலம் தும்பிக்கையில் என்றால், உங்களின் பலம் இந்த நம்பிக்கையில்தான் என நம்புங்கள்!

கவலைகள் களையட்டும்!

கனவு உலக வாழ்வும் கண்ணீர் சிந்தும் கண்களும் ஓயட்டும்!

அல்லாஹ்வின் மீதுள்ள நம்பிக்கையுடன் உழையுங்கள்! உயருங்கள்! உங்கள் உள்ளம் அமைதி பெறும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்க்கதியான கொலையாளிகளும் நிபந்தனையுடனான விடுதலையும்

கடந்த 2009.07.24 ஆம் திகதி மஹகொட மஸ்ஜிதுர் ரஹ்மான் ஜும்ஆப் பள்ளிவாசலைத் தாக்கி, குர்ஆன் பிரதிகளை எரித்து, பதினொரு பேர்களைப் படுகாயப்படுத்தி, இருவரை மிருகத்தனமாகக் கொலை செய்த சம்பவத்தில் 4 மாதங்கள் சிறை வைத்து அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்பட்ட 69 நபர்களைக் களுத்துறை உயர் நீதிமன்றம் கீழ்க் காணும் நிபந்தனையின் கீழ் 23.11.2009 திங்கட்கிழமை அன்று விடுதலை செய்துள்ளது.

1. மாலை 6.00 மணி முதல் காலை 6.00 மணி வரை நீதிமன்ற அனுமதியின்றி வீட்டை விட்டு வெளியேறக் கூடாது. சுகவீனம் அல்லது குடும்பத்தினர் அவசர தேவைகளுக்கு மட்டும் வெளியில் செல்ல முடியும்.
2. இவ்வழக்கின் விசாரணை முடியும் வரை பிரதேசத்தில் எவ்விதப் பிரச்சினைகளும் உருவாக்காமலும் சாட்சியாளர்களுக்குத் தொல்லை கொடுக்காமலும் இருக்க வேண்டும்.
3. இரு வாரங்களுக்கு ஒரு முறை ஞாயிறு மு.ப. 9.00 மணி முதல் பகல் 1.00 மணிக்கிடையில் தாங்கள் வசிப்பதைப் பொலீஸ் நிலையத்தில் உறுதிப்படுத்த வேண்டும்.
4. ஒவ்வொரு சந்தேக நபரும் ரூபா. 10,000.00 ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
5. ரூபா. 2,50,000.00 உடற்பிணை செலுத்த வேண்டுமென கட்டளையிடப்பட்டுள்ளது. மாதாந்தம் ரூபா. 25,000.00 வருமானம் பெறும் நபர் மட்டுமே உடற்பிணைக்குத் தகுதி பெறுவார். சந்தேக நபர்களும், உடற்பிணையாளர்களும் கிராம சேவையாளர் சான்றிதழுடன் அவை பிரிவக செயலாளரால் மேலும் உறுதிப்படுத்தப்பட்டு, இந்த நபர்கள் குறிப்பிட்ட முகவரியில் நிரந்தர பிரஜைகள் எனவும் அவர்களின் புகைப்படப் பிரதிகளும் இத்திகதியில் இருந்து இரண்டு வாரங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. சந்தேக நபர்கள் தங்களின் கடவுச் சீட்டை நீதிமன்றப் பதிவாளருக்கு உடனடியாகச் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் நீதிமன்றப் பதிவாளர் குடிவரவு-குடியகல்வுப் பணியகத்திற்குச் சந்தேக நபர்களை வெளிநாட்டுப் பயணத்திற்குத் தடை விதிக்கும் படி கோருவார். மேலும், சந்தேக நபர்களின் பெயர் விபரங்களைக் குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்திற்கு இவ்வழக்கின் விசாரணை முடியும் வரை கடவுச்சீட்டை வழங்க வேண்டாம் எனக் கோருவார். கடவுச்சீட்டு இல்லாத சந்தேக நபர்கள் இவர்களிடம் கடவுச்சீட்டு இல்லையெனச் சத்திய பெடிஷன் பதிவாளர் வசம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**4 மாதங்கள் சிறைவைக்கப்பட்டு மேல் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்ட 69 நபர்களின் பெயர் பட்டியல் பின்வருமாறு:-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. Noordeen Razeel Ahamed Mohideen
No. 16/14, Nabaviyyah Mawatha,
Mosque Road, Beruwela.

2. Mohamed Jameel Mohamed Naseer
No. 14/1, N.M. Zain Mawatha,
Beruwela.

3. Mohamed Zawahir Mohamed Rilwan
No. 41, Samad Mawatha, Massala,
Beruwela.

4. Mohamed Jabir Mohamed Riskan
No. 132/1A, Abdul Rasak Hajiar
Mawatha,
Henawatta, Beruwela.

5. Mohamed Nouman Mohamed Ishak
No. 91/1, Old Road, Beruwela.

6. Mohamed Usuf Abdul Cader
No. 38/9, Mosque Road, Beruwela.

7. Mohamed Samsudeen Mohamed Nasir
No. 35, Mosque Road, Beruwela.

8. Mohamed Lafir Mohamed Hassan
No. 38/5, Mosque Road, Beruwela.

9. Mohamed Anwar Mohamed Miflan
No. 24/1,Henawatta, Beruwela.

10. Mohamed Shafy Mohamed Feroze
No. 26/12, Mosque Road, Beruwela.

11. Mohamed Usman Mohamed Bishrul
Hafi
No. 216/3, Old Road, Beruwela.

12. Mohamed Naseem Mohamed Aswer
Khan
No. 66, Mosque Road, Beruwela.

13. Mahamood Hussain Mohamed Rihan
No. 132/1,Maligahena,
Henawatta, Beruwela.

14. Mohamed Ismai Mohamed Navavi
No. 137/16, Old Road, Beruwela.

15. Mohamed Shafi Mohamed Irshad
No. 5/1, Palace Path, Beruwela.

16. Mohamed Shaheed Mohamed
No. 38/4, Mosque Road, Beruwela.

17. Mohamed Naim Mohamed Aamir
No. 132/1,Maligahena,
Henawatta, Beruwela.

18. Abdul Cader Mohamed Anas
No. 70/2, Chairman Mawatha,
Beruwela.

19. Mohamed Lafar Mohamed Nilfer
No. 92/1, Old Road, Beruwela.

20. Mohamed Makbool Mohamed Suhail
No. 5/2, Temple Road, Beruwela.

21. Mohamed Nakeem Mohamed Rifan
No. 216/5, Old Road, Mahagoda,
Beruwela.

22. Mohamed Jawfer Mohamed Sirajudeen
No. 38/3, Mosque Road, Beruwela.

23. Mohamed Nizam Mohamed Nizer
No. 45/12, Samad Mawatha, Beruwela.

24. Mohamed Marzook Mohamed Fazeel
No. 35/A, Mosque Road, Beruwela.

25. Mohamed Shareef Mohamed Rifath
No. 51, Mosque Road, Beruwela.

26. Mohamed Hussain Mohamed Shafraz
No. 26/37, Mosque Road, Beruwela.

27. Mohamed Sanoon Mohamed Nafas
No. 5/1, Palace Path, Beruwela.

28. Mohamed Najibdeen Mohamed Rasian
No. 19, Housing Scheme, Old Road,
Beruwela.

29. Mohamed Fairooz Mohamed Shaheed
No. 38/4, Mosque Road, Beruwela.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. Najeebdeen Mohamed Najaad
No. 110/7, Jayasindara Mawatha,
Kalutara South.

31. Pakeer Mohamed Mohamed Rimzan
No. 71/2, Mosque Road, Beruwela.

32. Abdul Sameem Mohamed Salman
No. 38/2, Mosque Road, Beruwela.

33. Mohamed Suhail Abdul Cader
No. 106, Old Road, Beruwela.

34. Ahamed Faleel Mohamed Siraj
No. 185, Old Road, Mahagoda, Beruwela.

35. Mohamed Nasar Mohamed Safwan
No. 8/1, Palace Path, Beruwela.

36. Mohamed Abdul Hafeel Mohamed Ismath
No. 45/12, Samad Mawatha,
Massala, Beruwela.

37. Mohamed Naseer Mohamed Casim
No. 14, Palace Path, Beruwela.

38. Mohamed Aneez Mohamed Munthaz
No. 5/7, Temple Road, Massala,
Beruwela.

39. Mohamed Usman Mohamed Zubair
No. 216/5, Old Road, Beruwela.

40. Mohamed Shafi Mohamed Nawas
No. 26/37, Mosque Road, Beruwela.

41. Mohamed Ismail Mohamed Risan
No. 137/6, Old Road, Beruwela.

42. Mohamed Thahir Mohamed Nushan
No. 71/10A, Pathmasiri Perera
Mawatha,
Temple Road, Beruwela.

43. Mohamed Zawahir Mohamed Najimudeen
No. 16, Mosque Road, Beruwela.

44. Siriuk Sithy Mohamed Silmy
No. 26/37, Mosque Road, Beruwela.

45. Mohamed Buhary Mohamed Arshad
No. 26/13, Mosque Road, Beruwela.

46. Mohamed Usuf Mohamed Sally
No. 14/15K, Nabaviyya Mawatha,
Beruwela.

47. Pakeer Mohamed Mohamed Rishan
No. 26/37, Mosque Road, Beruwela.

48. Mohamed Anwer Mohamed Shafan
No. 26/37, Mosque Road, Beruwela.

49. Mohamed Munawwar Mohamed Riyaz
No. 48/12A, Mosque Road, Beruwela.

50. Mohamed Hussain Mohamed Ibrahim
No. 51/1, Zavia Lane, Mahagoda,
Beruwela.

51. Mohamed Sarook Mohamed Imran
No. 44/1, Mosque Road, Beruwela.

52. Mohamed Cassim Mohamed Ramzan
No. 91/1, Old Road, Beruwela.

53. Abdul Cader Mohamed Asam
No. 29B, Mosque Road, Beruwela.

54. Mohamed Mazahim Mohamed Nafaizer
No. 29/3, Thakkiya Road, GALLE.

55. Abdul Hameed Mohamed Mansoor
No. 59, Circular Road, Galle.

56. Mohamed Larif Mohamed Niyas
No. 43, Thenkalagoda Road, Makuluwa,
Galle.

57. Mohamed Suhail Mohamed Osama
No. 19/2, Thakkiya Road, Galle.

58. Mohamed Cafoordeene Mohamed Mohideen
No. 82/2B, Bope Road, Dadalla, Galle.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. Mohamed Siddeeque Mohamed Shiyam
No. 120, Thakkiya Road, Thalapitiya
Galle.

60. Mohamed Nisar Mohamed Sahlan
No. 103, Kong Tree Street, Galle.

61. Mohamed Ahiyar Mohamed Naushar
No. 8/6, Thakkiya Lane, Thalapitiya
Galle.

62. Mohamed Jifry Mohamed Iflal
No. 38, Thakkiya Road, Thalapitiya,
Galle.

63. Najmul Hussain Mohamed Sulaim
No. 57/6, Abdul Wahab Mawatha,
Thalapitiya, Galle.

64. Mohamed Anwer Mohamed Nufail
No. 22/3A, Thakkiya Road, Thalapitiya,
Galle.

65. Mohamed Niyas Mohamed Aflal
No. 34/4, Thakkiya Road, Thalapitiya,
Galle.

66. Mohamed Arif Mohamed Irshad
No. 48, Abdul Wahab Mawatha,
Thalapitiya, Galle.

67. Mohamed Rafi Mohamed Rimzan
No. 19/19, Thakkiya Road, Thalapitiya,
Galle.

68. Ahmed Faleel Abdul Rahaman
No. 186C, Walawwatta, MALWANA.

69. Mohamed Naeem Mohamed Roshan
No. 118, Aluthgama,
Meegahamulla. BANDARAGAMA.

**இன்னும் 70 பேர் சிறையிலிருந்து விடுதலை பெறாத நிலையில் உள்ளனர்.**

இப்படிக்கு,
மஸ்ஜிதுர் ரஹ்மான் நிருவாக சபையும்,
ஜமாஅத் அங்கத்தவர்களும்.

(42 ம் பக்கத் தொடர்ச்சி..........)

அடுத்ததாக, அண்மையில் சந்தைக்கு வந்த சீனா தயாரிப்பான செல்.ஃபோன் குரலை மாற்றிப் பேசும் தொழில் நுட்பத்தைக் கொண்டுள்ளது. ஒரு ஆண், பெண் குரலில் பேச வேண்டும் என்றால் அவன் எவ்வித சிரத்தையுமின்றி இயல்பான குரலில் பேசலாம். அது அடுத்த தரப்பாருக்கு இந்தத் தொழில் நுட்பம் காரணமாக பெண் குரலில் கேட்கும். தன்னிடம் ஒரு பெண் பேசுகின்றாள் என்ற நினைப்பில் எதிர்த் தரப்பிலுள்ள பெண் பாலியல் சமாச்சாரங்களையோ தனது அந்தரங்க விவகாரங்களையோ பேசினால் அதை அவர்கள் பதிவு செய்து வைத்துக் கொண்டு தவறாகப் பயன்படுத்தலாம்.

எனவே, யார்? எவர்? என்ற விபரம் தெரியாத அழைப்புக்களுக்கு விழுந்தடித்துக் கொண்டு பதில்ளிக்கத் தேவையில்லை. தேவையான தகவலைக் கூறி விட்டுத் தொடர்பைத் துண்டித்து விடுங்கள்.

இந்தத் தொலைபேசி மூலம் ஆண்களே ஆண்களுடன் பெண் குரலில் பேசி அதை ஆபாசமாக மாற்றிப் பணம் பறிக்கும் முயற்சியிலும் ஈடுபடுகின்றனர்.

சில பெண்கள் தமது தொலை பேசியை மீள்நிரப்பும் போது (reload) அந்த இலக்கத்தை communication book இல் பதிவு செய்ய நேரிடுகின்றது. இவ்வாறு இளவயதுப் பெண்கள் மீள்நிரப்பும் போது அந்த இலக்கத்தைக் குறித்து வைத்துக் கொண்டு கடையில் பணி புரிபவரோ, அவரது நண்பர்களோ அந்த இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்திப் பெண்களை ஏமாற்றும் முயற்சியிலும் இறங்குகின்றனர். எனவே பெண்கள் இதிலும் கவனமும், கரிசனையும் காட்ட வேண்டியுள்ளது.

எனவே, செல்.ஃபோன் பாவிக்கும் பெண்கள் உஷாராக இருக்க வேண்டும். பெற்றோர்களும் பிள்ளைகளின் நடவடிக்கைகள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டும். காலமும், சூழலும் வயதும் அவர்களை வரம்பு தாண்டும் நிலைக்கு உள்ளாக்கி விடாமல் தற்பாதுகாப்பு அரணாகப் பெற்றோர்கள் திகழ வேண்டும். அவர்கள் யார் யாருடன் எதற்காக எவ்வளவு நேரம் தொடர்புகொள்கிறார்கள்? அவர்களுடன் தொடர்புகொள்வது யார்? என்ற அவதானத்துடன் செயல்பட வேண்டும். அறிவியல் தந்த இந்த நவீன சாதனங்களை ஆக்க வழியில் பயன்படுத்த வேண்டும். அழிவு வலையில் வீழ்ந்திடக் கூடாது என்ற விழிப்புணர்வு அவசியம். இல்லையென்றால் பரிதவிப்பும், அமைதியிழப்பும் நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயத்தின் போட்டி

இல : 97

01) அல்குர்ஆனின் 78 ஆவது அத்தியாயத்தின் பெயர் என்ன?
02) 'நபிமார்களின் தந்தை' என அழைக்கப்பட்ட நபி யார்?
03) குழந்தை பிறந்து ஏழாம் நாள் நிறைவேற்ற வேண்டிய குர்பானின் பெயர் என்ன?

(இக்கேள்விகளுக்கான விடைகள் இவ்விதழிலேயே இருக்கின்றன)

விடைகளைத் தபால் அட்டையில் மாத்திரம் எழுதி போட்டிக்கூப்பனையும் அதனுடன் இணைத்து 2009 பெப்ரவரி 15ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

**உதயத்தின் போட்டி 95ல் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள்**

01. அதீக் இப்னு ஆயித், ஹிந் இப்னு சுராரா
02. அத்தியாயம் -112 (அல் இக்லாஸ்).
03. இஹ்ராம், தவாப், ஸஃயு, அரபாவில் தரித்தல்.

## போட்டி இல. 95 இல்

## பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு: | இரண்டாம் பரிசு: | மூன்றாம் பரிசு: |
|---|---|---|
| **A.S.F. ரிஸ்னியா**<br>குருமட<br>பாணகமுவ | **M.J. சஹ்ரா**<br>தல்கஸ்பிடிய<br>அம்பகொடே. | **சிபானா சைபுல்லா**<br>புதுக்குடியிருப்பு<br>பதுலு-ஓயா |

### பாராட்டுப் பெறுவோர்

01. பவ்ஸானா இமாம்தீன். மடவல பஸார்.
02. A. சல்ஹினா. சாலம்பபுர. ரம்பாவ.
03. A.M.M. அஸ்லம். ஹிஜ்ரா வீதி. அக்கரைப்பற்று.
04. முஹம்மத் ரிபாத். யாலகம. நாப்பாவளை.
05. சிபானா காஸிம். மடிகே அனுக்கன. சுனந்தபுர.
06. M.N.F நஸ்ரினா. அம்பலன்துவ. பாணதுர.
07. S.M.M இல்யாஸ். பல்லேவெலிகெடிய. அகுரனை.
08. H.F. சுஜானி. ஆலன்குளம். கெபிதிகொல்லாவ.
09 A.F. நுஸ்ரத். குமுக்கந்துர. ரஜவெல்ல.
10. M.H.F. சித்தி நஸீரா. பதுளுபிடிய. பதுளை.

இவர்கள் அனைவருக்கும் "உண்மை உதயம்" இஸ்லாமிய மாத இதழ் அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகத்துவ முழக்கம்

அபூ ஹாதிம்

ஓங்கட்டும்
ஏகத்துவ முழக்கம்
ஒழியட்டும்
தனி மனித வழிபாடு
மாறட்டும்
இந்த பூமி
ஏகத்துவ மாதாவாய்
- - - - - - - - - - - - -

அடித்தது சாவு மணி
வெடித்தது ஷிர்க்கின் ஓசை
வியாபித்தது ஏகத்துவம்
வீழ்ந்தது
மயானத்தை நோக்கி
தக்லீது
- - - - -

பித்அத்
வழிகேட்டின் மறுபிறவி
அது
நரகத்தின் முகவரியும் கூட!
தரீக்கா வழிபாடு
நரகக் காகிதத்தில்
ஒட்டப்பட்ட
முத்திரை போல
- - - - - - - - - - -

ஏகத்துவம்
சூரியன் போல
அதன் வல்லமை!
பித்அத்தை எரித்து விடும்
ஷிர்க்கை தகர்த்து விடும்
முட்டாள் தனம்
அதன் தணலை
சருகால் மூட நினைப்பது
- - - - - - - - - - - - - - - -

ஏகத்துவம்
சுவனத்தை நோக்கிய
பாதை - அது
நரகத்தின்
தடுப்புச் சுவர்
- - - - - - - - -

ஏகத்துவம்
மரணத்தை வென்ற
மாவீரன்
எரிமலையைக் கூட
பனி மலையாக்கும்
பாரிய சக்தி
அதற்குள்

ஏகத்துவம்
அணையாத தீபம்
பிரகாசிக்கும்

அதன் மூலம்
இந்தப் பிரபஞ்சம்
சுவாசிக்கும்
அதன் தென்றலை
இந்த மானிட வர்க்கம்
- - - - - - - - - - - - -

ஏகத்துவம்
றஸூல்மார்கள் பயணித்த பாதை
நபிமார்கள்
விதைத்த வேளாமை
ஸூஹதாக்கள்
வாழ்ந்த கோட்டை
ஸஹாபாக்கள்
சங்கமித்த சமுத்திரம்
ஸாலிஹீன்கள்
ஏறிச் சென்ற பேருந்து
- - - - - - - - - - - - - -

ஏகத்துவம்
இறைவன் வகுத்த
பாதை
அதன் தேடலே
மனித குலத்தின்
தாயகமாய்
சுவாசிக்கட்டும்
இந்த பூமி
ஏகத்துவ வாடையை
- - - - - - - - - - - -

ஏகத்துவ
சரீரங்கள்
எரிக்கப்பட்டன.
இல்லங்கள்
உடைக்கப்பட்டன.
உறுப்புக்கள்
சிதைக்கப்பட்டன.
பள்ளிகள்
இடிக்கப்பட்டன.
சொத்துக்கள்
சூரையாடப்பட்டன.
இவை
எமது சிந்தைகளில்
நீறு பூத்த நெருப்பாய்
நெஞ்சமிருக்கும் வரை!

Registered as a News Paper in Sri Lanka Registered in the Department of Post of Sri Lanka under QD/129/News/2009

Tel: 066-2240076

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org